www.tamilarangam.net

* EPDR சம்பந்தமான கட்டுரை !

அன்பளிப்பு 40P


# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 13-08-1993

உள்ளே.........


- விழுதுகள் - லெப். அன்பழகன்
- சிறுகதை - விழிகள் திறக்கின்றன
- தோட்டாவிலிருந்து விமானம் வரை
- ஈ. பி. டி. பியும் சிங்களவர்களும்
- ஒரு முன்னாள் டி. ஐ. ஜியின் ஒப்புதல் வாக்குமூலம்
- வடகொரியாவின் அணுவாயுத அரசியல்


## பற்று



"நீங்கள் முன்னால போங்கோ, நான் பின்னால வருவன்"

கரும்புலியாகச் செல்கின்ற புலிவீரர்களுக்கு தலைவர் அவர்கள் கடைசியாக இப்படித்தான் சொல்லி வழியனுப்பி வைப்பார்.

இது வெறுமனே அவரது வாயில் இருந்து வருகின்ற வார்த்தையல்ல: அந்த மாபெரும் தலைவரின் ஆத்மாவில் இருந்து எழும் குரல் அது.

"உண்மையிலேயே என்றோ ஒருநாள் இதுதான் நடக்கும்" என்று உறுதியோடு தன்னுள் சொல்லி நிற்பவர் எம்தலைவர்.

கரும்புலி நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளச் செல்கின்ற எங்கள் தேசத்தின் குழந்தைகள் அதற்குப் போவதற்கு முன்னதாக ஒரு நாளில் தலைவர் அவர்கள் தனது பொழுதுகளை அவர்களுடன் கழிப்பார். இதனை அவர் எப்போதும் செய்வதுண்டு. இப்படித்தான் கடலில் நாம் நடாத்திய முதலாவது கரும்புலித் தாக்குதலை நிறைவேற்றிய கடற்புலி வீரர்களான காந்தரூபன், கொலின்ஸ், வினோத் ஆகியோர் முதல் நாளை தலைவர் அவர்களுடன் கழித்தார்கள்.

இவர்கள் நெஞ்சைத் திறந்து பழகினார்கள். எல்லாவற்றையும் பற்றிக் கதைத்தார்கள். பகிடிகள் சொல்லிச் சொல்லிச் சிரித்து மகிழ்ந்தார்கள். தலைவரோடு ஒன்றாக இருந்து சுவைத்துச் சாப்பிட்டார்கள். அவரோடு சேர்ந்து நின்று விதம் விதமாகப் படம் எடுத்தார்கள். தங்களது உள்ளக் கிடக்கைகளையெல்லாம், உணர்வுகளையெல்லாம் பகிர்ந்து கொண்டார்கள்.

கடைசியில் தலைவரிடம் இருந்து அவர்கள் விடைபெறுகின்றபோது சோகம் கலந்த பெருமிதத்தோடு அவர்களைக் கட்டியணைத்து வழியனுப்பி வைக்கையில் அந்தத் தலைவனின் குரல் உறுதியோடு ஒலித்தது.......

"நீங்கள் முன்னால போங்கோ, நான் பின்னால வருவன்"

தலைவரிடம் இருந்து விடை பெற்றுக் கொண்டு வெளியில் வந்தவுடன் அங்கு நின்ற நண்பன் ஒருவனிடம் காந்தரூபன் சொன்னான்,

"இவர் வரவேணும் என்பதற்காகவா மச்சான் நாங்கள் போறம்? "

அவ்வளவுக்கு உரமேறிய உள்ளங்கள். ■

# விரைவில் குடா நாட்டின் மேல் தாக்குதல்

## ☆ விமானப்படை நவீனப்படுத்தப்படுகிறது

## ☆ ஆயுத இறக்குமதி துரிதப்படுத்தப்படுகிறது

யாழ் குடா நாட்டின் மீது மீண்டும் ஒரு பாரிய இராணுவத் தாக்குதலை தொடங்குவதற்கான ஆயத்தங்களில் சிறீலங்கா அரசாங்கமும் ஆயுதப்படைகளும் வேகமாக ஈடுபட்டு வருகின்றன.

விமானப்படையை நவீனமயப்படுத்தி வான்வெளித் தாக்குதலால் தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க வேண்டுமென எண்ணும் சிறீலங்கா அரசாங்கம், இதனைப் பூர்த்தி செய்யும் முகமாக விமானப்படையைப் பலப்படுத்துவதில் அதிக அக்கறை காட்டுகிறது. ஆனையிறவில் புலிகளால், வை -8 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதன் பின்னர், படையினர் இடம்பெயர்வதற்கும் சப்ளைகளை வழங்குவதற்கும் விமான வசதியின்றி விமானப் படை தடுமாறுகிறது. இதனை ஈடுசெய்யும் முகமாக இரண்டே கால் கோடி டொலர் செலவில் ரஸ்யாவில் இருந்து, மூன்று எம். ஐ. 8 ரக விமானங்களை சிறீலங்கா கொள்வனவு செய்கிறது. அதேவேளை சில மாதங்களுக்கு முன்னர் ரஸ்யாவில் இருந்து இதே ரக உலங்குவானூர்திகள் மூன்றை சிறீலங்கா பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

மேலும், சீனாவிடம் இருந்து சிறீலங்கா அரசாங்கம் ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளில் வேகமாக ஈடுபட்டு வருகின்றது. இவ்வாயுதங்களை விரைவில் பெறுவதற்கென சிறீலங்கா அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று கொழும்பிலிருந்து சீனா செல்ல இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.




கரும்புலிகள் ☐
சிறப்புக் கட்டுரைகள் உள்ளே

### பெரும்தோல்வி

இதற்கிடையில், சிறீலங்கா இராணுவத்தின் மணலாற்றிற்கான ஆயுத விநியோகத்தில் முக்கிய பங்கினை வகித்த மண்கிண்டி இராணுவ முகாம், விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டதை சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடம் பெரும் தோல்வியென ஏற்றுக் கொண்டுள்ளது. மண்கிண்டி இராணுவ முகாம் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் இராணுவ மதிநுட்பம் மீண்டும் நிருபிக்கப்பட்டதனால் சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளிடையே மனப்பீதியும், சோர்வும் தலைதூக்கியுள்ளது. இதனால், ஒரு பாரிய தாக்குதல் ஒன்றுக்கு படைகளை வழிநடத்தி உற்சாகம் ஊட்டும் முயற்சிகளில் சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடம் இறங்கியுள்ளது. இராணுவத் தலைமை அதிகாரி ஜெரி சில்வாவைத் தலைவராகக் கொண்டு நந்தாடி சில்வா, சிறீ பீரிஸ், சிசிர விஜயசிங்க ஆகிய இராணுவப் பிரிகேடியர்களை உள்ளடக்கிய நால்வர் குழுவொன்று மண்கிண்டி இராணுவ முகாம் வீழ்ச்சியுற்ற விதத்தை ஆராய்ந்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த பத்தாண்டு கால வரலாற்றில் எழுபது மில்லியன் ரூபா ஆயுதங்களையும் மூன்று இராணுவ முகாம்களையும் ஒரே நேரத்தில் இழந்தமை இதுவே முதல் தடவை என அவர்கள் கருதுகின்றனர். அதேவேளை புத்தளத்தில் உள்ள இலவன்குளம் கிராமத்தில் பொலிசாரைத் தாக்கி பத்துப் பொலிசாரை அழித்து ஆயுதங்களை அள்ளிச் சென்ற விடுதலைப் புலிகளின் தாக்குதலால், சிறீலங்கா இராணுவத்தின் எதிர்பார்ப்பு திசை மாற்றப்பட்டதாகவும் புத்தளத்தில் இருந்து புலிகளின் தாக்குதல் மணலாறுக்கு திடீரென திசை மாறும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை எனவும், புலிகளின் தாக்குதல் ஒத்திகைகளை தங்களால் பத்தாண்டு போரிட்டும் ஒரு பொழுதும் முன்னுணர முடியாது உள்ளதாகவும் இராணுவத்தினர் கருதுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பழிவாங்கல் நடவடிக்கை

அவமானகரமான தோல்விகளைச் சந்திக்கும் சிறீலங்கா கூட்டுப்படைகள், பழிவாங்கல் நடவடிக்கைகளாக அப்பாவிப் பொதுமக்களையும், பொதுமக்கள் குடியிருப்புக்களையும் தாக்குவது வழமையான ஒன்று. இதன் அடிப்படையில் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பயணிகளை கிளாலி கடலேரியில் வைத்து

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# கைது செய்த குடியேற்றவாசிகளை விடுதலைப்புலிகள் விடுவிப்பு

சமீபத்தில் நடந்த மணலாறு தாக்குதலில் சிறைப்பிடிக்கப்பட்ட ஏழு சிங்கள குடியேற்றவாசிகளை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைப் புலிகள் விடுதலை செய்தனர். மனிதாபிமானத்திற்கு விடுதலைப்புலிகள் அளிக்கும் முக்கியத்துவத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

அதேவேளை, நீராகாரம் கூட அருந்த மறுத்து, உண்ணாவிரதம் இருந்து வரும் விடுதலைப் புலிகள் வசமுள்ள சிங்கள யுத்தக் கைதிகளை சிறீலங்கா அரசு அலட்சியம் செய்து வருகின்றது. சாதாரண சிங்களப் பொதுமக்களைக் கூட, சிறீலங்கா அரசு தனது சிங்களப் பேரினவாத உணர்வுக்கு பலியாக்கத் தயங்காது என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும்.

அவர்களது விடுதலை தொடர்பாக, புலிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை இராணுவ மேலாதிக்கத்திற்கும், பெளத்த சிங்கள பேரினவாத வெறிக்கும் பணிந்து நிறைவேற்றாத சிறீலங்கா அரசு இந்த யுத்தக்கைதிகள் பற்றியோ அல்லது அவர்களுடன், இவர்களை எப்படியாவது விடுவிக்க வேண்டும் எனும் மனவுறுதியுடன்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தவறு எங்கே?

சிறீலங்கா அரசாங்கத்தின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு சுமார் இரண்டு ஆண்டுகள் மூச்சு இழுத்ததின் பின் இம்மாத முடிவுடன் தனது பிராணனை இழந்து தன் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்கிறது. இதற்கிடையில் புதிய பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை, ஜனாதிபதிமுறை மற்றும், தேர்தல் முறைகள் என்பவற்றைப் பற்றி ஆராய்ந்து, அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யவென சிறீலங்காவின் இன்றைய ஜனாதிபதி விஜயதுங்கா நியமித்துள்ளார். இந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள் உருவானதன் உள்நோக்குகளை எடுத்து நோக்கின், சிறீலங்கா அரசாங்கத்தின் போக்கினைப் புரிந்து கொள்ளலாம்.

முதலாவது பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்டதாக வர்ணிக்கப்பட்டது. இதன் மூலம் சிறீலங்கா அரசாங்கம் தனக்கு அரசியல் தீர்வில் நாட்டம் இருப்பது போல் காட்டிக் கொண்டது. வெளிநாட்டுக் கடன்கள், உதவிகளை தொடர்ந்து பெறவும் மனித உரிமை, மனிதாய இயக்கங்கள் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும்படி விடுக்கும் வேண்டுகோள்களைத் திசை திருப்பவும், சுருக்கமாகச் சொன்னால் சர்வதேசச் சமூகத்தை ஏமாற்றவும் இது சிறீலங்கா அரசுக்கு பேருதவி புரிந்தது. அதேவேளை ஒரு கல்லில் இரு மாங்காய் என அரசியல் தீர்வு பற்றி சிந்திப்பதாகக் கூறி காலத்தை இழுத்தடித்து அதற்குள் தனது படைப்பலத்தைப் பெருக்கக்கூடிய சாத்தியமான அனைத்தையும் செய்து இராணுவத் தீர்வுக்கேற்ற சூழ்நிலையை உருவாக்கலாம் என்பதே சிறீலங்காவின் உள்நோக்காக இருந்தது. விடுதலைப் புலிகளின் இராஜதந்திரத்தால் இந்நோக்கில் முன்னேற முடியாமல், அதேவேளை இராணுவத்திற்குப் பெருமளவு நவீன ஆயுதங்களையும் தளபாடங்களையும் வாங்கிக் குவித்து வைத்திருக்கும் சிறீலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கையாலாகாத்தன்மையையும்தனது நரித்தனத்தையும் உலகுக்கு மூடிமறைப்பதற்கு கண்டுபிடித்துள்ள புதிய உத்தியே இன்று நியமிக்கப்படும் இரண்டாவது பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆகும்.

அரசியல் அமைப்பைத் திருத்த முடியாமல் இருப்பதே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் தீர்மானம் எதையும் எடுக்கமுடியாமல் போனதன்காரணி. இதனை நிவர்த்தி செய்யவே புதிய தெரிவுக்குழு என்னும் போலிக் காரணம் கற்பிக்கப்படக்கூடும். இதன் மூலம் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு முன், தமிழர்களுக்கு எவ்வித தீர்வையும் வழங்க விரும்பாதிருக்கும் யதார்த்தத் தன்மையையும் மூடிமறைக்கலாம். அத்துடன் ஜனாதிபதி முறை 1978 இல் தோற்றுவிக்கப்பட்டதன் விளைவாக சிங்களவர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தி உணர்வுகளையும், தேர்தல் முறையினால் தோற்றுவிக்கப்பட்ட ஊழல் தன்மைகளால் சிங்களவர்களிடையே ஏற்பட்ட வெறுப்புக்களை சீரமைக்கவுமே, இந்தப் பாராளுமன்றத் தெரிவுக்குழு எனக்கூறிக் கொண்டு சிங்களவர்களிடையே கட்சிச் செல்வாக்கைப் பெருக்கவும் இது உதவும். எனவே மீளவும் சர்வதேச சமூகத்திற்கு முன் தாம் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்தை வழங்குவோம் என கதை திரிக்கவும், தனது சிங்கள மக்களிடையே அரசுக்கு எதிராக வளரும் அதிருப்திகளைத் திசை திருப்பவும், சிறீலங்கா அரசாங்கத்திற்கு இப்புதிய பாராளுமன்றத் தெரிவுக்குழு உதவப் போகின்றது. அதேவேளை கால அவகாசத்தைப் பயன்படுத்தி இராணுவ நவீனமயமாக்கல், படை ஆளணிப் பெருக்கம் என்பவற்றுக்கூடாக தமிழீழ ஆக்கிரமிப்பை உறுதியாக்கி, தமிழீழ மக்களை படிப்படியாக அடிமை கொள்ளலாம் என்பதே சிங்கள பௌத்த பேரினவாதிகளின் பேரவா என்பதும் தெளிவாகின்றது. உண்மையில் எத்தனை பாராளுமன்றத் தெரிவுக்குழுக்களை நியமித்தாலும் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு ஏற்படப் போவதில்லை. காரணம், தவறு எங்கே இருக்கிறது என்பது சிறீலங்கா அரசாங்கத்திற்கு தெரிந்திருந்தும் தவறைத் திருத்துவதற்குப் பதிலாக, தவறைச் சரியென நிரூபிக்கும் பகீரதப் பிரயத்தனத்திலேயே சிறீலங்கா மீளவும் மீளவும் இறங்குகிறது.

தமிழர் பிரச்சினை வெறும் இனப்பிரச்சினை அல்ல. அது ஒரு தேசிய இனப் பிரச்சினை. இலங்கைத் தமிழர்கள் 'மக்கள்' எனும் சொற்றொடர்க்கு உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்பவர்கள். தமக்கென பாரம்பரிய தாயகத்தைக் கொண்டிருப்பவர்கள். பிரித்தானியர் ஆட்சிவரை தனியான இறைமையைக் கொண்டிருந்தவர்கள். பிரித்தானியரால் இருவரது இறைமைகளும் (தமிழர் -சிங்களவர்) ஒன்றாக இணைக்கப்பட்டு 'இலங்கை தேசியம்' என்பது செயற்கையாக உருவாக்கப்பட்டாலும் சுதந்திர இலங்கையில் இலங்கைத் தேசியம் என்ற பொதுமை ஒருபொழுதும் உயிர்ப்புப் பெறவில்லை. எனவே தமிழ்த் தேசியம் -சிங்களத் தேசியம் என்ற இருகூறுகளையும் தமிழர் தாயகம் -சிங்களவர் தாயகம் என்ற இரு பிரிவுகளையும் உள்ளடக்கியதாக இலங்கைத் தீவு உள்ளது என்ற உண்மை, உணரப்பட்ட ஒரு தீர்வைத் தவிர வேறெந்த வகையான தீர்வும் நடைமுறையில் பிரச்சினையைத் தீர்க்காது என்பதை உறுதியாக்குகின்றது. இது ஒருபுறம் இருக்க, அரசியல் அமைப்புத் திருத்தம் எதுவும் குடியொப்பத்தினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். சிங்கள பௌத்த பேரினவாதத்தையே தமது அரசியல் பதவிக்கட்டிலின் கால்களாக கொண்டு திகழும் சிங்கள அரசியல் கட்சிகள் குடியொப்பத்தை நடாத்துவது எப்படி? தாமே வளர்த்த சிங்கள பௌத்த பேரினவாத தீயை தாமே அணைப்பார்களா?

யுத்தக் கைதிகளை விடுவிக்கவென சிறீலங்கா அரசு அறிவித்த ஒரு சில பொருட்களுக்கான தடை நீக்கத்தையே 24 மணிநேரம்கூட அமுல்படுத்த முடியாது தவிக்கும் சிறீலங்கா அரச இயந்திரம், சிங்கள பௌத்த பேரினவாதத்தை எதிர்த்து நியாயமான ஒரு தீர்வை நடைமுறைப்படுத்த முடியுமா? அப்படித்தான் நடைமுறைப்படுத்துவதாயின் எந்தத் தீர்வை இதுவரை சிறீலங்கா அரசாங்கம் அறிவித்து அதற்கான அரசியல் அமைப்புத் திருத்தத்தைக் கோரியது? தமிழர்களை இனியும் ஏமாற்ற முடியாது. சர்வதேச சமூகத்தையும் நீண்ட நாட்களுக்கு ஏமாற்ற முடியாது. வரலாறு ஒரு தீர்வை உருவாக்கும். அது நிச்சயம் தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன் காட்டிய பாதையில் உருவாகும். வளமான திருநாட்டில் மாவீரர் நினைவோடு ஒரு சுதந்திரத் தமிழீழச் சமுதாயம் வளரத்தான் போகின்றது. ■

**யுத்தக் கைதிகள்:**

# தொடரும் உண்ணாவிரதமும் அரசின் அலட்சியப் போக்கும்

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் 33 யுத்தக்கைதிகளும் 29-7-93 இல் ஆரம்பித்த சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை, இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தொடர்ந்த வண்ணம் உள்ளனர். உண்ணாவிரதப் போராட்டத்தை தொடரும் யுத்தக் கைதிகள், தமது நிலைப்பாடு குறித்து அரசுக்கு அறிக்கையொன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். "உண்ணாவிரதம் அனுட்டித்து வருபவர்கள் யாழ்ப்பாணத்தில் இறக்க நேர்ந்தால், நான் கொழும்பு வந்து தற்கொலை புரிந்து கொள்வேன்" என யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள உண்ணாவிரதி ஒருவரின் சகோதரன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக, அரசுக்கு கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

உண்ணாவிரதிகள் 15 பேரது நிலைமை, மிகவும் மோசமடைந்துள்ளதாக கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. இருந்தும் சிறீலங்கா அரசு இப்போராட்டம் குறித்து, அலட்சியப் போக்கினையே கடைப்பிடித்து வருகின்றது. அரசின் அலட்சியப் போக்குக் குறித்து உண்ணாவிரதிகளின் பெற்றோர், அரசின் மீது ஆத்திரமும் வெறுப்பும் கொண்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. கைதிகள் விடுதலை குறித்து, ஏற்கனவே காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில், சிறீலங்கா அரசு நடக்கும் பட்சத்தில், கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என விடுதலைப் புலிகள் பலதடவை அறிவித்தும் சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளை ஏமாற்றி, எவ்வாறு கைதிகளை மீட்கலாம் என்பது குறித்தே தொடர்ந்தும் ஆராய்ந்து வருகின்றது.

இதேவேளே சிலரது நிலை மிக மோசமடைந்தபோதும், அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையில், தமது விடுதலை குறித்த உடன்பாட்டில் கைச்சாத்திடும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை



உண்ணா விரதமிருக்கும் யுத்தக் கைதிகள்

தொடரப் போவதாக உண்ணாவிரதிகள் அறிவித்துள்ளனர். இவர்களின் இத்தகைய அறிவிப்பும், உறுதியும் சிறீலங்கா அரசுக்கு பெரும் நெருக்குதலை உருவாக்கி வருகின்றது. இதனாலேயே அவசரமாக, சமரசங்களை மேற்கொள்ள சிறீலங்கா அரசு இப்போது முயல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் பின்னணியிலேயே யாழ் அரசாங்க அதிபர் மாணிக்கவாசகர், விடுதலைப் புலிகளுடனும் சிறீலங்கா அரசுடனும் இவ்விடயம் குறித்து பேச்சுக்களை மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை, உண்ணாவிரதமிருக்கும் கைதிகளின் நிலையை அறிய, பெருமளவிலான அவர்களின் உற்றாரும் உறவினரும் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்துக்குப் படையெடுத்துச் சென்றுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. "கடந்த மூன்று வருடங்களாக, தொந்தரவு செய்யாது எமது பிள்ளைகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்து உள்ளனர். அவர்களுக்கு உணவும் உடையும் வழங்கி மனிதாபிமானத்துடன் நடந்துகொண்டிருக்கின்றனர்." என அங்கு திரண்ட மக்கள் மத்தியில் உண்ணாவிரதிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

# ஜேர்மனியில் பிரச்சார செய்தி மேசை.

கடந்த 23. 07. 1993 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் பிராங்பேர்ட் நகரில் மாபெரும் செய்தி மேசை ஒன்று உலகத் தமிழர் இயக்கத்தினரின் பிராங்பேர்ட் கிளையினரால் நடத்தப்பட்டது. இச்செய்தி மேசைக்காக பிராங்பேர்டின் வியாபாரக் கேந்திரமான சைல் (Zeil) என்ற





செய்தி மேசையைச் சித்தரிக்கும் படங்கள்





இடத்தை தெரிவுசெய்திருந்தமையால் பல்லாயிரக்கணக்கான ஜேர்மன் மக்களையும் வெளிநாட்டவர்களையும் அணுகி எம் தாயகப் பிரச்சினைகளைப் பற்றி பிரச்சாரம் செய்யக்கூடியதாக இருந்தது.

செய்தி மேசையானது, 1983 ஆம் ஆண்டு யூலை மாதம் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலைகளையும், அக்கலவரங்களின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் விளக்கமறியல் கைதிகள் கொலை செய்யப்பட்டதையும் நினைவுபடுத்துவதாக அமைக்கப்பட்டிருந்தது. காலை 10 மணிக்கு ஆரம்பமான இப்பிரச்சார வேலைகள் மாலை 6 மணிவரை நீடித்தது. இதில் உலகத்தமிழ் இயக்கப் பிரதிநிதிகளுடன் சில ஜேர்மன் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், பிறீமன் மனித உரிமைகள் அமைப்பை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

செய்தி மேசையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த புத்தகங்களில் 1). இலங்கையில் 40 வருட மனித உரிமை மீறல் 2). இலங்கை ஒரு தீவு இரண்டு நாடுகள் 3). ஜெயவர்த்தனாவின் 10 வருட ஆட்சி என்ற புத்தகங்கள் மக்களை அதிகம் கவர்ந்ததோடு பெருமளவில் விற்பனையாகின.

பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருந்த தொண்டர்களிடம் இன்றைய இலங்கையின் நிலையினைக் கேட்டறிந்த ஜேர்மன் பிரஜை ஒருவர், தங்களுக்கு வானொலி பத்திரிகைகள் ஊடாக இந்த உண்மை நிலை எதுவும் தெரியவருவதில்லை என்று தெரிவித்தார்.

ஜேர்மன் அமைப்புக்களைச் சேர்ந்தவர்களில் Harold Moss, Bernard ஆகியோர் பிரபல சமூக சேவையாளர்களும் கௌரவ உத்தியோகத்தர்களுமாவார்கள். திருமதி Karen Mendis என்பவர்

தொடர்ச்சி 3ம் பக்கம் ....

www.tamilarangam.net



## 13 மாத தலைமறைவு வாழ்வு

# ஒரு முன்னாள் டி.ஐ.ஜியின் ஒப்புதல் வாக்குமூலம்

ஒரு வெற்றிகரமான கதாநாயகன் போல உடுகம்பொல மீண்டும் கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளார். "முடியுமானால் என்னைக் கைது செய்து பாருங்கள்" என்று சிறீலங்காப் பொலிஸ் திணைக்களத்திற்கு பகிரங்கச் சவால் விட்ட இந்த முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் சுங்கப் பரிசோதனைக்கும் கூட உள்ளாகாமலேயே கட்டுநாயக்காவின் ஊடாக உட்புகுந்தார். மீனவன் போல வேடம் போட்டு மொறட்டுவை ஆற்றில் ஒரு படகில் ஏறுவதற்காக முட்புதர்கள் நிறைந்த பற்றையினூடு ஊர்ந்து சென்ற அவர், கட்டுநாயக்காவில் தரையிறங்கியபோது 'செங்கம்பள வரவேற்பு' கொடுக்கப்பட்டிருக்கின்றது. பதின்மூன்று மாத காலம் நீடித்த ஒரு பொலிஸ் அதிகாரியின் தலைமறைவு வாழ்வு இப்போது முடிவுக்கு வந்துவிட்டது.

பொலிஸ் மாஅதிபரிலும் பார்க்க சக்தி மிகுந்தவராக விசேட **நடவடிக்கைகள்** பணியகத்தின் தலைவராக ஜனாதிபதி பிரேமதாசாவின் சாப்பாட்டு மேசை வரை, அவரது முன் அனுமதியின்றி செல்லக்கூடிய தகைமைபெற்ற விசேட விருந்தினராக -விளங்கிய பிரேமதாசா உடுகம்பொல, தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது எப்படி? அவரைக் கைது செய்யும்படி நீதிமன்றம் ஆணைபிறப்பிக்க வேண்டிய சூழல் எப்படி உருவானது? சட்டவிரோதமான கொலைக் கும்பல் ஒன்றினால் கொல்லப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலைத் தன்னால் வெளியிட முடியும் என்று உடுகம்பொல கையெழுத்திட்டு வெளியிட்ட சத்தியக் கடுதாசியின் இன்றைய நிலை என்ன? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேட முனையும் போது அவையெல்லாம் கொல்லப்பட்டவர்களின் சடலங்களைப் போல புதைக்கப்பட்ட உண்மைகளாகிவிட்டதைக் காணலாம்.

திகில் நிறைந்த சம்பவங்களில் ஈடுபட்டு 'புகழ்' பெற்றவராக விளங்கிய உடுகம்பொல, சட்டத்தரணி லியனாராய்ச்சி, பத்திரிகையாளர் ரிச்சார்ட் டீ சொய்சா போன்றோரின் மரணங்களோடு தொடர்பு படுத்தப்பட்ட நிலையில் மனித உரிமை இயக்கங்களின் கண்டனத்திற்கு உள்ளானார். எப்போதும் நவீன ஆயுதங்களைத் தன் வசம் வைத்திருந்த உடுகம்பொல தன் அலுவலக அறையில் குப்பைக் கூடையிலும், மேசை லாச்சிக்குள்ளும் கூட விதம் விதமான ஆயுதங்களை வைத்திருந்து மனித உரிமைகள் தொடர்பான ஆர்வலர்களை மிரட்டிக் கொண்டிருந்தார். 'டயர்' கலாச்சாரத்தின் சூத்திரதாரியான உடுகம்பொல பல்லாயிரம் கொலைகளை நிகழ்த்துவதற்கு, ஜே. வி. பி. யினருக்கு எதிரான நடவடிக்கைகள் என்று அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மனித உரிமைகள் இயக்கங்களின் கண்டனங்கள் மலையளவுக்கு உயர்ந்தபோது உடுகம்பொல, ஜனாதிபதி பிரேமதாசா அரசினால் அமெரிக்காவுக்கு கௌரவமாக நாடு கடத்தப்பட்டார். அமெரிக்காவில் இருக்கும் சிறீலங்காத் தூதரகத்தில் பணியாற்றும் அவரது மனைவியிடம் அனுப்பி வைக்கப்பட்டார். சில மாதகாலம் நீடித்த இக்கட்டாய லீவு முடிவுக்கு வந்தபோது உடுகம்பொல போதைப் பொருள் தடுப்புப் பணியகத்தின் தலைவரானார். கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் கசிப்பு மற்றும் கள்ளச் சாராய வேட்டைகளை பொலிசார் தீவிரமாக்கினர். உடுகம்பொலவின் பெயர் மீண்டும் பத்திரிகைகளில் அடிபட்டது. நாட்டுக்குள் போதைப் பொருள் கடத்துவதில் பேர்பெற்றவன் என்று கூறப்படும் 'கசினோ மன்னன்' ஜோசிம் நாடு கடத்தப்பட்டான்.

### தலைமறைவாகிய கதை

இவ்வாறு பெயர் அடிபட்ட சூழ்நிலையில்தான் உடுகம்பொலவுக்கும் அரசுக்கும் இடையிலான உறவில் விரிசல்களும் விழத் தொடங்கியிருந்தது. இந்த உறவு விரிசல், எங்கே? எப்படி? எதனால்? ஏற்பட்டது என்று ஆராய முற்படுவது அடிமுடி தேடிய கதைபோல் ஆகிவிடக்கூடும். எனினும் பிரேமதாசா உடுகம்பொலவின் சகோதரர் மேஜர் உடுகம்பொல சிங்கப்பூரில் இருந்து தங்கக் கட்டிகள் கடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் காவலில் இருந்தபோது சட்டத்தரணி லியனாராய்ச்சி மரணமானது குறித்ததான வழக்குடன் தொடர்பு படுத்தப்பட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி பணிக்கப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜரானால் தான் கைது செய்யப்படக்கூடும் என்றும் தனது உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடும் என்றும் கருதிய உடுகம்பொல தலைமறைவானார்.

பொலிஸ் திணைக்களத்தினர் உடுகம்பொலவைத் தேடி நாடு முழுவதும் வலை விரித்திருந்த அதேவேளையில் உயர் பொலிஸ் அதிகாரிகள் சிலரும், பங்களாவாசிகளான உடுகம்பொலவின் நண்பர்களும் அவருக்கு அடைக்கலம் வழங்கியிருந்தனர். உடுகம்பொல தங்கியிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தின் பெயரில், கொழும்பில் தமிழர் ஒருவரின் வீடு உடைக்கப்பட்ட அதே சமயத்தில் கொழும்பு நகரிலே பொலிஸ் அதிகாரி ஒருவரின் வீட்டிலேயே அவர் தங்கியிருந்திருக்கிறார்.

கொழும்பு நகரில் இரகசியப் பொலிசாரின் தேடுதல் வேட்டை தீவிரமாகியபோது காலி, கண்டி போன்ற நகரங்களுக்கு அவர் இடம்பெயர்ந்தார். ஒரு சமயத்தில் சிங்கராஜா வனத்திற்கு அருகே இருக்கும் பெருந்தோட்டம் ஒன்றில் அரசாங்க அதிகாரிபோல வேடமிட்டு நடமாடினார். இந்தச் சமயத்தில்தான் அவரின் சகோதரர் ஒருவர் காலமானார். இம்மரணவீட்டில் துக்கம் விசாரிப்பதற்காக உடுகம்பொல வருகை தரக்கூடும் என்ற சந்தேகத்தின் பெயரில் இரகசியப் பொலிசார் அந்தப் பிராந்தியத்தையே சுற்றி வளைத்தனர். எனினும் முற்றுகையை முறியடித்து மரண வீட்டிற்குச் சென்று துக்கம் விசாரித்த அவர் தனது 'வீரதீரச் செயல்' குறித்து பத்திரிகையிலும் விளம்பரப்படுத்தத் தவறவில்லை.

### நாட்டை விட்டு வெளியேற்றம்

கொழும்பில் மட்டுமன்றி கண்டி, மாத்தளை உட்பட பெரு நகரங்களிலும் பெருந் தோட்டங்களிலும் இருந்த பங்களாக்களை தலைமறைவு வாழ்வின்போது தங்குமிடங்களாகப் பயன்படுத்திய உடுகம்பொல, கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் ஓர் இக்கட்டான செய்தியை செவிமடுக்க நேர்ந்தது. முக்கிய அமைச்சர் ஒருவர் மூலமாக அனுப்பப்பட்ட அச்செய்தியை உதாசீனம் செய்ய முடியாதவர் ஆனார். கொலை செய்துவிடும்படி ஜனாதிபதி பிரேமதாசா உத்தரவு பிறப்பித்துவிட்டதாக கிடைத்த அச்செய்தியை அடுத்து உடுகம்பொல நாட்டைவிட்டு வெளியேறினார்.

குடும்பத்துடன் இணைந்து கொள்வதற்காக அமெரிக்கா செல்ல உடுகம்பொல முற்பட்டபோது 'மனித உரிமைகள் மீறப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்' எனப் பிரேமதாசா அரசு தெரிவித்ததைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அனுமதி வழங்க மறுத்தது. ஆனால் படகில் அவர் ஏறிச் சென்று நடுக்



கடலில் தரித்துநின்ற றோலர் ஒன்றின் மூலம் தூத்துக்குடி துறைமுகத்தை அடைவதை இயற்கையினால் கூட தடுத்துவிட முடியவில்லை. இரண்டு நாட்களுக்கு மட்டுமே போதுமான உணவுப் பொருட்கள், நீர் மற்றும் சாராயப் போத்தல்கள், பிறண்டி என்பனவற்றுடன் படகில் ஏறிய உடுகம்பொல திட்டமிட்டபடி தூத்துக்குடியை அடைவதை கடலில் ஏற்பட்ட புயற்காற்றினால் ஒருநாள் மட்டுமே ஒத்திவைக்க முடிந்தது. சாரமும் அரைக்கைச் சேர்ட்டும் மட்டுமே அணிந்திருந்தபோதும் தூத்துக்குடியில் தரை இறங்கியபோது ஆயிரம் அமெரிக்க டாலர்களும், ஐயாயிரம் இந்திய ரூபாய்களும் இருந்துள்ளன. இரவு முழுவதும் நீடித்த பஸ் பயணத்தின் முடிவில் சென்னையின் மகாபலிபுரத்தில் சில நாள் வாசம். விக்டர் பெர்னாண்டோ எனப் பெயர் மாற்றம். கொழும்பிலிருந்து விமானம் மூலம் அவருக்குத் தேவையான உடுப்புகளும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களும் அனுப்பிவைக்கப்பட்டன. சென்னையில் பிரபல பத்திரிகையாளர்களோடும், சட்டத்தரணிகளோடும் மற்றும் முக்கியஸ்த்தர்களோடும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டபின்னர் உடுகம்பொல புதுடில்லி பயணமானார்.

புதுடில்லியில் வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கியிருந்தபோது, சிறீலங்காவின் தலைநகர் வெடிகுண்டால் மீண்டும் ஒரு தடவை அதிர்ந்தது. பிரேமதாசா சடலமானார். விஜயதுங்கா ஜனாதிபதியானார். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட உடுகம்பொலவிற்கு 'பச்சை விளக்கு' காட்டப்பட்டது. சென்னையில் உள்ள சிறீலங்காத் தூதரகம் உடுகம்பொலவிற்காகத் தற்காலிக கடவுச் சீட்டை அவசரமாகத் தயாரித்தது. இவை அனைத்தும் கொழும்பு திரும்பிய உடுகம்பொல பத்திரிகையாளர்களிடம் சொன்ன செய்திகள்.

### சொல்லாத செய்திகள்

பிரேமதாசா உடுகம்பொல என்னும் இம்முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் இனிமேல், தான் செய்யப்போவது என்ன என்பது பற்றி இதுவரை எதுவும் தெளிவாகத் தெரிவித்திருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் பிரேமதாசா உடுகம்பொலவின் தலைமறைவுக்கு உதவியதாக கூறப்பட்ட தகவல்கள் குறித்தும் உடுகம்பொல எதனையும் உதிர்க்கவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான பிரேமதாசாவிற்கும் அவரது ஆணைக்கும் எதிராக தன்னைக் காப்பாற்ற முற்பட்ட அமைச்சர் யார் என்பதையோ, தமக்கு உதவிய உயர் பொலிஸ் அதிகாரிகள் பற்றிய விபரத்தையோ உடுகம்பொல வெளியிடவில்லை. இந்திய அரசின் உளவுத்துறை நிறுவனங்கள் மற்றும் கண்ணுக்குப் புலனாகாத சக்திகள் தனக்கு எவ்வகையில் உதவின என்பதையும்கூட உடுகம்பொல தெரிவித்துவிடவில்லை. ■

**நன்றி: ஈழநாதம்**

**இளையவன்**

---

## யுத்தக் கைதி.....

தாம் யாழ் சென்றபோது, விடுதலைப் புலிகள் தம்மை நேசத்துடன் நடத்தியதாகவும் மின்சாரம், மண்ணெண்ணெய், உணவு வகைகளின்றிக் கஸ்டமுறும் தமிழ் மக்களுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் எனவும் இவர்கள் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் தெரிவித்ததாகவும் அச்செய்தி தெரிவிக்கின்றது.

பிந்திக் கிடைத்த செய்திகளின் படி, புலிகளின் பாதுகாப்பில் இருந்து யுத்தக்கைதிகளை காலம் தாழ்த்தாது மீட்க நடவடிக்கை வேண்டும் எனக் கோரி, சிறீலங்கா அரசை வற்புறுத்தும் வகையில், யுத்தக்கைதிகளின் பெற்றோரும், உறவினர்களும், நண்பர்களும் மற்றும் பொதுமக்களும் இணைந்து மறியல் போராட்டத்தை கொழும்பில் நடாத்தி உள்ளதாக அறியப்படுகின்றது. இம்மறியல் போராட்டம் கொழும்பில் கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்பாகவும், கோட்டை வை. எம். சி. ஏ. மண்டபத்துக்கு அருகிலும் நடாதத்தப்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்த, கைதி ஒருவரின் தாயான சோமலதா என்பவரின் உடல் நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர் அநுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட 15 பேரின் நிலைமை மோசமானதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திரு. அன்டன் பாலசிங்கத்தின் உத்தரவின்பேரில் 15 பேருக்கும் 'சேலைன்' ஏற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தக்கைதிகளின் விடுதலை குறித்து, அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இணக்கம் காணப்பட்ட நிலையில், சில இனவாத சக்திகளினதும் இனவாத கட்சிகளினதும் இனவாதத் தலைவர்களினதும் தூண்டுதலின் பேரில் தென்பகுதிப் பத்திரிகைகள் பல, இவ்விணக்கப்பாட்டை மிகமோசமாக விமர்சித்தபடியாலேயே எமது பிள்ளைகளை நாம் இழக்கவேண்டிய நிலையில் இருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளார். ■

## ஜேர்மனியில்.....

ஒரு ஆங்கிலப் பெண்மணியாக இருந்தும் 400 கி. மீ. தூரத்தில் இருந்து வந்து, இச் செய்தி மேசையில் கலந்து கொண்டு மாலைவரை துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தவண்ணம் இருந்தார். இவ்விளம்பர சேவையின் மற்றொரு சிறப்பு அம்சமாக, இன்று சிறீலங்காவில் தமிழ் மக்கள் அரச இராணுவத்தால் தாக்கப்படுவதாகவும், மருந்துத் தடை, பொருளாதாரத்தடை தொடர்ந்து நீடிப்பதாகவும் இந்த நிலையில் ஜேர்மன் அரசாங்கம் இங்குள்ள தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக்கூடாது என்ற துண்டுப் பிரசுரமும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

உலகத் தமிழர் இயக்கத்தின் சார்பில் திரு. சி. நரேந்திரசிங்கம், திரு பூபதி பாலவடிவேற்கரசன், திரு. த. கனகலிங்கம், திரு. நிமலன், திரு. சிறீக்காந்தா, திருமதிகள் ரதி நித்தியானந்தன், நிமலன் ஆகியோரும், Stuttgart நகரின் கிளையைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டு இச்செய்தி மேசையை சிறப்பாக நடத்த உதவினர்.

இச்செய்தி மேசையானது பத்திரிகையாளர்களின் பாரபட்ச செய்திகளையும், பத்திரிகையாளர்கள் தமிழ் மக்களின் கஸ்டங்களையும், பிரச்சினைகளையும் மறைத்து வைத்திருந்ததையும் அம்பலப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைந்துவிட்டதாக இப்பிரச்சார செய்தி மேசையைப் பற்றி குறிப்பிட்ட திரு. சி. நரேந்திரசிங்கம் தெரிவித்தார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடகொரியாவின் அணுஆயுத அரசியல்

இன்றுவரை, மேற்குலக நாடுகளுக்கு என்றுமே புரியாத புதிராக வடகொரியா இருந்து வருகின்றது. "அது பலமாக இருந்தபோதும் சரி; தற்போது பலவீனப்பட்டுப் போயுள்ள நிலையிலும் சரி; அது என்ன நேரத்தில் என்ன செய்யும் என்பதே விளங்காத பெரிய சிக்கல்" என்கிறார் மேற்குலக இராச தந்திரி ஒருவர். சோவியத், சீனாவில் ஏற்பட்ட மாற்றங்கள் வட கொரியப் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதித்தாலும் (அண்மையில் சீனாவும் 'கையிலே காசு வாயிலே தோசை' என்கின்ற பாணியிலே வடகொரியாவோடு தனது வர்த்தக உறவுகளை வைத்திருக்க முடிவு செய்து விட்டது.) இன்றுவரை வடகொரியா தனிமைப்பட்ட, மூடப்பட்ட தனது அரசியல் சமூக முறைமையை இறுக்கமாகப் பின்பற்றி வருவதே மேற்குலகிற்கு பெரும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. திடீரென இவ் வருடம் மார்ச் மாதம் 12 ம் திகதி வடகொரியா அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு பெரும் பரபரப்பு அலைகளை உலகெங்கும் தோற்றுவித்தது. 1985 ஆம் ஆண்டு தான் கைச்சாத்திட்டிருந்த அணுவாயுத பரம்பலைத் தடுக்கும் உடன்பாட்டிலிருந்து தான் விலகுவதாக அது அறிவித்தது. இதைத் தொடர்ந்து சியோல், ரோக்கியோ, பீக்கிங், வாசிங்டன் என உலகத் தலைநகரங்களில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது. தென்கொரியாவோ, வடகொரியா தன்மீது படையெடுக்கும் என அஞ்சி பெரும் போர் ஏற்பாடுகளைச் செய்தது. கொரியப் பகுதியில் போர் மூளுமோ என அச்சம் தோன்ற உலகு மீண்டும் பனிப் போர் காலத்தில் நிலவிய இழுபறி நிலைக்குச் சென்றது. அது மட்டுமன்றி வட, தென் கொரிய இணைப்பு பற்றிய நம்பிக்கைகளும் பொய்த்துப் போக இதுவரை காலமும் வடகொரியாவை தம் செல்வாக்குப் பரம்பலுக்குள் உட்படுத்த முனைந்த மேற்குலகிற்கும் அதன் நண்பர்களான தென் கொரியா, ஜப்பான், சீனாவிற்கும் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. இது இன்றைய நிலை.

### அமெரிக்காவிற்கு பெரும் அடி

வடகொரியாவின் இந்த முடிவு ஆசியாவில் குறிப்பாக கிழக்கு ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தான் பேணிவர முயலும் சமநிலைக்கு பெரும் அடியாக இருப்பதை அமெரிக்கா உணர்கிறது. அதிலும் குறிப்பாக அமெரிக்காவின் இராணுவச் செல்வாக்கு பிலிப்பைன்சில் உள்ள இராணுவத் தளங்களை மூடியதாலும், இப்பகுதியில் இருந்து குறிப்பிட்டளவு அமெரிக்க இராணுவத்தை மீளப் பெறுவதாலும் குறையும் இக்கட்டத்தில், இது அமெரிக்காவுக்கு மட்டுமன்றி அதை நம்பியிருப்போருக்கும் தமது முன்னைய நிலைகளை மீளாய்வு செய்ய நிர்ப்பந்திக்கும் செயலாக அமைந்து விட்டது. இதுவரை 153 நாடுகளை அணுவாயுத பரம்பலை தடுக்கும் உடன்பாட்டில் கைச்சாத்திட வைத்து (அண்மையில் தென் ஆபிரிக்கா கூடக் கைச்சாத்திட்டுவிட்டது.) ஐரோப்பாவில் ஒருவித சமநிலையை அணுவாயுதங்கள் குறித்துப் பேணிவரும் அமெரிக்காவால் ஆசியாவில் மட்டும் தனது 'அரசியலை' முழுமையாக நடாத்த முடியாமல் உள்ளது. நீண்ட காலமாக காட்டர் ஜனாதிபதியாக இருந்த காலம் முதலே தென்னாசியப் பிராந்தியத்தை அணுவாயுதங்கள் அற்ற வெறுமைப் பகுதியாக்க அமெரிக்கா முயன்றுவந்தபோதும் அது இற்றை வரை நிறைவேறவில்லை. இந்திய உபகண்டத்தில் இந்தியா -பாகிஸ்தான் மோதலோடு ஆரம்பித்த அணுவாயுத இழுபறி, மத்திய கிழக்கில் அரபு -இஸ்ரேலிய மோதல் பகுதிக்கும் பரவி இன்று கொரியப் பிராந்தியத்துக்கும் வந்து சேர்ந்துள்ளது.

### ஆசியாவில் அணுகுண்டு

இந்தியா 1974 ஆம் ஆண்டு மே மாதம் பொக்காரன், இராஜஸ்த்தான் பாலைவனப் பகுதியில் தனது முதல் அணுசக்தி வெடிப்புப் பரிசோதனையை நிகழ்த்தி தனது அணுகுண்டு தயாரிக்கும் வல்லமையை உலகிற்கு எடுத்துக் காட்டியது. அதுமட்டுமன்றி, தனது அணுசக்தி தொடர்பான நிலையங்களை பரிசோதனை செய்ய சர்வதேச அணுசக்தி நிறுவனத்திற்குத் தடை விதித்ததோடு இற்றைவரை அணுவாயுதப் பரம்பலை தடுக்கும் உடன்பாட்டில் கைச்சாத்திடவும் மறுத்து வருகின்றது. பாகிஸ்த்தான், இந்திய முன்னேற்றங்களை பார்த்துப் பதறியடித்து அரபு - மேற்குலக ஆதரவோடு பனிப் போர் காலகட்டத்தில் அணுகுண்டு தயாரிக்கும் வல்லமையை படிப்படியாகப் பெற்றுவிட்டது. அதுமட்டுமன்றி தனது செயற்பாட்டிற்கு விபரீத விளக்கம் ஒன்றும் கொடுத்தது. "யூதர், கிறிஸ்த்தவர், கம்யூனிஸ்ட்டுக்கள், இந்துக்கள் எல்லாம் அணுகுண்டு தயாரிக்க முடியுமென்றால் ஏன் இஸ்லாமியர் தயாரிக்கக் கூடாது?" என வினாவை எழுப்பி இன்று இஸ்லாமிய அணுகுண்டு தயாரிக்கும் வல்லமையைப் பெற்றுவிட்டது. பாகிஸ்த்தானில் Kahuta எனும் இடத்தில் அணுவாயுதக் கூடம் இருப்பதாகக் .கருதப்படுகிறது. இன்று பாகிஸ்த்தானின் அணுவாயுதங்கள் தயாரிக்கும் முயற்சியை முழுமையாக அம்பலப்படுத்தி பாகிஸ்த்தானுக்கான தன்து உதவிகளையும் நிறுத்தி "நவீன நாயகனாக" நடிக்கும் அமெரிக்காவின் நிலை மிக்க வேடிக்கையானது. அணுவாயுதங்கள் தயாரிக்கும் வல்லமையைத் தாங்கள் பெற்றபின் ஏனையோர் அதைப் பெறாது அதைத் தடுக்க முயலும் இம் மேற்குலகம் இஸ்ரேல் விடயத்தில் நடந்த விதம் பெரும் கேலிக்குரியது.

### மேற்குலகின் இரட்டை வேடம்

இஸ்ரேல் தான் பிறந்த நாளில் இருந்தே அணுவல்லமையைப் பெற, விடா முயற்சியை மேற்கொண்டது. 1966 ஆம் ஆண்டே இஸ்ரேல் அணுகுண்டினை பகுதி பகுதியாக பொருத்தும் வேலையை மேற்கொண்டு விட்டது. இன்றும் இஸ்ரேலின் Dimona அணுவாலைப் பகுதி பெருத்த மர்மம் சூழ்ந்ததாகவே உள்ளது. ஆயினும் இஸ்ரேலுக்கு இற்றை வரை அணுவாயுதங்கள் தயாரிக்கத் தேவையான செறிவான யூரேனியம் மேற்குலகிற்குத் தெரியாமல் திருடப்பட்டோ கடத்தப்பட்டோ கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் 'கதைகள்' எல்லாம் எவ்வளவு பொய்யானவை என்று இன்று வெளியாகிவிட்டன. 1957 -1967 இடையில் 500 இறாத்தல் செறிவான யூரேனியம் அமெரிக்காவில் இருந்து கடத்தப்பட்டதாகக் கருதப்படுவதோ அல்லது 1968 ஆம் ஆண்டு 200 தொன் யூரேனியத்தோடு இஸ்ரேலுக்குக் கடத்தப்பட்டதாகக் கருதப்படும் ஜேர்மனியக் கப்பல் விவகாரம் பற்றிய செய்திகளோ அல்லது பிரான்சில் அதிரடி நடவடிக்கை ஒன்றை நடாத்தி 25 தொன் றக் வண்டியொன்றில் எடுத்துச் செல்லப்பட்ட செறிவான யூரேனியத்தைத் திருடியதோ அல்லது இவ்வாறாக இங்கிலாந்தில் இஸ்ரேலியக் கமாண்டோக்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவுமே இஸ்ரவேலின் 'வீரதீரச் செயல்கள்' அல்ல. அவையெல்லாம் திட்டமிடப்பட்டு முற்கூட்டியே தயாரிக்கப்பட்டு உலகை ஏமாற்ற நடத்தப்பட்ட பொய் நாடகங்கள் என்பதே அது. எனவே மேற்குலகின் இரட்டை வேடம் அம்பலமான இந்நிலையில் ஆசியாவில் தமது 'நீதியை' நிலைநாட்ட இவர்கள் எடுக்கும் முயற்சி வெற்றிபெற வாய்ப்பே இல்லாமல் உள்ளது.

**பாலகுமாரன்**

### மேற்குலகின் கவலை

ஆனால் இதிலுள்ள துயரம் என்ன வென்றால் இல்லானுக்கும் -இருப்பவனுக்கும் உள்ள மோதலாக இதனைச் சித்தரிப்பதன் மூலம் அணுவாயுதங்களின் பேரழிவுகளே மனித குலத்தின் கவனத்திலிருந்து மறைக்க எடுக்கும் முயற்சியாக இவை அமைவதுதான். ஏனென்றால் 1945 கிரோசிமா -நாகசாகியில் ஏற்பட்ட கொடூர அழிவுகள் அல்லது ருஸ்யாவில் செர்னோபில் அணுவாலைக் கசிவால் ஏற்பட்ட தொடர் அனர்த்தங்கள் எல்லாம் இவ்வல்லாண்மை நாடுகளின் போக்கினை மாற்றவில்லை. எனவே இன்று மத்திய கிழக்கில் இஸ்லாமிய அடிப்படை வாத நாடான ஈரான், முன்னாள் சோவியத்தின் மத்திய ஆசியக் குடியரசுகளின் உதவியோடு எட்டு -பத்து வருடங்களுக்குள் அணுவாயுதங்களைக் கொண்டிருக்கும் என்ற செய்தி என்ன முக்கியத்துவத்தைப் பெறப்போகின்றது? எனினும் இஸ்லாமிய அடிப்படை வாதம், தமது நலன்களுக்கு எதிராக இருப்பதன் அடிப்படையில் மேற்குலக நாடுகள் கவலை கொண்டாலும் ஈரானுடனான வர்த்தக உறவுகளைக் கைவிட மேற்குலகம் தயாராக இல்லை.

அதுபோலவே மேற்குலக சந்தைக்காக திறந்துவிட்டிருக்கும் இந்தியா, சீனாவின் பரந்த சந்தை வாய்ப்பினைக் கருதியும் இவர்களது அணுவாயுத செயற்பாடுகளைக் கண்டிப்பதோடு மேற்குலகம் நிறுத்திக் கொள்கின்றது.

### வடகொரியாவின் இன்றைய நிலை

இவையெல்லாம் பின்னணி. இன்று முன்னைப் பிரச்சினை வடகொரியாவை என்ன செய்வது என்பதுதான். ஏனென்றால் மேற்குலகிற்கு இன்று தலைபோகிற இருவிடயங்களாக பொஸ்னியச் சிக்கலும், முன்னாள் சோவியத் சிக்கல்களும் முதன்மை பெறுவதால் இவ் விடயத்தில் முழுக் கவனத்தையும் உடன் செலுத்த முடியாமலுள்ளதாக கருதப்படுகிறது. அல்லாவிட்டால் இஸ்ரேல் 1981 ஆம் ஆண்டு ஈராக்கின் Osirak அணுவாலையை தாக்கியழித்ததுபோல், வடகொரியாவின் தலைநகரான பியாங்யாங்கிலிருந்து 90 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள Yongbyon அணுவாலைப் பகுதியைத் தாக்க ஏதேனும் திட்டத்தை இவர்கள் வகுக்கலாம். ஆனால் வடகொரியாவோடு மோதலை ஆரம்பிப்பதன் விளைவுகளை, அதாவது இன்னொரு கொரியப் போரை சந்திக்க எவருமே விரும்பார் என்பதே உண்மை. எனவே, இற்றை வரை சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் பரிசோதனை முயற்சிகளை தடுத்து வரும் வடகொரியத் தலைவராக இருந்த கிம் இல் தங்கோஅல் அல்லது அவரது மகளான கிம் யோங்கில்லோ (Kim Jong IL), அநேகமாக அணுகுண்டை தயாரிக்கும், அதனை காவிச் செல்லும் ஏவுகணைகளைத் தயாரிக்கும் இறுதிக் கட்டத்தினை இப்போது அடைந்திருப்பது என்று நம்பப்படுகின்றது. அத்தோடு வடகொரியாவின் இராணுவமும், அதன் ஏனைய பலதுறை சார்ந்த பலத்தையும் குறைத்து மதிப்பிடவும் முடியாது. யேன்ஸ் பாதுகாப்பு வாராந்த இதழில் (Janes Defence Weekly), உலகின் மூன்றாவது மிகப் பெரிய வேதியல் (Chemical Arsenal) ஆழிவுகருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை வடகொரியாவில் இருப்பதாக குறிப்பிடுகின்றது. அதைவிட ஆயிரம் தொன்னுக்கும் மேற்பட்ட நச்சு வாயுக்கள் (Nerve and Mastard Gases) தொகுதி இருப்பதாகவும் கருதப்படுகிறது. மேலும் 13 வெவ்வேறு வித உயிர் கொல்லி (Biological Weapons) ஆயுதங்களும் ஏராளமாக இங்கு குவிக்கப்பட்டிருப்பதாவும் நம்பப்படுகின்றது. எனவே தனது அணுவாலை நிலைகளை பரிசீலிக்க எவரையும், வடகொரியா அனுமதிக்குமா என்பது ஐயத்துக்குரியதாகக் கருதப்படுகிறது. அவ்வாறு அனுமதிக்கப்பட்டாலும், அம்முயற்சிகளால் பெரிதும் பயன் விளையுமா என்பதும் சந்தேகம்தான். ஏனென்றால் சுரங்கங்கள் தோண்டுவதில் உலகப் புகழ் பெற்ற வடகொரியர், சங்கிலித் தொடர்போன்று பல சுரங்கப் பேழைகளில் புளூட்டோனியத்தை மிக்க இரகசியமாக மறைத்து வைத்திருப்பதாகக் கருதப்படுகிறது. எனவே முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்ட வடகொரியர் தமது உயிர் வாழ்தலுக்கு அணுகுண்டையே இறுதி வழியாக நம்பியிருப்பதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### சீனாவின் தந்திரம்

எனவே, வழமைபோல மேற்குலகம் ஐ. நா. வின் பாதுகாப்பு சபைக்கு இவ்விவகாரத்தை இப்போது பாரப்படுத்தியுள்ளது. இந்நிலை தொடர்ந்தும் நீடித்தால், இதனை அதாவது வடகொரிய மறுப்பை ஒரு மோசமான முன்மாதிரியாக ஈராக், ஏனைய மத்திய ஆசியக் குடியரசுகள் பின்பற்றலாம் என்ற அச்சமும் இப்போது ஏற்பட்டுள்ளது. இதனால் வடகொரியாவுக்கு எதிராக ஐ. நா. பொருளாதாரத்தடையை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. ஆயினும், எவ்வித நடவடிக்கையும் இவ் வருட அரைப் பகுதிக்குப் பின்னரே பாதுகாப்பு சபையால் எடுக்கப்பட முடியும் என்றே நம்பப்படுகிறது. ஏனெனில் தனது பழைய நண்பனான வடகொரியாவைப் பற்றி நன்கு அறிந்திருக்கும் சீனாவோ பொருளாதாரத் தடை விதிக்கப்படுவதை விரும்பவில்லை. மேலும் மேலும் வடகொரியாவை மூலைக்குள் தள்ளுவது ஆபத்திலேயே முடியுமென சீனா கூறுகின்றது. இதனால், மேற்குலகம் சீனாவை இவ்விடயத்தில் தலையிட்டு சுமூகமான முடிவை கொண்டு வருமாறு வெகுவாக நிர்ப்பந்திக்கின்றன. ஆனால் சீனாவோ எப்போதும் போல் தன்னலமே பொதுநலமாகக் கருதி தனக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள பிரச்சினைகளை (1. தைவானுக்கு எவ் -16 ரக விமான விற்பனை 2. அமெரிக்காவில் இருந்து ஆகக்கூடிய வர்த்தக சலுகைகளைப் பெறல் ) தீர்க்க இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி பேரம் பேசுகின்றது. வடகொரியாவோ, தன்னை எல்லா முன்னாள் சோசலிச நண்பர்களும் கைவிட்ட நிலையில் பொருளாதார இடர்களை எதிர்நோக்குகின்றது. இதனால் இவ்வணுவாயுத விவகாரத்தை தனது துருப்புச் சீட்டாக மேற்கிலிருந்து கூடிய பொருளாதார உதவிகளைப் பெற -மேற்கோடு உயர் மட்ட பேச்சுக்களை ஆரம்பிக்க, தென் கொரியாவுக்கான அமெரிக்க இராணுவ உதவிகளைக் குறைக்கப் பயன்படுத்த விளைவதாக மேற்குலகம் எண்ணுகிறது. எது எவ்வாறு இருந்தாலும் தனது மார்ச் மாத அறிவித்தல் மூலம் ஆசியப் பகுதியை ஒருவகை அணுவாயுத நெருக்கடி ஒன்றுக்குள் வடகொரியா தள்ளிவிட்டுள்ளது. தனக்கு ஒரு நீதி பிறர்க்கு ஒரு நீதி என்று செயற்பட்ட அமெரிக்கா உட்பட்ட மேற்குலகின் கையறு நிலையையும் இச்செயல் புலப்படுத்திவிட்டது.

கோட்பாடுகள், மனிதாபிமானக் கருத்துக்கள் எல்லாம் எவ்வாறாக இருந்தாலும், வல்லமை உடையவராக இருத்தலே இன்றைய உலகின் யதார்த்தம் என்பதை வடகொரியா தெளிவாகப் புரிந்துள்ளது. இதனாலேயே தென்கொரியா கூட இவ்விவகாரத்தை மென்மையாக, படிப்படியாக கையாளுவதே நல்லது எனக் கருதுகிறது. ஒரேயடியாக வடகொரியாவை அழிவை நோக்கித் தள்ளி, அதனாலே கிழக்கு ஜேர்மனியில் ஏற்பட்டது போன்றதொரு நிலை ஏற்படுவதை தென்கொரியா, தான் விரும்பவில்லை என்கிறது. "இப்போது போரெல்லைகள் தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒரு விபரீத விளையாட்டு இது" என்கிறார் சீன ஆய்வாளர் ஒருவர்.

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈ.பி.டி.பியும் சிங்களவர்களும்


டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் இரண்டாம் நிலைத் தலைவர்களில் ஒருவராயிருந்தவர். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் இராணுவப் பிரிவான பி.எல்.ஏ. இன் தளபதிகளில் அவர் முக்கியமானவர். மட்டக்களப்பு சிறையுடைப்பிலிருந்து தப்பிச் சென்ற வரதராஜப் பெருமாள் தமிழகத்திலிருந்து ஈ.பி.ஆர். எல்.எவ் இல் முழுநேர உறுப்பினராகச் சேர்ந்து, விரைவில் பத்மநாபாவை இயக்கும் சக்தியாக மாறியபோது டக்ளஸ் தேவானந்தா போன்ற இரண்டாம் நிலைத் தலைவர்கள் அதிருப்தியடைந்தார்கள். வரதராஜப்பெருமாளின் எழுச்சியே, நாபா -தேவா பூசல்களை கூர்மையடையச் செய்தது என்று கூறுபவர்களும் உண்டு. இப்பொழுதும் தேவா அணியிலிருப்பவர்களைக் கேட்டால், அவர்கள் நாபாவைவிட பெருமாளைத்தான் மோசமாக விமர்சிப்பதைக் காணலாம்.

தளப்பிரதேசத்தில் உள்ள தலைமை, அது எத்தகைய முற்றுகைகளிற்குள் இருந்தாலும், பின்தளத்தில் பத்திரமாக இருக்கும் தலைமையைவிடப் பலமானதாகவே இருக்கும். இதுதான் தேவா -நாபா விவகாரத்திலும் நிகழ்ந்தது. தனது வெற்றி பெறாத காரைநகர் முகாம் தாக்குதல் போன்ற சில தாக்குதல் முயற்சிகளின் மூலம் தேவா, யாழ்ப்பாணத்தில் பிரபல்யமடையலானார். தேவா மீதான தனது பிடி பலவீனமடைவதை தமிழகத்திலிருந்து நாபா உணர்ந்தார். எனவே தேவாவைப் பலவீனப்படுத்தும் சில முயற்சிகளில் அவர் இறங்கினார். இவற்றுள் தேவாவிற்கான விநியோகங்களை மட்டுப்படுத்தியது அல்லது நிறுத்தியது முக்கியமானது. பதிலாக தனக்கு விசுவாசமாயிருந்த கிழக்குப் பிராந்தியத் தளபதி கபூரை, நாபா மேலதிக விநியோகங்களின் மூலம் பலப்படுத்தலானார். ஒரு கட்டத்தில், வழமையான சந்திப்பிற்காக தமிழகம் வரும்படி தேவா அழைக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் தனது சகாக்கள் தடுத்ததையும் மீறி தேவா தமிழகம் போனார். அங்கு அவரை நாபாவின் ஆட்கள் வீட்டுக்காவலில் வைத்ததாக, தேவாவின் ஆட்கள் இங்கு கூறினார்கள். தேவா அகலும் வரை காத்திருந்த கபூர் அணியினர் விரைந்து செயற்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் தென்மராட்சியில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அணி நாபாவிற்கு விசுவாசமாயிருந்தது. எனவே யாழ்ப்பாணத்தில் தனது நிலைகளைப் பலப்படுத்திக் கொண்டு வந்த கபூர் அணியினர், தேவாவின் முக்கிய சகாவான ரமேஸைக் கைது செய்தார்கள். அத்தோடு நாபா -தேவா அணிகளுக்கிடையிலான பூசல்கள் அவற்றின் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டன. அத்தியடியில் தேவாவின் அணியைச் சேர்ந்த சுமார் 75 பேர் ஊர்லமாகச் சென்று தமது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு இயக்கத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார்கள். அவர்கள் ரமேஸை உடனடியாக விடுவிக்குமாறு கோரினார்கள். ரமேஸ் விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தோடு ஈ.பி.ஆர்.எல்.எவ் திட்டவட்டமாக இரு அணிகளாக உடைந்துவிட்டது. தமிழகத்திலிருந்து தேவா விரைவில் யாழ்ப்பாணம் திரும்ப உத்தேசித்திருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில்தான் சூளைமேட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

சூளைமேட்டில் தேவாவின் முகாம் இருந்தது. அங்கிருந்து சென்ற வாகனம் ஒன்று தெருக்களில் வேகமாக ஓடியபோது ஊர்ப்பெண்களின் மீது சகதியை வாரி வீசிச் சென்றது என்றும், இதனால் கோபமடைந்த கிராமவாசிகள், முகாமை முற்றுகையிட்டார்கள் என்றும், அவர்களை மிரட்டுவதற்காகத் தேவாவின் ஆட்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அதில் ஒரு கிராமவாசி கொல்லப்பட்டுவிட்டதாகவும், தேவா அணியைச் சேர்ந்த ஒருவர் பின்னர் கூறினார். மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்டவர் அ.இ.அ.தி.மு.க. இன் உறுப்பினர் என்றும் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். அரசு தேவாவைக் கைது செய்து சிறையில் போட்டது. சிறிது காலத்திற்கு எல்லோருமே தேவாவை மறந்துவிட்டார்கள். அவருடைய சகாக்கள் தமிழ்நாட்டில் உணவுக்கும் வதிவிடத்திற்கும் தவித்துத் திரிந்தார்கள். இதனால் இவர்களிற் சிலர், பின்னர் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

நாபா, தேவாவை இயக்கத்திலிருந்து நீக்கிவிட்டார். இதற்கு, தேவா மீது அவர்கள் வைத்த குற்றச் சாட்டுக்களில் முக்கியமானவை இரண்டு. ஒன்று, அவர் நிதி மோசடிகளில் ஈடுபட்டார் என்பது. மற்றது, அவர் தமிழகத்திலுள்ள நக்சலைட்டுக்களுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பது. தவிர, சூளைமேட்டுச் சம்பவமும் ஒரு காரணமாகக் கூறப்பட்டது.



சிங்களப் பேரினவாதிகளுடன் ஈ.பி.டி.பி.யினர்

இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு முன்பு தேவா விடுவிக்கப்பட்டார். சிதறிக் காணப்பட்ட தனது அணியினரைத் திரட்டினார். அப்பொழுது தமிழக அரசு இப்படி உதிரிகளாகத் திரிந்த விடுதலைப் புலிகளல்லாத இயக்கத்தவர்களிற்கு, ஆளுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் உதவ முன்வந்தது. தேவா தனது ஆட்களில் சுமார் நூறு பேரைப் பதிவு செய்து பணத்தை மொத்தமாகப் பெற்றார் என்றும், அப்பணத்தில் அவர்கள் சில வாகனங்களை வாங்கி ஒரு இயக்கத்தைப் போல ஓடித்திரிந்ததாகவும், பின்னர் அவர்களிடம் இருந்து விலகி வந்த ஒருவர் கூறினார்.

இந்திய - விடுதலைப் புலிகள் யுத்தம் மூண்டபின், விடுதலைப் புலிகளுக்கு எதிரான இயக்கங்களை ஏதாவது ஓர் இயக்கத்தின் தலைமையின் கீழ் ஒன்று திரட்ட, புதுடில்லி முயன்றபோது வரதராஜப் பெருமாள் தலைமையில் நாபா அணி அதற்குத் தயாராக முன்வந்தது. நாபா அணி புதுடில்லிக்குப் பூரண விசுவாசமாக மாறவும், தேவா அணி தவிர்க்க முடியாதபடி புதுடில்லியிடமிருந்து சற்று விலகி நிற்க வேண்டியதாயிற்று.

88 இல் மாகாண சபைத் தேர்தல்களிற்கான அறிவிப்பு வெளியாகியபோது, அதில் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையிலான அமைப்புத் தவிர வேறெந்தக் கட்சியும் போட்டியிடக் கூடாது என்பதில் புதுடில்லி திட்டவட்டமாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் தேவா தேர்தல்களில் போட்டியிடப் போவதாக வலிமையான ஓர் ஊகம் எழுந்தது. ஆனால், தேர்தல் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு தேவா தமிழகத்தில் கைது செய்யப்பட்டார். சிறுவர்களைக் கப்பத்தொகை கேட்டுக் கடத்தியதாக அவரது அணிமீது குற்றஞ்சாட்டப்பட்டது. இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த தேவாவிற்கு நெருக்கமான வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர், தேவா தேர்தலில் குதித்தால், பிரச்சார மேடைகளில் நாபா, தேவா அணியினருக்கிடையிலான சூடான விவாதங்களில் இரு பகுதியினரதும் இரகசியங்கள் பல அம்பலமாகிவிடும் என்றும், குறிப்பாக வரதராஜப் பெருமாளிற்கு எதிரான பல இரகசியங்களை பகிரங்கப் படுத்தக் கூடிய ஒரு நபராக தேவா காணப்பட்டதால், அவரைக் கட்சியில் இருந்து அகற்ற வேண்டிய தேவை, நாபா அணிக்கும் புதுடில்லிக்கும் இருந்தது என்றும், எனவே பொய்யான குற்றச் சாட்டுக்களின் பிரகாரம் அவர்கள் தேவாவைச் சிறைக்குள் போட்டுவிட்டார்கள் என்றும் கூறினார்.

பின்னர் விடுவிக்கப்பட்ட தேவா, ஐ.பி.கே.எவ். விலகிச் சென்ற தருணத்தில் கொழும்புக்கு வந்துவிட்டார். இங்கு அவரது அணி தன்னை ஈ.பி.டி.பி. (ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி) என்ற பெயரில் ஒரு கட்சியாகப் பதிவு செய்து கொண்டது.

ஈ.பி.டி.பி. கொழும்புக்கு வந்ததை, இந்தியாவிற்கு எதிரான ஒரு நகர்வாக பொதுவாக அவதானிகள் கூறியபோதிலும், சிலர் வேறுவிதமாக அபிப்பிராயப்பட்டார்கள். விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய சகல இயக்கங்களும் புதுடில்லியுடன் சேர்ந்து அடையாளம் காணப்பட்டுவிட்ட பின்பு, சிறீலங்கா அரசு கொழும்பில் மேற்படி இயக்கங்களின் நடவடிக்கைகளை சந்தேகத்துடனேயே பார்த்தது. ஆனால், ஈ.பி.டி.பி. யை அவர்கள் அப்படிப் பார்ப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு. எனவே, கொழும்பில் பிரேமதாசா அரசால் சந்தேகிக்கப்பட முடியாத ஓர் ஏஜன்ட் ஆக புதுடில்லி ஈ.பி.டி.பி. யை கொழும்பிற்கு அனுப்பியிருக்கலாம் என்பது மேற்படி அவதானிகளின் கருத்து.

அப்போதிருந்த பாதுகாப்பு மந்திரி ரஞ்சன் விஜயரட்னாவும், கொழும்பிலிருந்த இந்தியாவிற்கு விசுவாசமான மற்ற இயக்கங்களை விட ஈ.பி.டி.பி. யை நம்பத் தயாராக இருந்தார். தளப் பிரதேசமும் இல்லை, பின்தளப் பிரதேசமும் இல்லை என்றிருந்த தேவா, ரஞ்சன் விஜயரட்னாவை நோக்கிச் சரியலானார். இப்படி, பிரேமதாசா அரசுடன் ஆரம்பித்த உறவு இரண்டாவது ஈழப் போரோடு படிப்படியாக நெருக்கமடைந்து இன்று ஈ.பி.டி.பி. இராணுவத்திலுள்ள ஒரு தமிழ்ப் படைப் பிரிவு போல தொழிற்படும் அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கின்றது.

கொழும்பில் மற்றைய இயக்கங்களை விட சலுகை பெற்ற ஒரு அமைப்பாக ஈ.பி.டி.பி. காணப்படுகின்றது. பலாலியிருந்து ஒலிபரப்பப்படும் 'மக்கள் குரல்' ஈ.பி.டி.பி. யின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது. தினகரன் வாரமலரில் வெளிவரும் 'புல்லட் பொக்ஸ்' ஈ.பி.டி.பி. யுடன் தொடர்புடையது என்று கருதப்படுகிறது. 'மக்கள் குரலி'ற்காக கோரப்படும் எந்த ஒரு உதவியையும் செய்து கொடுக்கும்படி சிறீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு பிரேமதாசா உத்தரவிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. தினகரன் வார மலரில் 'புல்லட் பொக்ஸ்' ஒருவிதத்தில் இன்னொரு ஆசிரியர் தலையங்கம் போலவே வெளிவந்து கொண்டிருக்கிறது. சில சமயங்களில் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதனுக்கு வேண்டியவர்களும் 'புல்லட் பொக்ஸ்களில்' தாக்கப்படுவதுண்டு. அப்பொழுதெல்லாம் அதைத் தடுக்கும் சக்தியற்றவராகவே சிவகுருநாதன் காணப்படுவாராம். மேலிருந்து வரும் ஆசிரியர் தலையங்கம் அது என்பதால் தினகரன் ஆசிரிய பீடம் அதில் தலையிடுவதில்லையாம்.

தீவுப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் ஈ.பி.டி.பி. யிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வவுனியாவில் புளட்டிற்கும், கிழக்கில் ரெலோவிற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும், சலுகைகளையும் விட ஒப்பீட்டளவில் அதிகமானவை தீவுகளில் ஈ.பி.டி.பி. க்குத் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாசா கொல்லப்படும்வரை ஈ.பி.டி.பி. கொழும்பில் அவருடைய செல்லப் பிள்ளை போலக் காணப்பட்டது. பிரேமதாசா, தேவாவைத் தனது தம்பிகளில் ஒருவர் என்று கூறிவந்தார். (இன்னொரு தம்பி அஸ்ரப்)

**நிலாந்தன்**

பிரேமதாசா சிங்கள ஆட்சிப் பாரம்பரியத்தை பொறுத்தவரை வேரற்ற ஒரு தலைவர். அவர் உயர் குழாத்தைச் சேர்ந்தவரில்லை. அவருடைய குடும்பப் பின்னணியும் பலமானதல்ல. இந்நிலையில் தனது தனிப்பட்ட முயற்சிகளாலும், பேச்சு வன்மையாலும் மட்டும் ஜனாதிபதியாக உயர்ந்த அவர், உயர் குழாத்துடனான நிரந்தர முரண்பாடுகள் காரணமாக எப்பொழுதும் அதிகாரிகளிலும், ஆலோசகர்களிலும், சில தனிப்பட்ட உதவியாளர்களிலும் தங்கியிருந்தார். இதனால் அவருடன் ஆரம்பத்திலிருந்து காணப்பட்ட சில அதிகாரிகளுடனும் அவர் மிக நம்பிய சில ஆலோசகர்கள், ஊழியர்களுடனும் அவரது உறவு, நிர்வாக ரீதியிலானது என்பதற்கும் அப்பால் ஒரு தனிப்பட்ட உறவாகவே வளர்ச்சி கண்டிருந்தது. உயரதிகாரி பாஸ்கரலிங்கம், அந்தரங்க ஊழியர் மொகைடீன், ஆலோசகர் தயான் ஜெயதிலக போன்றோருடனான அவரது உறவு அநேகமாக தனிப்பட்ட விசுவாச நட்பாகவே மாறிவிட்டிருந்தது. இப்படித்தான் தேவாவுடனும், பிரேமதாசா மிகவும் நெருக்கமானவராகிவிட்டிருந்தார். அவரைத் தம்பி என்று உறவு முறை சொல்லலானார். மக்கள் குரல், பிரேமதாசாவை 'அண்ணன்' என்று அழைக்கலாயிற்று.

இந்த உறவு முறைதான் ஈ.பி.டி.பி. யை இப்போது சிக்கலில் மாட்டியிருக்கிறது. பிரேமதாசாவிற்கு எதிரான உயர் குழாம் ஈ.பி.டி.பி. கொழும்பில் ஆயுதங்களோடு சுதந்திரமாகத் திரிவதை சகித்துக் கொள்ளத் தயாராய் இல்லை. அவர்கள் ஈ.பி.டி.பி. யை பிரேமதாசாவின் தனிப்பட்ட 'பரா இராணுவப் பிரிவு' என்று வர்ணிக்கிறார்கள். முன்பு கறுப்பு பூனைகள் மூலம் அவர் செய்தவற்றை பின்பு ஈ.பி.டி.பி. மூலம் செய்து வந்தார் என்பது அவர்களது குற்றச் சாட்டு. ஈழப் போரைச் சாட்டாக வைத்துக் கொண்டு ஒரு தனிப்பட்ட பரா இராணுவப் பிரிவை பிரேமதாசா பகிரங்கமாக வைத்திருந்தார் என்றே, பெரும்பாலான சிங்கள எதிர்க் கட்சிகளும் பத்திரிகைகளும் கருதுகின்றன.

கடந்த வருடம் அராலி வெளியில் தளபதிகள் கொல்லப்பட்ட சம்பவத்திலும் பிரேமதாசா மீதான அவர்களின் வழமையான சந்தேகங்கள் ஒரு கட்டத்தில் ஈ.பி.டி.பி. யின் மீது திரும்பின. இது விடயத்தில் இராணுவத்தில் ஒரு பகுதியினர் இப்பொழுதும் ஈ.பி.டி.பி. யைத்தான் சந்தேகிக்கிறார்களாம். அடுத்தது லலித் கொல்லப்பட்டது. இக்கொலை பற்றியும் பிரேமதாசாவின் எதிரிகள் ஈ.பி.டி.பி. யைச் சந்தேகிக்கத் தொடங்கினார்கள். போதாக் குறைக்கு லலித் கொல்லப்பட்ட பின்பும் மக்கள் குரல் அவர்களைக் கடுமையாகச் சாடியதும், பிரேமதாசாவின் எதிரிகளை மோசமாகச் சீண்டிவிட்டது. இது ஈ.பி.டி.பி. யைத் திருகோணமலை வரை தள்ளிக் கொண்டு போய்விட்டிருக்கிறது.

எனினும், பிரேமதாசா ஈ.பி.டி.பி. யினர் முழுப்பேரையும் திருகோணமலைக்கு அனுப்பி விடவில்லை என்றும், சிறு தொகையினரை தனது தனிப்பட்ட பாதுகாப்பில் வைத்திருந்தார் என்றும், அவர் கொல்லப்பட்ட பின்னர் இது வெளித் தெரிய வந்ததாகவும் கொழும்பில் இருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

ஈ.பி.டி.பி தவிர்க்க முடியாதபடி, பிரேமதாசாவின் அரசியலில் ஒரு பாகமாகிவிட்டது. சிங்களவர்களின் கட்சிப் பூசல்களுக்குள் குறிப்பாக பிரேமதாசவிற்கும் உயர் குழாத்துக்குமான மோதல்களில் பந்தாடப்படும் ஒரு அமைப்பாக அது மாறியிருந்தது. அண்மையில் 'சண்டே ஐலண்ட்' ஈ.பி.டி.பி. யைத் தாக்கி ஒரு பத்தியைப் பிரசுரித்திருந்தது. பெயரை வெளியிட விரும்பாத ஒருவர் மேற்படி பத்தியை சிறப்பு நிருபர் என்ற பெயரில் எழுதியிருந்தார். (அநேகமாகத் தமிழர்?)

இப்பொழுது பிரேமதாசா இல்லை. ஆனால், சிங்களவர் மத்தியில் அவரைப் பற்றியிருந்த சந்தேகங்கள் அவர் கொல்லப்பட்டதால் நீங்கிவிட்டன என்பதற்குமில்லை.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






ஒரு வெற்றிகரமான தாக்குதல் நடைபெற்றது என்பதைக் கேள்விப்படும்போது தமிழீழ மக்களின் உள்ளங்கள் வெற்றிக் களிப்பில் மூழ்குகின்றன. ஆனால் குறிப்பிட்ட தாக்குதலின் வெற்றிக்கு உயிர்நாடியாக இருந்தது வேவுப் பிரிவின் திறமைதான் என்ற விடயம் பெரும்பாலும் வெளிக் கொணரப்படுவதில்லை. அது போராளிகளுக்கு மட்டுமே தெரிந்த விடயம்.

ஒரு தாக்குதல் திட்டத்தை வகுப்பதற்கு வேவுப் பிரிவின் பங்கு மிக முக்கியமானது. எதிரி நிலை கொண்டுள்ள பூகோள சூழல், அந்நிலையின் கட்டமைப்பு., எதிரியின் ஆட்பலம், ஆயுத பலம் போன்ற சகல தகவல்களையும் வேவுப் பிரிவினரே சேகரித்துக் கொள்கின்றனர். அத்துடன் தாக்குதலுக்கான சாதக பாதக அம்சங்களையும் அவர்கள் கணிப்பீடு செய்கின்றனர். வேவுப் பிரிவினரின் இந்தத் தகவல்களின் அடிப்படையில்தான் தாக்குதல் திட்டம் வகுக்கப்படுகின்றது. ஆகவே ஒரு தாக்குதலின் வெற்றி வேவுப் பிரிவினரின் திறமையில் பெரும்பாலும் தங்கியிருக்கின்றது எனலாம்.

வேவு பார்க்கும் பணி மிகவும் ஆபத்துக்கள் நிறைந்தது.

ஒரு சிறு அசைவு கூட எதிரிக்குத் தெரியாமல் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் வேவுப் பணியில் ஈடுபடுபவர் தனது உயிரை இழக்க நேரிடும். அதே வேளை எதிரியும் தனது நடைமுறைகளை மாற்றிக் கொள்வான். அதற்கேற்றவாறு மிகவும் நிதானமாக, எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

எதிரியின் காவலரண்களுக்கு மிக அருகில் செல்லும்போது சில வேளை எதிரி நித்திரையாயிருப்பான். ஓசைப்படாமல் அவனது கனரக ஆயுதத்தைத் தூக்கி வரக் கூடியதாக இருக்கும். எதிரியின் ஆயுதங்களைக் காணும் போது அதைத் தூக்குமாறு மனம் ஏவும். அந்த ஆயுதத்தினால் வீரச்சாவெய்திய நண்பர்களின் முகங்கள் நினைவுக்கு வரும், கை துருதுருக்கும் -ஆனால் இதையெல்லாம் வெல்லக்கூடிய மனப்பக்குவத்தை வேவுப்பணியில் ஈடுபடுபவன் பெற்றிருக்க வேண்டும்.

கயிற்றில் நடப்பது போன்ற இப்பணியில் ஈடுபட்டவர்களில் அன்பழகனும் ஒருவன். முகாமில் இவனைக் காணவில்லையென்றால் சந்தேகமில்லாமல் ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது எதிரியின் ஏதோ ஒரு நிலைக்கு அண்மையில் இவன் நின்று எதிரியின் நடமாட்டங்களைக் கவனிக்கின்றான் என்று. அவனைப் பொறுத்தவரை எந்நேரமும் அதுதான் சிந்தனை. தனது பொறுப்பு எத்தகையது என்பது அவனுக்கு மிக நன்றாகத் தெரியும்.

ஒரு சராசரி மனிதரை விட இவன் வேறுபட்டவன். ஏனெனில் இவனது அண்ணனான ஈசன் என்பவருக்கு மோசடிக் குற்றங்களுக்காக இயக்கத்தால் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தச் சம்பவம் நிச்சயம் இவனில் இரத்தத் துடிப்பை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் இனப்படுகொலைக்குள்ளாகிக் கொண்டிருக்கும் எமது இனத்தைப் பற்றிய துடிப்பு இவனில் மேலோங்கியிருந்தது. ஆகவே தெளிவாக இருந்தான். இயக்கத்தைப் பொறுத்தவரை எல்லோருக்குமே ஒரே சட்டம், ஒரே நியாயம் என்று. ஆகவேதான் அண்ணன் மறைந்த ஓரிரு மாதங்களுக்குள் இயக்கத்தின் முழுநேர உறுப்பினனாக முடிந்தது.

கிளிநொச்சியிலுள்ள திருநகர் தான் இவனது பிறப்பிடம். இயற்பெயர் சசிக்குமார். கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்ற இவன் க. பொ. த (சா/த) பரீட்சையில் 5 பாடங்களில் சித்தி எய்தியிருந்தான். கண்ணன் என்று செல்லமாக ஊர் மக்களால் அழைக்கப்பட்ட இவன் 10-8-90 அன்று இயக்கத்தில் சேர்ந்ததும் அன்பழகனாக உச்சரிக்கப்பட்டான். கிளிநொச்சியிலேயே பயிற்சியும் பெற்றான். அன்றிலிருந்து வீரச்சாவைக் தழுவிக்கொண்ட தினம்வரை கிளிநொச்சிக் காவலரண்களின் சுவாசம்தான் இவனுக்கு.

இவன் மிக அமைதியான சுபாவமுள்ளவன். அந்த சுபாவம்தான் வேவுப் பணியில் ஈடுபடும்போது பெரிதும் உதவியிருக்கிறது. கடமைக்குச் செல்லும்போது இவனுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களை ஒருமுறை சொன்னால் போதும் திரும்பவும் விளங்கப்படுத்தத் தேவையில்லை. சொல்லப்படும் விடயம் தொடர்பாக நூறு வீதம் இவனது புலன்கள் வேலை செய்யும், அதனால் தளபதிகளின் நம்பிக்கைக்கு உரியவனாக இருந்தான். அதேபோல் பழகும் விதத்தினால் சக போராளிகளின் நன்மதிப்பைப் பெற்றவன் இவன்.

இவனது பணிக்கு உரைகல்லாக இருப்பது ஆனையிறவு தட்டுவன் கொட்டிப் பகுதியில் நிகழ்ந்த தாக்குதல். இத்தாக்குதலில் 22 காவலரண்கள் எம்மால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலுக்கு சிறந்த முறையில் வேவுப்பணிகளில் ஈடுபட்டதற்காகத் தலைவர் பிரபாகரனின் கரங்களால் இவனுக்குப் பரிசு கிடைத்தது. இவனது வாழ்வின் உச்சக்கட்ட ஆனந்தத்தைச் சந்தித்தது அன்றுதான்.


லெப். அன்பழகன்

மீண்டும் அதே பணி - ஒரு நாள் சுற்றுலா விடுதிப் பக்கமாக எதிர்பாராத விதத்தில் இவன் எதிரிகளைச் சந்திக்க நேர்ந்தது. இந்நிலையில் முந்திக் கொண்டவரே உயிர் வாழ முடியும். இவன் முந்திக் கொண்டான். இரு இராணுவத்தினர் அந்த இடத்தில் பலியாகினர். எல்லோரும் இவன் தப்பி வந்ததனை நினைத்து மகிழ்ச்சி அடைந்தபோது இவன் மட்டும் மகிழ்ச்சி அடையவில்லை. இந்தச் சந்திப்புத் தனது பணிகளைத் தடங்கலுறச் செய்ததாகவே கருதினான். ஆயினும் மனம் சோரவில்லை, அடுத்த தாக்குதலுக்குத் தயாரானான்.

அடுத்த தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்பட்டது. திகதியும் தீர்மானிக்கப்பட்டது. இத்தாக்குதலுக்கான பயிற்சியும் நடந்தது. இப்பயிற்சியின் போது இவனுக்குச் சிறிய காயமேற்பட்டது. காயத்தின் வேதனைகளுக்கிடையில் சிரித்தபடியே இவன் கூறினான், "எனக்குக் காயம் பட்டிட்டுது. நான் ரத்தம் சிந்திட்டன். ஆனபடியால் நாங்கள் கட்டாயம் இதில வெல்லுவம்" (ஏற்கனவே ஒரு தடவை இவன் காயப்பட்டவன். 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆனையிறவுப் பகுதியில் நடந்த மோதலில் வயிற்றில் காயமடைந்தவன்.)

தாக்குதலுக்கான கடைசிப் பணி -இறுதியாக ஒரு முறை உளவு பார்க்க வேண்டும். 30-8-1992 அன்று இரவு இவன் புறப்பட்டான். "றெக்கி சரியில்லாட்டி பெடியள் கூடச் செத்துப் போடுவாங்கள். அதற்காக நான் உள்ள போய்ப்பாத்திட்டு வாறன். கடைசி றெக்கி வடிவா எடுக்க வேணும்" -சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டான். அப்போது தான் அவனைக் கடைசியாகப் பார்த்தது.

இலக்கத்தகடு கூட இல்லாமல் சயனைட்டுடன் மட்டுமே புறப்பட்டான். 30 ம் திகதி முடிந்து 31ம் திகதியானது. இவன் பணி மட்டும் முடியவில்லை. அதிகாலை 2, 30 மணி. எதிரியின் முள்ளுக்கம்பியை நீக்கி உள்ளே... பட்... பட்... பட்.

அன்பழகனைப் பற்றிய செய்தி இவ்வாறுதான் எமக்குக் கிடைத்தது. அந்த உப்பு மண் சுமந்த மாவீரர்களின் பெயருள் இவனது பெயரும் இணைக்கப்பட்டது.

"நான் ரத்தம் சிந்தீட்டன் - ஆனபடியால் இதில் நாங்கள் வெல்லுவம்" என்ற இவன் வார்த்தை இந்தத் தேசமெங்கும் கேட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. தொடர்ந்து கிடைக்கும் இராணுவ வெற்றிகள் இவனது வார்த்தையை உறுதிப்படுத்துகின்றன. ■

# தோட்டாவில் இருந்து விமானம்வரை
# ஆயுத கொள்வனவில் தரகுப் பணம்

வடக்கு - கிழக்கு யுத்தம் நீடித்துக் கொண்டேபோகும் இன்றைய நிலையில், பாதுகாப்புத் தொடர்பான உயர் அதிகாரிகளின் ஊழல்களும் குழறுபடிகளும் தற்போது வெளிவரத் தொடங்கியுள்ளன. தோட்டாவில் இருந்து விமானம் வரை கொள்வனவு செய்யப்படும்போது, பெருமளவு தரகுப் பணத்தைப் பெறுவதற்காக நாட்டின் செல்வத்தைச் சுரண்டியவர்களின் கதைகள் வெளிவருகின்றன.

"பாதுகாப்புப் படையினருக்குத் தேவையான உபகரணங்களைப் பெருமளவு அந்நியச் செலாவணியில் கொள்வனவு செய்யும் போது, அவை இராணுவத் தேவைகளுக்கு ஏற்றவாறு அல்ல உயரதிகாரி ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய தரகுப் பணத்தின் அடிப்படையிலேயே" தீர்மானிக்கப்படுவதாக தகவல்கள் தற்பொழுது கிடைத்துள்ளன. இதுவே உண்மையும் கூட.

முப்படைகளுக்கும் தேவையான யுத்தத் தளபாடங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்யப்படும் போது, கேள்விப் பத்திரங்கள் கோரப்படுவது சாதாரண நடைமுறை. இவ்வாறு சிறீலங்காப் படைகளுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரங்களைக் கோருவதற்குப் பொறுப்பானவராக இருந்தவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க ஆவார். இதற்குச் செயலாளராகக் கடமையாற்றியவர் மந்திரி சபையால் நியமிக்கப்பட்ட பிரிகேடியர் எலபான. இவரின் வேலை கேள்விப் பத்திரங்களை ஆராய்ந்து தரமானதும் பொருத்தமானதும், மலிவானதுமான பொருட்களைத் தெரிவு செய்வது ஆகும். ஆனால் கடந்த காலங்களில் இவ்வாறு செய்யப்படவில்லை என்பதை தற்போது கிடைத்துள்ள தகவல்கள் வெளிப்படுத்துகின்றன. இந்நடைமுறைகள் எவையும் கருத்திற்கொள்ளப்படவில்லை.

வை-8 ரக விமானக் கொள்வனவு தொடர்பாக நடைபெற்றது என்ன? உண்மையில் சீனத் தயாரிப்பான இந்த விமானத்தைக் கொள்வனவு செய்யப் பயன்படுத்தப்பட்ட பணத்தின் மூலம், முறையாகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டிருப்பின் இதற்குச் சமமான சேவையில் ஈடுபடுத்தக்கூடிய வேறு சிறந்த நவீன ரக விமானங்களைக் கொள்வனவு செய்திருக்க முடியும் என இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் எம். ஐ. -8 ரக உலங்கு வானூர்தி கொள்வனவு செய்ய முன்னர் எம். ஐ. -07 ரக இருபத்திரண்டு உலங்கு வானூர்திகளுக்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன. இதற்கு சீனாவின் 'ஙின்பிதாசி', சிங்கப்பூர் 'செம்பாவா', ரஸ்ய தூதராலயம் ஊடாக 'இன்டெராகு', பிரிட்டனின் 'க்லோவா இன்ரநாசனல்', அவுஸ்திரேலியாவின் 'ரேன்ச் அவுஸ்திரேலியா' என்பன கேள்விப் பத்திரங்களை அனுப்பி வைத்தன. ஆனால் இறுதியில் எம். ஐ. -8 உலங்கு வானூர்திகள் கொள்வனவு செய்ய முடியவானது. ரஸ்ய நிறுவனமான 'கொலாரியஸ் கோப்பரேசன்' இதற்காக ரூபாவில் கொடுக்கல் வாங்கல் செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டது.

ஆனால், கொள்வனவு செய்யப்பட்ட எம். ஐ. -8 ரக உலங்கு வானூர்திகளைப் பரீட்சித்துப் பார்க்க ரஸ்யா சென்ற தொழில்நுட்ப நிபுணர் குழுவினர் இவை பயனற்றவை எனக் கூறிவிட்டனர். இதனால் எம். ஐ. 8 உலங்குவானூர்தி கொள்வனவு இடைநிறுத்தப்பட்டது. தொடர்ந்து எந்தப் பரிசீலனையும் இன்றி எம். - ஐ. 7 உலங்கு வானூர்தி கொள்வனவு செய்யப்பட்டது.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விழிகள் திறக்கின்றன



சிறு கதை

சுந்தரி
தமிழீழம்

நிர்மலாவுக்கு திருப்தியாயிருந்தது. எவ்வளவு காலமாக அம்மாவும் இந்த வயது போன காலத்தில் அப்பா இல்லாமல் இந்தக் கல்யாணத்தை ஒப்பேற்றிவிட்டாள்.

இனி அவளுக்குப் பின்னாலிருக்கும் இரண்டு தங்கைகளுக்கும் வழி விட்டுக் கொடுத்தது மாதிரித்தான்.

மேசையிலே படத்தில் சிவரூபன் சிரித்துக் கொண்டிருந்தான். என்னதான் கண்ணால் காணாவிட்டாலும் இனி அவளுடைய கணவன் அவன்.

"மச்சாள் ரீயைக் குடியுங்கோவன்". மைத்துனி சுமதி கூறிவிட்டுச் சென்றாள். மேசையிலே சுடச்சுட வைக்கப்பட்டிருந்த தேநீரைச் சிறிது சிறிதாக அருந்தியவளுக்கு, அழுகைதான் வந்தது.

"இனிப்போனால் எப்ப இங்கு வரப்போகிறேனோ" அம்மாவையும், தங்கைகளையும் விட்டுப் போவதென்றால் கவலையாகத்தான் இருக்கும்.

அதோட நேற்று வந்த ரவியும், சுமதியும், மாமாவும், மாமியும்தான்.

"அங்கைபோனா கைப்பிடிக்கப் போகும் சிவரூபனையும், அண்ணன் ராசனையும் பார்க்கலாம்தானே.

இருபத்தெட்டு வருட காலம் அம்மாவுடனும் தங்கைகளுடனும் பிரியாது இருந்தாகிவிட்டது. அங்கே போனால் எட்டு வருடங்களாகியும், தனக்கென ஒரு வாழ்க்கையையும் தேடிக்கொள்ளாமல் வெளிநாட்டில் உழைத்துக் கொண்டிருக்கும் அண்ணனையெண்டாலும் பார்க்கலாம்தானே."

அவளது மனம் ஓரளவு திருப்திப்பட்டது.

முந்தநாள்தான் நிர்மலாவுக்குத் திருமணம் நடந்தது. அதாவது மணமகன் இல்லாத திருமணம். சுவிசில் இருக்கும் சிவரூபனுக்கும், ஈழத்தில் இருக்கும் நிர்மலாவுக்கும் சீதன ஆதனங்கள் சரிபார்த்து, ஒரு மாதிரி சடங்கையும் முடித்து மாப்பிள்ளை வீட்டில் கொண்டு வந்து, சுற்றஞ்சூழ விட்டு விட்டுப் போனார்கள் நிர்மலாவின் பெற்றோர்கள். எல்லாம் சரி. இனி இவள், பார்சலில் அனுப்பப்படுவதுதான் மிச்சம்.

'அம்மி மிதித்து அருந்ததி பார்த்து கழுத்திலே கணவன் நாணேற்றும்' நாளைத்தான் அவள் எதிர்பார்த்தாள்.

ஆனால் இப்படி வெளிநாட்டு மாப்பிள்ளையுடன் போலிக் கல்யாண வீடு தனக்கும் நடக்கும் என்பதை எதிர்பார்க்கவில்லை. இந்த நிகழ்ச்சியை நினைத்தால், சில வேளை அவளுக்குச் சிரிப்புத்தான் வரும்.

இதில் விருப்பு இல்லாவிட்டாலும், அவளுக்கு வெறுப்பு வந்துவிட முடியாது. ஏனெனில் ஆறு வருடங்களாக உள்ளூர் மாப்பிள்ளை பார்த்துப் பார்த்து அம்மாவும் சரியாக அலுத்துவிட்டாள். முற்றாகும் தறுவாயில் யாராவது குழப்பி விட்டுவிடுவார்கள். ஆரம்பத்தில் இதையெல்லாம் நினைத்தால் தற்கொலைதான் செய்ய வேண்டும் போலிருக்கும் அவளுக்கு.

தங்கையின் வாழ்வு எங்கே நாசமாகி விடுமோ என்ற பயமும், அம்மாவின் அழுத முகமும் ஞாபகத்தில் வரவே பேசாமல் இருந்துவிடுவாள்.

ஆம்! அவள் ஏதாவது செய்ய வேண்டுமென்றால், அந்த நான்கு வருடங்களுக்கு முன்பல்லவா செய்திருப்பாள்.

அப்பொழுதெல்லாம் மிகவும் பயங்கரமான நாட்கள். நிர்மலாவின் தங்கைகள் பாடசாலைக்குச் சென்றுவிடுவார்கள். அம்மாவும் இவளும் தனியே முழுசிக் கொண்டுதான் வீட்டிலிருப்பார்கள். அல்லது கந்தவனம் மாமாவின் வீடுதான் தஞ்சமளிக்கும். வயலுக்குள் தனித்திருக்கும் அந்த வீடு உண்மையிலேயே பயங்கரமானதுதான்.

வேலி முறிக்கும் சத்தம்.

இரவில் யன்னலடியில் நிழல் தெரிந்தால் இதயம் நின்றுவிடும்போல் துடிப்பு. எவ்வளவு கொடுமையான நாட்கள் அவை.

"ஏன்தான் இந்தியன் இந்த நாட்டுக்கு வந்தானோ"

அன்று அம்மா சந்தைக்குப் போய்விட்டாள். தங்கைகளும் பாடசாலை சென்றுவிட்டனர். அடுப்பில் வைத்த கறியை இறக்கிவிட்டு கந்தவனம் மாமா வீடு செல்வதற்கிடையில், வாசலில் அரவம் கேட்டது. குசினிக்கதவால் வெளியே சென்று முற்றத்தில் நிற்பதற்கிடையில் பத்துப் பதினைந்து பேர் முற்றத்திலும், வேலிகளுக்கிடையிலும், வீட்டுக்குள்ளும் நின்றுகொண்டு இருந்தனர்.

நிர்மலாவுக்கு வயிற்றைக் கலக்கியது. அன்று அவங்களுடைய முகத்தில் ஒரே அகோரம். வீட்டுக்குள் சோதனையிட்டவன், இரவு தலையணைக்குக் கீழ் வாசித்துவிட்டு வைத்திருந்த நோட்டீசை இவளுக்கு முன்னே நீட்டினான்.

பதில் சொல்வதற்கிடையில், பிடரியை ஒரு கரம் தாக்கியது. பூரணம்மாமி ஓடிவந்து பிடிப்பதற்கிடையில் மயங்கி விழுந்துவிட்டாள்.

கண்விழித்துப் பார்த்தபோது, அம்மா அருகிலிருந்து அழுதுகொண்டிருந்தாள். பூரணம்மாமியோ நடந்ததைப் பெரிசுபடுத்தி ஏதோவெல்லாம் வியாக்கியானம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

"நான் அப்பவே சொன்னனான் உந்தக் கண்டறியாத நோட்டீசுகளை வைச்சிராதை எண்டு. எல்லாம் அனுபவப்பட்டாத்தான் தெரியும்".

பூரணம்மாமி எரிகிற வீட்டில் எண்ணெய் ஊற்றிக்கொண்டிருந்தாள்.

அந்தச் சம்பவத்திற்குப் பின்பும் அடிக்கடி இராணுவச் சுற்றிவளைப்புக்கள், அந்த ஊரைக் கலக்கிக் கொண்டிருந்தன.

இதனால், கொஞ்ச காலம் கிளிநொச்சியில் தங்கியிருந்த பின்னர்தான் ஊருக்குத் திரும்பியிருந்தாள். அதற்கிடையில் ஊரில் இவளைப்பற்றி ஏதேதோ கதைகள் பரவியிருந்தன. முன்பு இனிக்க இனிக்கப் பேசிக் கொண்டு வரும் கந்தவனம் மாமாவின் மகன் ராஜன், இப்போதெல்லாம் இவளின் வீட்டுப்பக்கம் எட்டியும் பார்ப்பதில்லை. கூடியவரை நிர்மலாவின் கண்ணுக்குப் புலப்படாதவனாகவே இருந்தான்.

அடுத்த ஒரு வருடத்துக்குள் அவனும் வெளிநாடு போய்ச் சேர்ந்துவிட்டான்.

இதற்குப் பின்பு அம்மா பேசிய ஒவ்வொரு சம்பந்தங்களும் முற்றாவதற்கிடையில் குழம்பத் தொடங்கின. முன்பு இவளை வலியக் கேட்டுவந்தர்களும் கையைக் கழுவிவிட்டனர்.

இரவில் தனியாக இருந்து யோசித்தால், அம்மா வந்து விம்மிக் கொண்டிருப்பாள்.

"பிள்ளை ஒண்டும் செய்து போடாதை. உனக்குப் பிறகு ரெண்டு தங்கச்சிகள் இருக்குதுகள். அதுகளின்ர வாழ்க்கையைப் பாழாக்கிப் போடாத". அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். "ஏனிந்த அம்மா ஏதோவெல்லாம் கற்பனை பண்ணிக்கொண்டு பயப்படுகிறா. எனக்கு என்ன நடந்து போச்சுது." சிலவேளை எரிச்சலும் வரும் அவளுக்கு.

ஒருவாறு, ஆறு வருடங்களுக்குப் பின்பு இந்த இடம் சரி வந்தது. இதையும் யாராவது குழப்பிப் போடுவார்களோ என்று பயந்து அம்மா எத்தனையோ நேர்த்திக் கடன் வைத்திருந்தாள்.

ஆலடிப் பிள்ளையாருக்கு இவளைக் கொண்டு பாற்செம்பு எடுக்கச் செய்தாள்.

இப்போது சிவரூபன் வீட்டில் நிர்மலா மணப்பெண்ணாக வந்திருக்கிறாள்.

நிர்மலாவுக்கு இன்று வீட்டுக்குப் போகவேண்டும் போலிருந்தது. ரவியோடு சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதுதான் ராஜேசைக் கண்டாள்.

அவள் வீட்டுக்கு வந்தது அம்மாவுக்கு சந்தோசம். அம்மன் கோவிலுக்கு அர்ச்சனை செய்த குங்குமத்தை எடுத்து வந்து நெற்றியில் இட்டுவிட்டாள்.

ஊர்ப்புதினங்கள் கதைத்துக் கொண்டிருந்தபோதுதான் ராஜேசின் கதையும் தட்டுப்பட்டது.

"அதுசரி, ராஜேசைக் கண்டனான். இப்பவெல்லோ வெளிநாட்டுக்கென்று போனவள்"

"அதையேன் கேட்கிறாய். மூன்று லட்சம் சீதனம் குடுத்து வெளிநாட்டுக்கும் அனுப்பிவிட, பொம்பிளை சரியில்லையெண்டு திருப்பி விட்டினமாம்".

தன்னுடைய மகளும் அப்படியானால்' என்ற மனப்பயம் அவளிடம் இல்லையோ?....



அம்மாவின் அறியாமையை நினைக்க கவலையாக இருந்தது அவளுக்கு.

அம்மா ராஜேசுக்காகப் பரிதாபப்பட்டுக் கதைத்தாள்.

ராஜேசும் அண்மையில்தான் படிப்பித்தற் தொழிலைக் கைவிட்டுத் திருமணத்திற்காக வெளிநாடு சென்றவள். அம்மாவுக்கு நிர்மலாவின் வாழ்வில் நல்ல நம்பிக்கை. சிரித்துச் சந்தோசமாகவே இவளை வழியனுப்பி வைத்தாள்.

மாமி வீடு வந்த நிர்மலா யாருடனும் கதைக்கவில்லை. சாப்பாடும் தேவைப்படவில்லை. நேரத்தோடு படுக்கவும் சென்றுவிட்டாள்.

அதிகாலை வீங்கிய கண்களுடன் எழுந்து வெளியில் வந்தபோது மாமா பத்திரிகையுடன் ஈசிச்சேரில் இருந்தார். மாமியும் ரவியும் அவரைச் சூழ நின்று கொண்டு பேப்பரைத் துளாவிக் கொண்டிருந்தனர்.

முகங்கழுவிவிட்டு சுமதி தந்த தேநீரை அருந்திக் கொண்டிருந்தபோதுதான் மாமி சொன்னார்"நேற்றும் இரவு கடலுக்கை அமளியாம். இப்போதைக்கு போட்டும் ஓடாதுபோலப் பிள்ளை".

"ஓமோம். நேற்று ஒரே அடியாம். சனமும் செத்ததாம். அதுதான் இப்போதைக்கு போட் ஓடாது போலக் கிடக்குது."

எல்லோருக்கும் அவளைக் கெதியாய் அனுப்புவதுபற்றித்தான் கவலை.

அவளது மனம் ஒரு நிலையில்லாது தடுமாறியது.

"அம்மா.... தங்கச்சியவை...."

இதுக்குள்ள ஒவ்வொரு நாளும் கேட்கும் வெடிச்சத்தங்கள்... பழகிப்போன வாழ்க்கை...

ஆனாலும் அதில் ஏதோ ஓர் நிறைவு.... இதை விட்டுவிட்டு எத்தனையாயிரம் மைல்கள்...

சோளகக்காற்றில் புழுதி வாரி அள்ளித் தெளித்தது. அவளது கண்கள் கலங்கித் தவித்தன. இருப்பத்தியெட்டு வருடங்கள் பிறந்த மண்ணோடு ஒட்டிய வாழ்க்கை....

மாமி அருகில் வந்தாள். "ஏன் பிள்ளை அழுகிறாய்? அது ஒரு கிழமையாலை போட் ஓடுந்தானே? பிறகென்ன... கிளாலி கடந்தா உடனை போய்ச் சேந்திடலாம்."

அவளின் மனம் புரியாத மாமி, கதைத்துக்கொண்டிருந்தாள்.

நிர்மலா வெறுமையாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஏதோ ஓர் உறுதி தெரிந்தது. மாமி அவளை விநோதமாகப் பார்த்தாள். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உரு அமிழ்ந்த
# மீண்டும் உ

## எதுவரினும் தலைவரைக் காப்போம்

**1982** ஆம் ஆண்டு.

இற்றைக்கு பதினொரு ஆண்டு களுக்கு முன்பு தலைமறைவு கெரில்லாக்களாக எமது மூத்த போராளிகள் வாழ்ந்த காலம். புலிவீரர்கள் தம்மை யாரென அடையாளம் காட்டாத காலம். அந்தக் காலத்தில் ஒரு நாள்......

சென்னையில் தலைவர் பிரபாக ரன், தமிழ்நாட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார். தலைவ ரின் புகைப்படத்தையே கண்டி ராத சிங்களப் படைகளுக்கு அவர், சென்னையில் பொலிஸ் காவலில் உள்ளார் என்ற செய்தி தேனாக இனித்தது. சந்தர்ப்பத் தைப் பயன்படுத்த படாதபாடுபட் டனர்.

தலைவரை தம்மிடம் ஒப்படைக் கும்படி சிங்கள அரசு இந்தியா விடம் கோரிக்கை விடுத்தது. இந்திய அரசு இக்கோரிக் கையை ஏற்று விடுமோ? என்ற அச்சம் புலிகளின் மூத்த உறுப் பினர்கள் மத்தியில் ஏற்பட்டது.

தமிழ் நாட்டில் உள்ள சில கல் லூரிகளின் மாணவர்கள், தலைவர் பிரபாகரனை நாடுக டத்தக்கூடாது என ஆர்ப்பாட்டம் செய்தனர். தமிழ் நாட்டின் சில அரசியல்வாதிகளும் இந்த ஆர்ப் பாட்டங்களுக்கு ஆதரவு தெரி வித்தனர்.

ஆயினும், எமது தோழர்களுக்கு உள்ளூரப்பயம். தற்செயலாக சிறீலங்கா அரசின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால்.....? எப்படித் தடுக்க முனையலாம்?

எனக்கலந்துரையாடினர். மண் டையைப் பிய்த்தனர்.

இறுதியில், லெப். கேணல். - பொன்னம்மானும் கப்டன் ரஞ் சனும் இணைந்து ஒரு முடிவுக்கு வந்தனர். தங்களது உயிர்க ளைத் துறந்து தலைவரைப் பாதுகாக்க முடிவெடுத்தனர். சிறீலங்கா அரசிடம் தலைவரை ஒப்படைக்க இந்திய அரசு முடி வெடுத்தால்.....

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கோபுரத்தில் ஏறி, உச் சியில் நின்றபடி தலைவரை இலங்கை அரசிடம் ஒப்படைக் கக் கூடாது என, இந்திய அர சுக்கு நிர்ப்பந்தம் கொடுப்பது -

பேச்சுக்கு செவி சாய்க்காவிட் டால் உச்சியில் இருந்து முத லில் ஒருவர் கீழே குதித்து தற் கொலை செய்வது -

அதற்கும் இணங்கிவராவிட்டால் அடுத்தவரும் குதித்து தற் கொலை செய்வது -

இந்த தியாக முயற்சி தமிழ்நாட் டைக் கிளர்ந்திடச் செய்து தலைவரைப் பாதுகாக்கும் என நம்பினர். ஆனால் தமிழ் இனத் தின் பேரதிஸ்டம் அவ்விதமான எந்தச் சம்பவமும் நடைபெற வில்லை. தலைவர் பாதுகாக்கப் பட்டார்.


ஈழத் தமிழினத்தின் இணையற்ற பெரும் தலைவனை, தம் உயி ரைக் கொடுத்துக் காக்க முயன்ற அந்த மூத்த தோழர்கள் இரு வரும் இன்று இல்லை. வெவ் வேறு சம்பவங்களில் வீரச்சா வடைந்துவிட்டனர். ■


கப்டன் சிதம்பரம்


கப்டன் மில்லர்


லெப். கே


மேஜர் காந்தரூபன்


கப்டன்

தற்கொலைக் கொலையாளி ஒருவரின் கொள்கைத் தீவிரத் திலிருந்து யாருக்குமே பாதுகாப்பு வழங்குவது என்பது இயலாத காரியமாகும். தமிழீழக் கொள்கைக்காக உயிரிழக் கத் தயாராக இருப்பது -குறிப்பாக தற்கொலை செய்யவும் தயாராக இருப்பது -புலிப்படையினர் கடைப்பிடித்துவரும் தலையாய சீலமாகும்.

பி. பி. சி. வானொலி
16. 11. 1992

'விடுதலைப் புலிகள், எங்கேயும் எப்போதும் விரும்பும் சமயத்தில் தாக்குதல் நடத்த வல்லவர்கள். தீர்க்கமான, இறப்பதற்குத் துணிந்த அவர்களின் தற்கொலைப் படையின ரின் தாக்குதலைத் தடுப்பது என்பது சாத்தியமற்றதாகும்.

- அனுருத்த திலகசிறி
(அரசியல் விமர்சகர்)
சண்டே ஒப்சேவர் - 29. 11. 1992

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும் -உலகின் எந்தத் தொழில்நுட்பத்தாலும் தடுக்க முடியாததும் - உலகில் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும்தான் எங்களது கரும்புலிகளின் மனோபலம். அடிமைப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசியத்தின் இயக்கு சக்திக்கு உந்து விசையாக விளங்கும் ஒரு உயரிய அரசியல் போர் வடிவம்தான் கரும்புலிகள்.

## யூலை 5 கரும்புலிகள் நாள்

முதலாவது கரும்புலி களத்தில் இறங்கிய யூலை 5ம் திகதியை கரும்புலிகள் நாளாக விடுதலை புலிகள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

கரும்புலி வீரர்களின் அதியுயர் தியாகத்தை - வீரத்தை -கௌரவிக்கும் ஒரு தினமாகவும், அந் மறத்தமிழ் வீரர்களின் ஆச்சரியமூட்டும் ஆன்ம உறுதியை -வல்லமையை -மக்களுக்கு உணர்த்தும் ஒ நாளாகவும் கரும்புலிகள் நாள் கொண்டாடப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவை கருதி காலத்துக்குக் காலம் தலைவர் பிரபாகரன் அவர்க புதிய புதிய போர் உபாயங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை வளர்த் வருகின்றார். அத்தகைய போர் உபாயங்களில் ஒன்றுதான் கரும்புலித்தாக்குதல் முறையாகும்.

1987 ஆம் ஆண்டு ஆடி 5ம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந் சிங்களப் படை முகாம் மீது முதன் முதலில் கரும்புலித்தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் ஒரு இராணுவ நெருக்கடிக்குள் சிக்கியிருந்த எமது விடுதலைப் போராட்ட திற்கு இந்தக் கரும்புலித்தாக்குதல் ஒரு திருப்பு முனையைக் கொடுத்துடன் புதியதொரு உத்வேகத்தை யும் வழங்கியது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கரும்புலித்தாக்குதலை வெடிமருந் வண்டியை ஓட்டிச் சென்று எதிரி முகாமினுள் மோதி, தன்னுடன் எதிரி முகாமையும் தகர்த்தெறிந் முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் ஒரு மாபெரும் சாதனையை நிகழ்த்தினார். அன்றிலிருந்து இன் வரை பல கரும்புலித்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுவிட்டன.

ஒவ்வொரு கரும்புலித் தாக்குதலும் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னோக் உந்தித் தள்ளி, வெற்றியின் பாதையில் குறுக்கே நிற்கும் தடைக்கற்களைத் தகர்த்தெறிகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கரும்புலிகள்
# ிர் பெறுவர்




னல் போர்க்



மேஜர் டாம்போ



கப்டன் ஜெயந்தன்



வினோத்

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of
TAMIL EELAM



கப்டன் கொலின்ஸ்

அதாவது, தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை வேகமாக நகர்த்தப் பேருதவியாக இருக்கும் புலிகளின் ஒப்புவமை அற்ற ஒரு போர்க்கருவிதான் இந்தக் கரும்புலிகள். இது போராட்ட விரோத சக்திகளை அழித்து எதிரிப்படையைச் சிதறடித்து இறுதி வெற்றியை எளிதாக்கிக் கொடுக்கின்றது.
தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கரும்புலித்தாக்குதலின் தேவை பற்றிய எண்ணம் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்திலேயே தலைவரிடமிருந்தது.
குறைந்த உயிரிழப்புக்களுடன் பெரிய வெற்றிகளை அடையவேண்டிய அவசியம் எமது போராட்டத்திற்கு உண்டு.

சிங்கள இனத்தைப் போலல்லாது நாம் எண்ணிக்கையில் மிகவும் குறைந்த ஒரு இனம். அதுபோலவே எதிரி இராணுவத்துடன் ஒப்பிடும்போது, குறைந்தளவு போராளிகளையும் சிறியளவில் போர்க்கருவிகளையும் கொண்டுள்ள ஒரு விடுதலை இயக்கம்.
எனவே, போராளிகள் மத்தியில் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்களை இயன்றளவு குறைத்தும் அதேவேளை பாரிய வெற்றிகளையும் தேடிக்கொள்ள வேண்டிய தேவை எமது போராட்டத்திற்கு உள்ளது. அப்படி நிகழ்ந்தால்தான் நாம் இறுதி வெற்றியை -தமிழீழத்தின் பிறப்பைக் காணமுடியும்.
கரும்புலித்தாக்குதல் முறை ஈழத் தமிழினத்துக்கு ஏற்பட்டுள்ள வரலாற்றுத் தேவையை நிறைவேற்றி வைக்கக்கூடியது.
ஒவ்வொரு கரும்புலிகளும் வெடிமருந்தைச் சமந்து கொண்டு அணுகுண்டைவிட அதிகளவு ஆற்றல் வாய்ந்த ஆன்ம உறுதியுடன் எதிரி இலக்குமீது பாய்ந்து, தன்னுடன் சேர்த்து எதிரிகளையும் அழித்து மாபெரும் தியாகம் புரிகின்றனர்.

பெரும்தொகைச் செலவிலான நவீன போர் ஆயுதங்களுடன் அல்லது பெரும் எண்ணிக்கையிலான போராளிகளது இழப்புடன் செய்து முடிக்கப்படவேண்டிய ஒரு இராணுவ வெற்றியை ஒரு கரும்புலி அல்லது ஓரிரு கரும்புலிகள் செய்து முடிக்கின்றனர். அதேவேளை, அணுகமுடியாத இலக்குகள் என்ற ஒரு விடயம் கரும்புலிகளினது அகராதியில் இல்லை. அதுபோலவே கரும்புலித்தாக்குதல்களைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையும் எதிரிகளின் கூடாரத்தில் இருக்கமுடியாது.
இன்று, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு பெரும் பலமாக கரும்புலிகள் அணி மாறிவிட்டது.
இது தமிழீழத்தின் பிறப்பிற்கு மேலும் மேலும் உறுதியும் வேகமும் சேர்க்கின்றது. ■

காற்றில், கடல் நீரில்
காவியமாய் கரைந்தவர்;
விலங்கொடிக்கும் வேகத்துடன்
வெடிமருந்து சுமந்தவர்; - தம்
ஒப்பற்ற தியாகத்தால் எம்
உள்ளங்களில் உயர்ந்தவர்;
நினைத்தால் நெஞ்சு வெடிக்கும்
நினைவுகளைத் தந்துவிட்டு
நித்தியமாய் இந்த மண்ணில்
நிலைத்து விட்டவர்;
நாடுறங்கும் நல்லிரவில்
நாற்றிசையும் நடுநடுங்க,
நீள்கடலில் மேல்மிதந்து மோதி
நீசர்களை அழித்தவர்;

சூழ்பகைவர் முகாம்களைத்
தூளாக்கி எரித்தவர்;
முதுகிலோ வெடிமருந்து - இவர்
முகத்தில் மட்டும் முழுநிலவு - தமிழ்
சந்ததியைக் காப்பதிலே
சந்தோசம் கொண்டதனால்,

சாவுக்குச் சவால்விட்டுச்
சரித்திரத்தில் பதிந்தவர்;
அன்னை தமிழவளை
அரியணையில் ஏற்றுதற்கு
தம்மை இந்த மண்ணுக்கே
தானமாகத் தந்துவிட்டார்!
மண்விடிய வேண்டுமென்ற - இவர்

மனக்கனவுகள் பலித்திட,
துண்டு துண்டான உடற்
துகள்கள் உயிர் பெற்று,
மீண்டும் இந்தமண்ணில்
மில்லராய்.....போர்க்காய்.....
வினோத்தாய்.....ஜெயந்தனாய்.....
இன்னும் ஆயிரம் கரும்புலிகளாய்
மறுபிறப் பெடுத்துவரும் - எங்கள்
மண்விடியச் சமராடும்!
உரு அழிந்த கரும்புலிகள்
உயிர்பெற்று மண்ணின்
விடுதலைக்கு வேராவர்!

■ ஆதிலட்சுமி சிவகுமார்

## உறங்கும் உண்மை

ஓரிரண்டு பேருக்குள்ளே
உறங்கும் உண்மைகள் - இது
ஊருலகம் அறிந்திடாத
உறவின் தன்மைகள்
பேரிரைச்சலோடு ஒரு
வெடி வெடித்திடும் - இங்கு
போகவிடை கொடுத்த நெஞ்சம்
துடிதுடித்திடும்.

உங்களுக்கு மட்டும் எங்கள்
உணர்வுகள் புரியும்
ஊமைகளாய் நாமிருக்கும்
காரணம் தெரியும்
பொங்கும் மகிழ்வோடு
போய்விடுவீர்கள்
போனபின்னர் நாமழுவோம்
யாரறிவீர்கள்?

தாயகத்து மண்ணைத் தாலே
காதலித்தீர்கள்.
சாவையெதிர் பார்த்துப் பார்த்துக்
காத்திருந்தீர்கள்
பாயும் கரும்புலிகளாகிப்
பகை முடித்தீர்கள்
பாதகரின் நெஞ்சினிலே
போய் வெடித்தீர்கள்.

கல்லுக்குள்ளே ஈரமுண்டு
கசிவதும் உண்டு
கரும்புலிகள் விழிகளில் நீர்
வழிவதும் உண்டு
அல்லும்பகல்
அண்ணன் பெயரை
உச்சரித்தீர்கள்
அந்தப் பெயர் சொல்லி மேனி
பிச்செறிந்தீர்கள்.

■ புதுவை இரத்தினதுரை

**தமிழினத்தின் தேசிய தினங்களில் ஒன்றான "கரும்புலிகள் நாள்" 5.7.93 இல் தமிழீழமெங்கும் உணர்ச்சிபூர்வமாக நினைவுகூரப்பட்டது. அதை யொட்டி "விடுதலைப்புலிகள்" பத்திரிகையில் மாவீரர் களான கரும்புலிகள் பற்றி வெளிவந்த கட்டுரைகள் இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரும்புலிகளின் வாழ்வில்....

"என்ர மகன் எதுசெய்தாலும் நன்மைக்காகத்தான் செய்வான் எண்டது, என்ர நம்பிக்கை தம்பி. அதனால நான் அவன்ர போக்குகளைப்பற்றி பெரிசா யோசிக்கிறதில்லை." மில்லரின் அம்மா தன் பிள்ளையைப் பற்றி பெருமையோடு கூறிக்கொண்டிருந்தாள்.

"அவனொரு துடியாட்டமான பெடியன். ஒரு இடத்தில ஆறுதலா இருக்கிறதைக் காணேலாது. ஏதாவது ஒண்டு செய்துகொண்டுதான் இருப்பான். மண்ணைக் கிண்டுவான், பற்றறியையும் வயரையும் வைச்சு முடிஞ்சுகொண்டிருப்பான். அல்லது அப்பாவின்ர கார் 'பொனட்டை' திறந்துபோட்டு, அதுக்குள்ள ஏதாவது கழட்டிப் பூட்டிக்கொண்டிருப்பான்....."

## பெருமை

அம்மா தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

"மற்ற ஆக்களுக்கு உதவி செய்யிற பழக்கம் அவனிட்ட சின்னனில இருந்தே இருந்தது. ஆர் என்ன உதவி கேட்டாலும் உடன போய் செய்துகொடுப்பான். முயற்சியும், இரக்கமும் அவன் பிறக்கும்போதே அவனோட கூடப்பிறந்ததுகள் தம்பி."

மில்லர் சிறுவனாக இருந்த நாட்களில் அப்பா கார் ஓட்டும்போது அருகிலிருந்து அவதானித்துக் கொண்டிருப்பான். அப்பா இல்லாத நேரங்களில் அதையே திரும்பச் செய்து பார்க்கத் துவங்கினான். அடிக்கடி நின்ற இடத்திலேயே இயங்கிய கார் பின்பு மெல்ல உருளத் துவங்கியது. நாள் செல்லச் செல்ல அகலமான வீட்டு முற்றத்தில், முன்னுக்கும் பின்னுக்கும் போய் வந்தது. ஒரு நாள் அம்மா சமையல் அறையில் வேலையாக இருந்த போது, கார் வீதியிலே ஏறி விக்கி விக்கி ஓடத் துவங்கிவிட்டது. அம்மாவைப் பயம் பற்றிக் கொள்ள வீதியிலே ஓடி வந்து நின்று பார்த்தாள்.

வீட்டிற்குள் வந்தவன் மெதுவாக ஒழிந்து ஒழிந்து பின்னால்போய் கார் 'ராங்கிற்குள்' குழாயைச் செலுத்தி வாயால் இழுத்து பெற்றோல் எடுத்து அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு ஒரு அசல் அப்பாவியைப் போல் அம்மாவுக்கு முன்னால் வந்து நின்றான். நடந்ததைக் கண்டபோதும் அம்மா அவனிடம் எதுவும் கேட்கவில்லை. அம்மாவுக்கும் அது பிழை மாதிரித் தெரியவில்லை.


தன்பிள்ளை எதுசெய்தாலும் நன்மைக்காகவே செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை. அதனால் அவனது செய்கைகளைப் பற்றி அம்மா கவலைப்படுவதில்லை.

காலச் சக்கரம் தன்பாட்டில் உருண்டு சென்றது. இப்போது 1984 இன் ஆரம்பம். எங்கள் தேசத்தில் அடிக்கடி வெடியோசை கேட்கத் தொடங்கியது. எங்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை மாறியபோது, அது மில்லர் வீட்டிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. மில்லரின் போக்கும் மாறிவிட்டது.

முன்பு போல் பழைய நண்பர்களுடன் மாந்தோப்பில் விளையாடுவது நின்றுபோனது. இப்போது புதிய நண்பர்களுடன் வெளியில் திரியத் துவங்கினான்.

ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து அவசர அவசரமாக ஓடி வந்த தம்பி சொன்னான், "அம்மா... அம்மா, அண்ணா சந்தியடியில நோட்டீஸ் குடுத்துக் கொண்டு நிக்கிறான்."

அம்மாவுக்கு உள்ளூரப்பயம் தான். ஆனாலும் அம்மா அவனைப் புரிந்து கொண்டாள். அவனின் புதிய நண்பர்கள் அவனைத் தேடி வீட்டிற்கு வருவார்கள். மில்லர் அவர்களோடு புறப்பட்டுப் போவான். இப்படிச் செல்கிறவன் சில நேரங்களில் ஒரு சில இரவுகள் கழிந்தும் வருவான். அம்மா எல்லோருக்கும் சாப்பாடு தருவாள்.



மரத்தில் செதுக்கப்பட்ட கரும்புலி கப்டன் மில்லரின் உருவப்படம்

இப்படித்தான் இன்னுமொரு நாள். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், எரிபொருள் தீர்ந்து போனதால் வீட்டிற்கு முன்னால் நின்று திண்டாடிக் கொண்டிருந்தார்கள். எங்கோ இருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த மில்லர் அவர்களிடம் விடயத்தைக் கேட்டறிந்தான்.

எல்லோரும் சிரித்துக் கதைத்து சந்தோசமாகச் சாப்பிடுவதைப் பார்த்து அம்மா சந்தோசப்படுவாள். இது வழமையாகிப் போனது.

இப்படித்தான் ஒருநாள், அந்த நண்பர்களோடு புறப்பட்டுப் போனவன் திரும்பிவரவில்லை. "பயிற்சி முகாமில நிக்கிறான்" என நண்பன் ஒருவன் வந்து சொன்னான். வீட்டில் எல்லோரும் அழுதார்கள். அம்மாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளும் அழுதாள். இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள். தன்பிள்ளை எது செய்தாலும் நன்மைக்காகத்தான்



**கரும்புலி**
**கப்டன் மில்லர்**
(வல்லிபுரம் வசந்தன்)
துன்னாலை, யாழ்
1. 1. 1966 - 5. 7. 1987

செய்வான் என்பது அம்மாவின் நம்பிக்கை.

அந்தத் தாய் அந்த இறுதி நாளை நினைத்துப் பார்க்கிறாள். "அது 'ஒப்பரேசன் லிபரேசன்' காலம். அந்த நேரம் இங்க எல்லா இடத்திலயும் ஆமி. அதனால இரவில நாங்கள் நேரத்தோடேயே படுத்திடுவம். அண்டைக்கும் நாங்கள் படுத்திட்டம்...."

"... திடீரென வீடெல்லாம் அதிரப் பெரிய ஒரு குண்டுச் சத்தம் எங்களை திடுக்கிட்டு எழுப்பிச்சுது. கொஞ்ச நேரம் சண்டை நடக்கிறதைப் போல சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பிறகெல்லாம் அமைதியாயிட்டுது.

பெடியள் நெல்லியடிப்பக்கம் ஆமிக்கு நல்லா அடி குடுத்திருக்கிறாங்கள் போல கிடக்குது என்று எங்களுக்குள்ள கதைச்சுப் போட்டு நாங்கள் படுத்திட்டம். அடுத்த நாள் காலையில நெல்லியடிப்பக்கம் இருந்து வந்த ஒருத்தர் ஊருக்குள்ள சொல்லி அந்தக் கதை மெல்ல மெல்ல என்ர காதுக்கை வந்தபோது தான் தெரியும்.

முதல் நாள் வீட்டை உலுக்கி என்னை நித்திரையால் திடுக்கிட வைத்த அந்தக் குண்டுச் சத்தம்..... என்ர பிள்ளையையும் ...

அப்ப அழவும் ஏலாது. எல்லாப் பக்கதிலயும் ஆமி... அறைக்குள்ள போயிருந்து எனக்குள்ள மட்டும் குமுறிக் குமிறி அழுதன்.

அயலாக்கள் பின்பக்கத்தால வந்து எங்களுக்கு ஆறுதல் சொல்லுவினம்.

றோட்டால ஆமி வாகனங்கள் வாற சத்தம் உறுமிக் கொண்டு கேக்கும். மெதுவாக பின்பக்கத்தால கலைஞ்சு போயிடுவினம்..... பிறகு வருவினம்....

ம் .... ம்.... என்ர மகன் செத்திட்டான் எண்டுறது எனக்குக் கவலைதான். ஆனால் அவன் நாட்டுக்காகத்தானே செத்தவன். அதை நினைக்க பெருமையாகத்தான் கிடக்கு" ■

## கடைசி முத்தம்

வடமராட்சியை சிங்களப்படைகள் ஆக்கிரமித்த நேரமது.

அவர்கள் உருவாக்கிய அச்சம் தருகின்ற அமைதி, அங்கு இரவு நேரங்களில் ஆட்சி செய்யும். அப்படியான ஒரு இரவு, சில நண்பர்களுடன் மில்லர் வீட்டுக்கு வந்தான். அம்மா பால் காய்ச்சிக் கொடுத்தாள். எல்லோரும் குடித்தார்கள்.

"அம்மா ... நான் இல்லாத நேரங்களிலையும் பெடியள் வருவாங்கள்.... அவங்களுக்கு சாப்பாடு குடுங்கோ...." மில்லர் சொன்னான். அம்மா அதை எப்போதும்போல சாதாரணமானதாகவே எடுத்துக்கொண்டாள்.

கேட்கக் கூடாததுதான் என்பது தெரிந்திருந்தும் மனதுக்குள் இருந்த ஆதங்கத்தை பெரியம்மா அவனிடம் கேட்டுவிட்டார்.

"உன்னோட இருந்த பெடியள் சிலதுகள் இயக்கத்தை விட்டுட்டுப் போட்டுதுகள் தானேடா... அதைப்போல நீயும் வந்து.... எங்காவது போய் உழைச்சு அம்மா அப்பாவைப் பாக்கலாம் தானே மோனே?"

தலையை ஒருபுறமாகத் திருப்பியபடி பெரியம்மாவைப் பார்த்துச் சொன்னான். "என்னோட இருந்த பெடியள் கன பேர் செத்துப் போனாங்கள் பெரியம்மா. நீங்கள் விட்டிட்டுப் போனவங்களை உதாரணமாகக் கதைக்கிறியள். என்ர மனதில செத்தவங்கள் ஞாபகம் தான் நிரம்பி வழியுது. அவங்களை என்னால மறக்கேலாது..... எல்லாரும் விட்டுட்டுப் போனா நாட்டுக்காய்ப் போராடுவது ஆர்...... நாட்டுக்காகச் செய்ய வேண்டிய எங்கட கடமைகளை நாங்கள் செய்ய வேணும்தானே பெரியம்மா..." அவனது விழிகள் அகல விரிந்து அர்த்தத்தோடு அவர்களைப் பார்த்தன.

அந்த வார்த்தைகளின் பின்னால் உள்ள உறுதியின் கனபரிமாணத்தை அப்போது அவர்கள் அறியவில்லை. போவதற்காக எழுந்தவன் அம்மாவைப் பார்த்தான்.... திரும்பவும் பார்த்தான். என்றுமில்லாதவாறு அம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சினான். அம்மாவுக்கு எதுவும் விளங்கவில்லை; விளங்கவும் கூடாதுதானே!

ஆனால், அதுதான் தனது பாச மகன் தனக்குத் தந்திட்டுப்போன கடைசி முத்தம் என்பது ஐந்து நாட்களுக்குப் பின் அம்மாவுக்குத் தெரிந்தபோது.....

இப்போது அம்மா அதைத்தான் ஞாபகம் கூர்ந்து கண்ணீர் வடிக்கின்றார். ■

## கரும்புலிகள் நாள்!

ஒரேயொரு வெடிதான்,
அட்டதிக்கும் அதிர்ந்து குலுங்கும்.
சரித்திரத்தைத் தலைகீழாக்கி விட்டு,
சந்தனமேனி காற்றில் கரையும்.
உலகம் ஒரு தரம் புருவம் உயர்த்தும்,
வார்த்தை வலைக்குள்ளே சிக்காத தற்கொடை,
எவருக்கும் தெரியாமல் உறங்கும்,
வழியனுப்பி வைத்த விழிகள் கலங்கும்.
என்றாலும்,
கண்ணீர்க்கோடு கன்னத்தில் இருக்காது.
சாவுக்குத் தேதி குறித்து;
நேரம் கணித்து;
இலக்கு நோக்கிநகர எவரால் முடியும்?
வாழ்வு வருடங்களால் மட்டும்,
கணிக்கப்படுவதில்லை.
சக்கை பெறுகின்ற சாவும்,
வாழ்வாகிப் போகும்.
யூலை ஐந்தாம் தேதி
வருடத்தில் வரும் ஒரு நாளல்ல....
நெல்லியடியில் .... மில்லர் தொடக்கிய
புது வரலாற்றின் பிறந்தநாள்,
தமிழருக்குள் நம்பிக்கை மொட்டவிழ்ந்து
விடுதலை வாசம் வீசத் தொடங்கிய நாள்,
ஊழிக்கூத்தின் அரங்கேற்ற நாள்,
ஆம்.......
அது, கரும்புலிகள் நாள்.

மாலிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரும்புலிகளின் வாழ்வில்....

## ஒரு வீரனின் ஆசை

**கரும்புலி**
**லெப். கேணல் போர்க்**
**சேமமடு, வவுனியா**
**20 - 11- 1990**

வன்னிப் பிராந்தியத்தின் மையத்தில் -அதன் இருதயத்தில் -மாங்குளம் சிங்களப் படை முகாம் இருந்தது. அது அங்கு பல அட்டூழியங்களைச் செய்து வந்தது. இரண்டாவது ஈழப் போர் தொடங்கிய நாட்களில் இருந்து, இம்முகாம் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்தது. எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப்படை



வெடிகுண்டு வண்டியுடன் லெப். கேணல் போர்க்

முகாம் மீது தாக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்படுகிறது. அப்படை முகாம் மீது கரும்புலித் தாக்குதல் நடாத்தி அதைக் கைப்பற்றுவது என்று தீர்மானிக்கப்படுகிறது. இத் தாக்குதலைத் தலைமை தாங்கி வழிநடாத்திய தளபதி பால்ராஜ் சொல்லும் போது, "நாங்கள் இம்முகாம் தாக்குதலுக்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தோம். அப்பொழுது 'மாங்குளம் முகாமைப் பற்றி எனக்குத்தான் அதிகம் தெரியும். எனவே நான்தான் சக்கை லொறி கொண்டு போக வேணும்.' எனப் போர்க் சொன்னான்.

அந்தக் குரலில் உறுதி தெரிந்தது. போர்க் போராட்டத்திற்குப் புதியவர் அல்ல. அவர் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தவர். பல தாக்குதல்களை முன்நின்று வழிநடத்தியவர்." தளபதி பால்ராஜ் மேலும் தொடர்கையில்.....

"1990 ஆம் ஆண்டு கார்த்திகை இருபதாம் நாள்...

அண்டைக்குத்தான் போர்க் கரும்புலியாப் போனவர். புறப்படமுன் கடைசியாக என்னைக் கட்டியணைச்சு 'நான் புறப்படுறன்.... இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது.... ' என்று சொல்லிப் போட்டு வெடிமருந்து வாகனத்தை ஓட்டிச் சென்றார். கொஞ்ச நேரத்தில பெரிய வெடிச்சத்தம் கேட்டுது. முகாம் தகர்ந்தது.... பிறகு சில மணி நேரத்தில முகாம் கைப்பற்றப்பட்டது" என்றார்.

இந்தத் தாக்குதலுக்கு சில நாட்களுக்கு முன்பு போர்க் அண்ணை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றார்.

அவரது கிராமம் சிங்கள எல்லையில் அமைந்துள்ளது. அது வன்னியில் உள்ள சேமமடு.

சிறுவயது தொட்டு நடந்து திரிந்த அக்கிராமத்தில் குளம், வயல், காடு என்று ஒவ்வொன்றையும் சுற்றி ரசித்தார். இல்லை... அவற்றிடமிருந்து விடை பெற்றார்.

அந்த நாட்களில் ஒரு நாள். பக்கத்து வீட்டுச் சிறுவர்கள் மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குச் சென்று ஓர் மரக்குற்றியில் அமர்ந்தவாறு போர்க் அண்ணை கேட்டார்.

"தம்பியவை மாவீரர் நாள் வருகுதல்லோ? தற்செயலா நான் செத்துப் போனா அண்டைக்கு என்ன செய்வியள்?"

"நீங்கள் ஏன் சாகப் போறியள்?" எனக் கேலியாகப் பதில் கூறினர் பிள்ளைகள்.

போர்க் அண்ணையும் சிரித்தபடி "தப்பித் தவறி நான் செத்துப் போனா என்ர நினைவா ஆளுக்கொரு மரம் நட்டு வளவுங்கோ என்ன.....?"

அவர்கள் சிரித்தனர். போர்க் அண்ணையும் சேர்ந்து சிரித்தார்.

வீட்டிலிருந்து புறப்படும் இறுதி நாள் வந்தது, மதியம் உணவருந்திவிட்டு விறாந்தையில் பாயைப் போட்டுப் படுத்தார். சற்றுத் தள்ளி போர்க் அண்ணையின் அம்மாவும் படுப்பதற்காக, தரையில் பாயைப் போட்டார்.

"அம்மா இதில வந்து எனக்குப் பக்கத்துல பாயைப் போடணை." போர்க் அண்ணை கேட்டார். அம்மாவும் வந்து அவரின் தலையை வருடியவாறு இருந்தார்.

அன்று பின்னேரம் அப்பா, அண்ணன்மார், தம்பிமார், அன்புத் தங்கை...... என்று எல்லோரிடமும் விடை பெறுகிறார்!

கடைசியாகத் தாயாரிடம் வந்து, "அம்மா எனக்கு உங்கட கையால ஒரு பொட்டு வைச்சு விடுங்கோவன். ஆசையாய் இருக்கு" எனச் சாதாரணமாகக் கேட்டார். ஏதும் அறியாத தாயுள்ளம் பிள்ளையின் விருப்பப்படி பொட்டிட்டு மகிழ்ந்தது. இவ்விதம் சிறுபிள்ளைபோல் அவர் நடப்பது வழக்கம் எனத் தாயாரும் கூறினார்.

சிரித்தபடியே விடைபெற்றவர், வீட்டுப்படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார்..... பின் போய்விட்டார்.

சிறிது நேரத்தின் பின்.....

"தம்பி சாரத்தையும் ரீ சேட்டையும் விட்டுட்டுப் போட்டானணை" என்று போர்க் அண்ணையின் சகோதரன் அவசரமாகக் குரல் கொடுத்தார்.

"பழசாக்கும் அதான் விட்டுட்டுப் போட்டான் போலக் கிடக்கு" என்றார் அம்மா.

இன்று போர்க் அண்ணையின் அம்மா சொல்கின்றார். "தம்பி அவன் அண்டைக்கு வித்தியாசமாய் நடந்ததை என்னால புரிஞ்சுகொள்ள முடியேல்லை. ஆனால் கரும்புலியாய்ச் செத்த பிறகுதான், அவன் பக்கத்தில படுக்கச் சொன்னது..... பொட்டு வைக்கச் சொன்னது..... உடுப்புகளை விட்டிட்டுப் போனது.... ஏன் எண்டு விளங்குது"

போர்க் அண்ணனின் அம்மாவின் நா தழுதழுத்தது...... ■

## ஒரு மென்மையான இதயம்

"மன்னாரில் நடக்கிற முதல் கரும்புலித் தாக்குதலை நான்தான் செய்ய வேணும்"

தளபதி சுபனிடம் டாம்போ இந்த வேண்டுகோளை முன்னரே விடுத்திருந்தான்.

அதனை அவருக்கு அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டும் இருந்தான்.

சிலாபத்துறை படைத்தளம் மீதான தாக்குதல் திட்டம் தயாரிக்கப்பட்டபோது, அங்கு கரும்புலித் தாக்குதலை நிகழ்த்துவது டாம்போ எனத் தீர்மானிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு சில நாட்களுக்கு முன்னதாக -
அந்தக் காட்டு முகாமின் உயர்ந்த மரமொன்றின் நிழலில் அதன் அடிவேரில் சாய்ந்திருந்தபடி நண்பனொருவனுக்கு டாம்போ தன்வீட்டுக் கதையைச் சொன்னான்.

"வீட்டில் நான்தான் மூத்த பிள்ளை இரண்டு தம்பிமாருக்குப் பிறகு கடைசியாகத் தங்கச்சி பிறந்தாள். நான் சின்ன வயசாக இருக்கும்போதே அப்பாவுக்கு இயலாமல் போய்விட்டது. அம்மாதான் கஸ்டப்பட்டு கூலி வேலை செய்து எங்களை வளர்த்தா. நான் கொஞ்சம் வளர்ந்ததும் அம்மாவின் சுமைகளை பகிர்ந்துகொள்ளத் துவங்கினனான். நாங்கள் எல்லோரும் பாசத்தோட பிணைஞ்சு வளர்ந்தம். ஐந்து வருடங்களுக்கு முன்னம் எனக்குப் பதினெட்டு வயதாக இருக்கும்போது நாட்டு நிலைமை என்னைப் போராட்டத்துக்குள்ள இணைச்சுது..... அது எல்லோருக்கும் இருக்கிற கடமையும்தான்....."

"இதுக்குப் பிறகு, ஒரு சண்டையில காயப்பட்டு சிகிச்சைக்காக தமிழ் நாட்டுக்கு போயிருந்தன். அங்கு வைத்து ஏனைய தோழர்களோடு கைது செய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டு வவுனியா இந்தியப் படை முகாமில் வைக்கப்பட்டிருந்தன்..... சிறைக்குள்ளே இருந்த காலத்தில் இந்தியப் படைக்கெதிரான போரில் என்னால் பங்கேற்க முடியவில்லையே என்ற துயரத்தில மனது துடித்தது..... அங்கையிருந்து சிறையை உடைத்துப் போராளிகள் வெளியேறும் போது நானும் வந்தன். அந்த முயற்சியிலை காலில காயப்பட்டன்."

"வீட்டில் நாங்கள் எல்லோருமே எங்களுடைய ஒரேயொரு தங்கச்சியில மிகுந்த அன்பு வைச்சிருந்தம். அவளின் சாமத்திய வீட்டை சொந்தக்காரர் எல்லோருக்கும் சொல்லி வீட்டில் எங்களின் வசதிக்கேற்ற அளவுக்குப் பெரிதாகச் செய்தம்.... ஆனால்.... சாமத்தியவீடு நடந்த பத்தாம் நாள் தம்பிக்கும் தங்கச்சிக்கும் இடையில் சின்னதாக ஒரு பிரச்சினை. அம்மா தம்பிக்கு அடிச்சுப் போட்டா. தன்னாலதான் அண்ணனுக்கு அடி விழுந்ததென்று நினைத்து எங்களின் ஆசைத் தங்கச்சி நஞ்சு குடிச்சு உயிரைப் போக்கிக் கொண்டாள்..... "

ஒரு கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு கீழே குனிந்தபடி ஒரு தடிக்குச்சியால் மண்ணைக் கிண்டிக்கொண்டு டாம்போ சொன்னான்.

"இதற்கிடையில் எங்களின் இன்னொரு தம்பி பயணம் போனவன் கடற்படையால கைது செய்யப்பட்டான். இன்னும் வீட்டுக்கு வரவில்லை. இராணுவம் பிடித்துச் செல்கின்ற ஆட்கள் காணாமல் போவதென்பது இங்கு புதினமில்லைத்தானே.

.... அதுக்குப் பிறகு தங்கச்சி செத்து ஒரு மாதம் போகமுந்தியே தம்பி இயக்கத்துக்கு வந்திட்டான். எங்களுடைய வீட்டு நிலைமையை தெரிஞ்சுகொண்ட சுபன் அண்ணை தம்பியை வீட்டுக்குப் போகச் சொல்லி அனுப்பினபோதும் போகமாட்டன் எண்டு அடம்பிடித்துக்கொண்டு முகாம் ஒன்றில் நிண்டான்.

... பிறகு நான்தான் அவனை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்து பயிற்சி முகாமில் விட்டன்.... இப்ப அவன் அங்கு ஓடித்திரிகிறான். நான் கரும்புலியாகப் போகப்போகிறேன் எண்டு அவனுக்குச் சொல்லிப் போட்டன்...." என்ர முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு வேறெங்கோ பார்த்தான்.

"மன்னாரில் நடக்கிற முதலாவது கரும்புலித் தாக்குதலை நான் செய்ய வேண்டும் என்கிற ஆசை என்னிடம் இருந்தது. அதை நான் சுபன் அண்ணையிட்டைச் சொல்லியிருந்தனான்.... இப்ப அந்த நாளும் வந்திருக்குது....

கலக்கமில்லாத - மிகத் தெளிவான -கண்களோடு தோழனைப் பார்த்துச் சொன்னான் -

.... "இப்படி ஒரு நிறைவான சாவு எல்லாருக்கும் வராதடா.." ■

## உறுதி

"நான் திரும்பி வரமாட்டன். என்னால முடிந்தளவு உள்ளே சென்று முகாமின் சுவரோட மோதுவதுதான் நோக்கம்."



**கரும்புலி**
**மேஜர் டாம்போ**
**(காசிப்பிள்ளை தயாபரன்)**
**முழங்காவில், மன்னார்**
**17. 08. 1967 - 19. 03. 1991**

சிலாபத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு போராளிகள் தயாராகிக் கொண்டிருந்த போது தனது நண்பன் ஒருவனிடம் டாம்போ இப்படித்தான் சொன்னான்.

அந்த இரவும் வந்தது.

சிலாபத்துறை இராணுவ முகாம் மீதான தாக்குதல் -ஆரம்பமானது. சில மணித்துளிகளில் உதவி அரசாங்க அதிபர் விடுதியிலிருந்த சிறிய இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது. அந்தப் பக்கமாக இருந்த கொண்டச்சி வீதியால் தான், வெடிமருந்து நிரப்பப்பட்ட வண்டி இராணுவ முகாமினுள் செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. வண்டி செல்வதற்காக போராளிகள் வீதியைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த இடைநேரத்திலும் டாம்போ தாக்குதலின்பொழுது காயமடைந்த போராளிகளைத் தூக்கி வருவதிலும் சிகிச்சை அளிப்பதிலும் ஈடுபட்டிருந்தான். வண்டி செல்வதற்குரிய நேரம் வந்தது. டாம்போ வெடிமருந்து வண்டியினருகில் வந்தான். பக்கத்தில் நின்ற தோழனை இறுக அணைத்து முத்தமிட்டான்.
"நானும் கொஞ்சத் தூரம் வாறன்" என்றான் அந்தத் தோழன்.
"வேண்டாம் ஏதும் தவறெண்டாலும் ஏன் வீணா எல்லோரும் சாவான்" என்று சொல்லியபடி வண்டியில் ஏறி இயக்கினான் டாம்போ. வண்டியினருகே ஓடி வந்தபடியே, "விட்டுவிட்டு ஓடிவரலாம்தானே" என்று தயங்கித் தயங்கிச் சொன்னான் ஒரு தோழன்.

வெடிமருந்து வண்டி உறுமிக் கொண்டு இராணுவ முகாமைத் தேடி ஓடியது. அந்த வண்டியை நோக்கி இராணுவத்தினரின் முழு ஆயுதங்களும் குறி வைத்து இயங்கின. குறித்த இலக்கிற்கு முன்பே அந்த வண்டி வெடித்துச் சிதறியது. ஒளிப்பிழம்புடன் கரும்புகையொன்று வானில் எழுந்து கலந்தது. கடற்கரைகளில் -வயல்வெளிகளில் -தூரத்துக் காட்டின் ஓரங்களில் நின்ற போராளிகளின் நெஞ்சங்களை வெடியோசை பாரமாக அழுத்தியது. அவர்கள் நேசித்த டாம்போவின் வீரமரணச் செய்தியை அந்தச் சத்தம் காதோடு வந்து சொல்லிச் சென்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடலலை மீதினில் கரும்புலிகள்

பலர் கருதுவது போல எமது வாழிடமான நிலப்பகுதி மட்டும் தான் 'தமிழீழத் தாயகம்' அல்ல.

பழமையும் - பெருமையும் - செழுமையும் கொண்ட தமிழீழக் கடலும் தமிழர் தாயகம்தான்.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை எமது கடலிற்கும் முக்கிய பங்குண்டு.

விநியோகங்களுக்கும் போக்குவரத்திற்கும் வெளியுலகத் தொடர்புக்கும் இக்கடலே பிரதான பாதையாக இருந்து வருகிறது.

இதை நன்கு அறிந்த சிங்கள அரசு கடற்பயணங்களைத் தடுத்து, விடுதலைப் போராட்டத்தை நசுக்கத் திட்டமிட்டது.

அதன் பிரகாரம் 1984 ஆம் அண்டு லலித் அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றபின் இந்தக் கடல் எமதும் எமது மக்களினதும் பாவனையில் இருந்து தடைசெய்யப்பட்டது.

'கடல் கண்காணிப்பு வலயம்' என்ற பெயரில் தமிழீழக் கடல் சிங்களக் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டது.

இந்த கண்காணிப்பு வலயத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில், தமிழீழக் கடலில் நிரந்தரமாகச் சில கப்பல்கள் நங்கூரமிட்டன. இவை தாய்க்கப்பல்கள் அல்லது கட்டளைக் கப்பல்கள் என அழைக்கப்பட்டன. சாதாரண சரக்குக் கப்பல்களை கடற்கண்காணிப்புக்கு ஏற்றபடி சிறு மாற்றங்களைச் செய்து, சில சாதனங்களையும் பொருத்தி, அவற்றை கட்டளைக் கப்பல்களாக சிங்கள அரசு மாற்றியுள்ளது. றேடார் சாதனங்களும், சிறு ரகப் பீரங்கிகளும், கனரக இயந்திரத் துப்பாக்கிகளும் இதில் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கப்பல்களின் பணி, கடலில் தமிழர்களின் படகுகள் எவையாவது தென்படுகின்றனவா என்பதை வேவு பார்ப்பதும், அப்படித் தென்பட்டால் அந்தச் செய்தியை கடற்படையின் அதிவேக விசைப்படகுகளுக்கு அறிவித்து குறித்த படகுகளை மூழ்கடிப்பதுமாகும்.

இவ்விதம் இக்கட்டளைக் கப்பல்கள் தமிழீழக் கடலில் நங்கூரமிட்டபின் கடலில் போன நூறுக்கும் மேற்பட்ட புலிவீரர்கள் கடலிலே வீரச்சாவடைந்தனர்.

14-04-1985 அன்று, புலிகள் இயக்கம் கடலிலே தனது முதலாவது இழப்பைச் சந்தித்தது. அதில் பதின்நான்கு புலிகள் வீரச்சாவடைந்தனர். அத்துடன் பல நூற்றுக்கணக்கான மீனவர்களும் பிரயாணம் செய்த மக்களும் கடலிலே பலியானார்கள். இந்த இழப்புக்களுக்கெல்லாம் குடா நாட்டைச் சூழ உள்ள கடலில் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு கட்டளைக் கப்பல்களே மூல காரணியாகும். 'அபித்தா', 'எடித்தாரா' என்று பெயர் சூட்டப்பட்ட இந்த இரண்டு கப்பல்களில் ஒன்று காங்கேசன்துறைக்கும் -பருத்தித்துறைக்கும் இடையில் உள்ள கடலில் நிறுத்தப்பட்டிருக்கும். மற்றையது வெற்றிலைக்கேணிக்கு நேரே நிறுத்தப்பட்டிருக்கும். இந்த இரண்டு கப்பல்களையும் அப்புறப்படுத்தாவிட்டால் தொடர்ந்தும் புலிவீரர்களை இழக்க நேரிடும் என்பதுடன், போராட்டப் பணிகளும் பெருத்த சிரமங்களையும் தடைகளையும் எதிர்கொள்ளும்.

ஆனால், புலிகள் இயக்கத்திடம் இருக்கும் சிறிய படகுகளின் உதவியுடன் இக்கட்டளைக் கப்பல்களை அடித்து விரட்ட முடியாது. எனவேதான் கரும்புலித் தாக்குதல்கள் மூலம் அந்த, 'கடல் திமிங்கிலங்களை' அகற்றப் புலிகள் தீர்மானித்தனர்.

10-7-1990 அன்று, வடமராட்சிக் கடலில் நங்கூரமிட்டிருந்த 'எடித்தாரா' என்ற பெயருடைய கட்டளைக் கப்பல் மீது கரும்புலித் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் மேஜர் காந்தரூபன், கப்டன் வினோத், கப்டன் கொலின்ஸ் ஆகிய கரும்புலிகள் பங்கேற்றனர்.

இதைப் போன்று 4-5-1991 அன்று, 'அபித்தா' என்ற பெயருடைய கட்டளைக் கப்பல் மீது ஒரு கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இத்தாக்குதலை கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகிய கரும்புலிகள் செய்து முடித்தனர். 'அபித்தா' கப்பல் முற்றாகச் சேதமாக்கப்பட்டது; கடற்பாவனையில் இருந்து அகற்றப்பட்டு, இப்போது திருகோணமலைத் துறைமுகத்தில் கைவிடப்பட்டுள்ளது. ■

# கரும்புலிகள் வாழ்வில்...

"ஒரு நாள் தொழிலுக்குப் போறதுக்கான ஒழுங்குகளைப் பார்க்க நான் கடற்கரைக்குப் போனன். கரையில ஊர்ச்சிறுவர்களோடை புதிசா ஒரு பையனும் நிண்டுகொண்டிருந்தான். ஒரு கிளிஞ்ச பெனியன் போட்டுக்கொண்டு மெலிஞ்ச உடம்போட அவன் இருந்தான். அவனைக் கூப்பிட்டு,

"நீ ஆர் தம்பி? எங்கை இருந்து வாறாய். ?" என்று ஆதரவோடை கேட்டன்.

உடனேயே அவனுக்கு இரண்டு கண்களும் கலங்கிப் போச்சுது. "எனக்கு ஒருத்தரும் இல்லை.... அம்மா அப்பா எல்லாம் செத்துப் போச்சினம்.... சொந்தக்காரர் ஆரும் இல்லை.... இப்படியே நடந்து நடந்து இந்தக் கடற்கரைக்கு வந்து சேர்ந்தன்." என்றான்.

காந்தரூபனை தனது சொந்த மகனைப் போல எடுத்து பாசத்தோட வளர்த்த அவர் அவனின் கதையைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

## மகன்

"கலியாணம் செய்து நீண்ட காலமாக எங்களுக்கு குழந்தை கிடைக்கேல்லைத் தம்பி.... ஆரிட்டையாவது ஒரு குழந்தையை எடுத்தாவது வளப்பம் எண்டு நாங்கள் நினைச்சுக்கொண்டிருந்தம்..... அந்த நேரத்திலதான் தம்பி எங்களிட்டை வந்தான். அவனை வீட்டுக்கு கூட்டிவந்து சொந்தப் பிள்ளையாக வளர்த்தம்...."

"இது நடந்தது பதினைஞ்சு வருசத்துக்கு முந்தி.... அதுக்குப் பிறகு காந்தரூபன் வளர்ந்து பெரியவனாகிப் பின் இயக்கத்துக்குப் போனான்...." அவர் மனதைத் திறந்து கதைத்துக்கொண்டிருந்தார்.

"நான் கடற்புலியளுக்கு ஓட்டியாய்ப் போறனான். வண்டியில நாங்கள் பெடியளையோ சாமான்களையோ கொண்டு வாற நேரங்களில கனதரம் நேவியால கலைபட்டு இருக்கிறம். இப்படி நாங்கள் போய் வாறது பற்றி தகவல் சொல்லுகிற பெரிய கப்பல் நடுக்கடலிலை நிக்கும். அந்தக் கப்பல் எடுக்கிற தகவல்கள் எங்களுடைய முகத்தை திரும்பிப் பார்த்துவிட்டுச் சொன்னார். "உடனே தாங்கிக் கொள்ள எனக்குக் கஸ்டமாகத்தான் இருந்தது."

அவருடைய நா தழுதழுத்தது. சோகம் தொண்டையை அடைக்க அவர் தொடர்ந்தார்.

"கடைசியாக அவன் கரும்புலியாகப் போனான். அவனை நான் எந்த இடத்தில முதன் முதலில் கண்டு தூக்கி வளர்த்தேனோ, அதே கடற்கரை,

படகில ஏறப்போறதுக்கு முதல் என்னட்டை ஓடி வந்தான். கட்டிப் பிடிச்சு மாறி மாறி கன்னத்தில கொஞ்சினான்.

'அநாதையா வந்த என்னை ஆளாக்கினியள் அப்பா' எண்டான்.

'உங்களுக்கு ஒண்டு ஞாபகமிருக்கோ' எண்டான்.

'இந்தக் கடற்கரையில இந்த இடத்திலதான் உங்களுக்கு நான் தான் நாங்கள் கடலில பறிகொடுத்த அத்தனை பெடியளின்ர சாவுக்கும் காரணம்"



கரும்புலி
மேஜர் காந்தரூபன்
யோகராசா கோணேஸ்வரன்
வல்வெட்டித்துறை
09. 10. 1971 - 10. 07. 1990

"அந்தத் தாய்க் கப்பலை எங்கட பெடியள் அடிக்கப் போறாங்களாம் எண்டு கேள்விப்பட்டன். அந்தக் கப்பலை அடிக்கிறதுக்கு கரும்புலியாய்ப் போற பையன்களில எங்கட காந்தரூபனும் ஒரு ஆளாம் என்டிறதையும் நான் அறிஞ்சன்"

மகனானனான். இண்டைக்கு அதே இடத்தில உங்களை விட்டிட்டுப் போறன்' எண்டு சொல்லிப் போட்டுப் போனான் தம்பி."

திறந்திருந்த கதவொன்றைச் சுட்டிக்காட்டி, "அதுதான் எங்கட சாமி அறை. அந்தத் தெய்வத்தின்ர படத்துக்குப் பக்கத்தில தான் அவன்ர படத்தையும் வைச்சிருக்கிறம்" என்றார்.

"தன்ர சொந்த அப்பாவின்ர பேர் அவனுக்குத் தெரிஞ்சிருந்தும் இயக்கத்தில் விபரங்களைப் பதியேக்கை 'யோகராசா' எண்டு என்னைத்தான் தன்னுடைய அப்பா எண்டு பதிஞ்சிட்டுப் போயிருக்கிறான்.... ம்"

அவருடைய கண்கள் கலங்கிப் போயின. தனது சால்வையால் கண்களை ஒற்றிக் கொண்டார். அருகிலே நின்ற அம்மா சொன்னா,

"அன்றைக்கு முழுவதும் இவர் ஒருமாதிரியா இருந்தார். நான் ஒண்டும் கேட்கேல்லை. பின்னேரம் கடலில் பெடியள் கரும்புலியாய்ப் போய் கப்பலடிக்கப் போறாங்களாம் எண்டு பாத்திட்டு வாறனெண்டு போனார்.

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

# இறுதி விருப்பம்

**1987** இன் ஆரம்பம். அப்போது காந்தரூபன் தொண்டைமானாறு சிங்களப் படை முகாமைச் சுற்றியிருந்த காவலரணில் கடமையில் இருந்தான்.

ஒருநாள் முகாமிலிருந்து சிங்களப் படையினர் வெளியேறிய போது சண்டை தொடங்கியது. அச்சண்டையின் ஒரு சந்தர்ப்பத்தில், எதிரியின் கையில் உயிருடன் பிடிபட்டுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகியபோது காந்தரூபன் குப்பியைக் கடித்துவிட்டான்.

ஆனால், அதிஸ்டவசமாக சக தோழர்களால் மீட்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டான்.

இருந்தபோதும் சயனைட் விசம் காந்தரூபனின் உடலில் ஒரு உட்பாதிப்பை உண்டாக்கியிருந்தது. அந்த உட்பாதிப்புக்கான பராமரிப்புமுறைகளில் அத்தியாவசியமானதாக நிறையுணவு அருந்த வேண்டும் என மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

1988 -1989 ஆம் காலம். இப்போது காந்தரூபன் தலைவர் அவர்களுக்குப் பக்கத்தில் மணலாற்றுக் காட்டில் நின்றான். காந்தரூபனுக்கு இப்போதும் நிறையுணவு தேவைப்பட்டது.

ஒரு பசுமாடு இருந்தால் காந்தருபனுக்குப் பால் எடுப்பதுடன் சுகவீனம் அடைகின்ற போராளிகளுக்கும் பால் கொடுக்க முடியும் எனக்கருதிய தலைவர், வெளியிலிருந்து பால் தரக்கூடிய நல்ல இனப்பசு ஒன்றை காட்டுக்குள் இருந்த தளத்திற்குக் கொண்டு வருமாறு சொன்னார்.

பசு வந்து சேர்ந்தது.

தலைவரின் துணைவியார் ஒரு தாயைப் போல இருந்து பால் காய்ச்சிக் கொடுத்தார்.

அந்தப் பொழுதுகளில் எல்லாம் காந்தரூபன் நெஞ்சு நெகிழ்ந்து நிற்பான். தான் ஒரு கதியற்றவன் என்ற கவலையே அற்றுப் போகும்.

ஒருநாள் அன்பு கலந்த மரியாதையோடு காந்தரூபன் தலைவருக்குப் பக்கத்தில் வந்தான். பாசத்தோடு அவனை அழைத்து அருகில் இருத்திக் கதைத்தார் தலைவர்.

"அண்ணை... என்னைக் கரும்புலிகளில் சேர்த்துக் கொள்ளுங்கோ..." என்றான்.

அதோடு தனது உள்ளத்துக்குள் உறைந்து கிடந்த இன்னொரு விருப்பத்தையும் அவன் தலைவரிடம் சொன்னான்.

"உங்களுக்குத் தெரியும் அண்ணை. நான் ஒரு 'அநாதை' அப்பா இல்லாம அம்மா இல்லாம ஆருமே இல்லாம அலைஞ்ச என்னை, ஒரு அப்பாவும் அம்மாவும் எடுத்து தங்கட பிள்ளையைப் போல வளத்தினம்.

.... அதுக்குப் பிறகு நான் இயக்கத்திற்கு வந்தன். நீங்கள் என்னை அன்போடையும் பாசத்தோடையும் ஆதரிச்சு வளர்த்தியள். நான் வருத்தங்களால வாடேக்கை எனக்கு வேண்டிய எல்லாத்தையும் செய்து கவனிச்சியள்...."

"இப்ப நான் உங்களிட்டை ஒண்டு கேட்கப்போறன் அண்ணை. தயது செய்து எனக்காக நீங்கள் அதைச் செய்ய வேணும்...."

அவனுக்கு அருகில் இருந்து அவன் சொல்வதை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் தலைவர்.

"என்னைப் போல எத்தனையோ பெடியள் இந்த நாட்டில அநாதைகளாக வாழுகிறாங்கள்.... அப்பா அம்மா இல்லாம சொந்தக்காரரின் ஆதரவு இல்லாம அலைஞ்சு திரியுறாங்கள். வாழ இடமில்லாமல், படிக்க வசதியில்லாம எவ்வளவு ஏக்கங்களோடையும், துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் என்டிறதை நான் அனுபவத்தில கண்டனான் அண்ணை...."

" நீங்கள் என்னை அன்போடு கவனிச்சுப் பார்த்ததைப்போல அவங்களையும் கவனிக்க வேணும் அவங்கள் எந்தக் குறையுமில்லாமல் வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதி செய்து கொடுங்கோ. அவர்களுக்கெண்டு ஒரு இடத்தை அமைச்சு அங்கை வைச்சு அவங்களையெல்லாம் வளத்தெடுத்து அவங்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தைக் குடுத்துவிடுங்கோ அண்ணை..."

தலைவரின் இதயத்தை இது தொட்டது. அப்படியான ஒன்றின் தேவைபற்றி எண்ணியிருந்த தலைவருக்கு காந்தரூபனின் வேண்டுகோள் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவ்வாறான இல்லம் ஒன்றை ஆரம்பித்து -காந்தரூபனின் நினைவாக, அதனை அவனது பெயரிலேயே செயற்படுத்தத் தான் எண்ணியுள்ளதாக, தலைவர் கூறுகின்றார்.

அதற்குரிய ஏற்பாடுகளிலும் தலைவர் ஈடுபட்டுள்ளார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தளராத உறுதி

4-5-1991 அன்று நடந்த கரும்புலித்தாக்குதலைப் பற்றிக் கதைத்தபொழுது கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை சொன்னார்:

இறுதி நேரத்தில் கடலில் சிதம்பரமும் ஜெயந்தனும் காட்டிய உறுதியை என்னால் மறக்க முடியாது, இப்போதும் அது என் நினைவில் பசுமையாகவே இருக்கின்றது. அது ஒரு முன்னிரவு நேரம்.

எமது கரும்புலித் தாக்குதலின் இலக்காகிய 'அபிதா' என்றபெயருடைய கட்டளைக் கப்பல் கரையிலிருந்து சுமார் எட்டு மைல் தொலைவில் நின்றது.

இக்கப்பலைத்தேடி திசையறிகருவியின் உதவியுடன் கரும்புலிகளின் வெடிமருந்து ஏற்றிய படகு புறப்பட்டது. சிறிது நேரத்தில் வோக்கிமூலம் தொடர்பு கொண்டு கதைத்தார்கள்.

"நாங்கள் .... கதைக்கிறது விளங்குகிறதா?" எனக் கேட்டோம்.

"நீங்கள்..... கதைப்பது..... தெளிவாகக்..... கேட்கிறது" என எந்தவித சலசலப்புமில்லாமல் உறுதியுடன் அறிவித்தார்கள்.

மேலும், சில நிமிடங்கள் சென்றன. சிதம்பரமும், ஜெயந்தனும் சென்ற வெடிமருந்துப் படகு சுமார் 4 மைல் கடந்திருக்கும்.

அப்போது,
"எங்களுடைய இலக்கைக் கண்டுவிட்டோம்"
"எங்களுடைய இலக்கைக் கண்டுவிட்டோம்"..... என உற்சாகம் பொங்க படகிலிருந்து அறிவித்தனர்.

குரலில் பதட்டமோ அல்லது தயக்கமோ தென்படவேயில்லை -கரையில்நின்ற தோழர்களின் நெஞ்சுதான் பதைபதைத்துக்கொண்டிருந்தது.

மேலும் சில நிமிடங்கள் சென்றிருக்கும்.

"திட்டமிட்டபடி நாங்கள் செய்யப் போகிறோம்".

"ஏற்கனவே திட்டமிட்டபடி நாங்கள் செய்யப்போகிறோம்", என்ற குரல் கடல் இரைச்சலையும் கிழித்துக்கொண்டு எங்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

கரையில் நின்ற போராளிகள் அனைவரும் கண்வெட்டாது கடலையே பார்த்துக் கொண்டு, வோக்கிக்கு காதைக் கொடுத்துக் கொண்டு நின்றார்கள்.

அப்போது சிதம்பரமும் ஜெயந்தனும் சேர்ந்து வோக்கி ஊடாக.....

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என உரத்துக் கத்தினர்.

அதைத்தொடர்ந்து கடலுக்குள் பெரு வெளிச்சம், சில வினாடிகளில் பெரும் வெடி ஓசையும் கரையை உலுக்கியது.

அடுத்த நாள் பகல் ஒருபக்கம் சாய்ந்தபடி, சேதமடைந்த நிலையில் இருந்த 'அபித்தா' கட்டியிழுத்துச் செல்ல கடற்படையினர் முயன்றுகொண்டிருந்தனர். சில 'டோரா' விசைப்படகுகள் கடலில் எதையோ தேடி ஓடிக்கொண்டிருந்தன.

பல வருடங்களாக எமது போராளிகள் பலரின் உயிர்களை விழுங்கக் காரணமாக இருந்த ஒரு கடலரக்கனைக் கொன்று சிதம்பரமும் ஜெயந்தனும் வீரச்சாதன புரிந்துவிட்டார்கள். ■



தேசத் தலைவரின் பாசப் பிணைப்பில் கரும்புலிகளான கப்டன் சிதம்பரமும் ஜெயந்தனும்.

# கரும்புலிகள் வாழ்வில்...

## நாட்டுக்காக...

இவன் பிறந்து வளர்ந்தது மன்னார் மாவட்டத்தின் நறுவிலிக்குளம் என்னும் கிராமத்தில். இவனது பெற்றோர் இன்று ஏதிலிகளாய் இருப்பது, இதற்கு அப்பாலுள்ள பண்டிவிரிச்சான் கிராமத்தில். ஆனால், இவன் எங்கே?

இவர்களுக்கே தெரியும், இவன் கரும்புலியாகி வீரம் விளைந்த வடகடலின் நீரிலும், காற்றிலும் இன்று கலந்து வாழ்கிறான் என்பது, எனவேதான் இவனது தாய் தன் துயரைத்துடைக்க பேரக்குழந்தைக்கு (மூத்த மகளின் மகனுக்கு) கொலின்ஸ் என்று பெயரிட்டு அழைக்கின்றாகள். அந்த அழியாத பெயர் இவர்களுக்கு ஓர் ஆறுதலையும், துணிவின் உறுதிப்பாட்டையும் தந்து நிற்பதை அந்த வீட்டாருடன் உரையாடக்கிடைத்தபோது உணர முடிந்தது.

அந்தச் சூழலில் அவனது வயோதிபத் தந்தை கூறினார்:

இவன் தம்பி, வலுகெட்டிக்காரன்.. நல்லாப் படிப்பான்.. அவன் படிச்சுக்கொண்டிருக்கேக்கை எங்க ஊரிலையும் சிங்கள ஆமிக்காரங்க சுத்தி வளைச்சு கன பேரை பிடிச்சுக்கொண்டு போனாங்கள். அதனால் நாங்கள் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்தம். இது இவனுக்கு சரியான கவலை. அவன் தம்பி, 'ஆமியின்ர கையில பிடிபட்டுச் சாவதைவிட ஒரு ஆமிக்காரனைத்தானும் சுட்டுட்டுச் சாகலாம் என்று சொல்லுவான்."

"இவன் வெளிநாடு செல்ல விரும்ப இல்லை. சொன்னபடி இயக்கத்திலதான் சேர்ந்தான்" இது அங்கிருந்த தாயாரின் வார்த்தை. இதைத் தொடர்ந்து மீண்டும் அந்தத் தந்தையார் கூறத் தொடங்கினார்.

"தம்பி இவன் லீவு முடிஞ்சு போறதுக்கு முதல் நாள் தாயைப் பார்த்து "அம்மா நான் இயக்க வேலையாய் ஒரு இடத்துக்கு போக இருக்கிறன். இது முக்கியமான வேலை. இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது. அது நாட்டுக்கு மட்டும்தான்" என்று சொன்னான். நாங்கள் அதை அப்ப பெரிசா எடுக்கேல்லை"

"ஆனால், கொலின்ஸ் அம்முறை ஊருக்கு வந்தபோது அவனுக்கு தனது மரணம்...... அதன் திகதி கூடத் தெரிந்திருந்தது. வந்தவன் தான் படித்த பாடசாலை, பழகிய இடங்கள் எங்கும் சென்றான். கூடித்திருந்த நண்பர்களுடன் பாசத்தோடு கதைத்தான்.

இவனோடு படித்து கூடித்திரிந்த நண்பன் இவனைப்பற்றிச் சொல்லும்போது, "அண்ணை நாங்கள் ஒரு நாள் பொழுது படுகிறநேரம் சந்தி மதவடியில் கதைச்சுக்கொண்டு நிண்டனாங்கள். அப்ப கொலின்ஸ் எங்களைக் கண்டுட்டு வந்து மதவடியில இருந்து எங்களோடு கதைச்சுக்கொண்டிருந்தான். 'சாக ஒருக்காலும் பயப்படக்கூடாது' என்ற கொலின்சின் வார்த்தை இப்பத்தான் எனக்கு விளங்குது" என்றான்.

இந்த 21 வயது இளைஞன் கரும்புலி கொலின்ஸ் தன் சாவினால் இனத்திற்குச் சாதித்தது என்ன என்பதை சரியாக உணரவேண்டின் அவன் தன்னைத் தானே தற்கொடையாக்கிய 10-7-1990 க்கு சற்று முன்னைய நாட்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அங்கு வடமராட்சியைச் சார்ந்த பகுதியில் தன் கூரிய பார்வையைச் செலுத்தியபடி, எதிரியின் பாரிய கப்பலொன்று நிலைகொண்டு நிற்கிறது. அதன் ஆதிக்கக் கண்ணோட்டம் எங்கும் செல்லும். அது கடற்படைப் படகுகளுக்கு வேவு பார்க்கும், தகவல் கொடுக்கும். எமது படகுகள், படகோட்டிகள், ஊர்மனைகளை அழிக்கவும், அடக்கவும் அது உதவிகள் செய்யும். இதை அகற்ற வேண்டியிருந்தது. இந்த உறுதிப்பாட்டுடன் மீண்டும் வட பகுதிக் கடற்கரைக்கு வருவோம்.

அங்கு,

"பொடியள் கரும்புலியா கப்பலை அடிக்கப் போறாங்களாம்" என கதை பரவுகிறது

கரையில் வரிப்புலிச் சீருடைகளுக்கு நடுவில் கரியநிற சீருடைதரித்த மூவர். அச்சீருடையுடன் நின்றவர்களில் கொலின்ஸ் ஒருவன், கடலலை இந்த மூன்று கரும்புலிகளின் பாதங்களைத் தொட்டுச் சொல்கின்றன.

அக்கரிய இருளில் கையசைத்து கூடியிருந்தவர்களிடமிருந்து விடை பெறுவது தெரிகிறது.

படகு புறப்பட்டு..... பின் மறைகிறது. கண்கள் கடலை ஊடுருவுகின்றன.....



கரும்புலி
கப்டன் கொலின்ஸ்
பர்ணாந்து சில்வெஸ்ரர்
நறுவிலிக்குளம், மன்னார்
05-12-1969 - 10-07-1990

சிறிது நேரத்தில் கடலில் பெரிய ஒளிப்பிளம்பு..... அதோடு அதிரும்வெடி ஒலி.....
அந்த உப்புக் காற்று அவர்களை அணைத்துக்கொண்டது. ■

## மகன்..

காந்தருபனும் போகப்போறான் எண்டு இவர் சொல்லவில்லை. இரவானதும் எனக்கு நித்திரை வரமாட்டனெண்டுட்டுது. சத்தத்தையாவது கேப்பமெண்டு வீட்டு வாசலில் இருந்தன். கொஞ்ச நேரத்தில் கடலதிரச் சத்தம் கேட்டது. நான் வாசலிலேயே இருந்தன். சாமம் ஒரு மணியளவில இவர் ஒரு மாதிரியாக சோர்ந்து போய் வந்தார்.

"வீட்டுக்குள்ளை வந்தவர் 'எங்கட காந்தருபனும் கரும்புலியாப் போனவன்' எண்டு சொல்லிப் போட்டு அழுதார். நான் ஏங்கிப் போனன். என்னால தாங்கிக் கொள்ளேலாம இருந்தது... நானும் சேர்ந்து அழுதன்...."

யோகராசா அண்ணரும் மனைவியும் பிற்காலத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றார்கள். அவர்கள் தங்களுக்கு நான்கு குழந்தைகள் என்று சொல்கின்றார்கள். தங்களுடைய முதல் மகன் கோணேஸ்வரன் (காந்தருபன்) என்கிறார்கள். அவர்களுடைய மூத்த மகன் கரும்புலியாகி கடலிலே காவியமாகியபின் அவர்களுடைய நான்காவது மகன் பிறந்தான்.

இப்போது கைக்குழந்தையான அவனைத் தூக்கி தோளிலே சாய்த்தபடி அந்தத் தாய் சொல்கிறாள், "காந்தருபனா நினைச்சுத்தான் இவனை நான் வளக்கிறன்."

இந்தத் தாயுடன் கூடவே அவரது தமக்கையாரும் இருந்தார்.

"சின்ன வயதில காந்தருபன் என்ர பிள்ளையளோட சேர்ந்து தான் விளையாடித்திரிவான். படிக்கிறதெண்டா அவனுக்கு சரியான கள்ளம். என்ர மகள் அவனைக் கூட்டிக் கொண்டு வந்து இருத்தி எழுதக் கற்றுக் கொடுப்பாள்.

'அ' எழுதி, 'ஆ' எழுதி, 'இ'எழுதும்போது, 'இதென்ன கனக்க சுழி போடவேண்டியிருக்கு.... எழுதுப்படுகுதில்லை' எண்டு சொல்லிக் கொப்பியைத் தூக்கி எறிஞ்சு போட்டு ஓடிவிடுவான்."

"அப்படிப்பட்டவன் பிறகு இயக்கத்துக்குப் போய் கொஞ்சக் காலத்தால திரும்பி வரேக்கை பெரிய அறிவாளியாக இருந்தான். பெரிய அரசியல் மேதைகளைப் போல எங்களுக்கெல்லாம் விளக்கம் தருவான். அந்தளவுக்கு அவனை இயக்கம் தான் வளர்த்துவிட்டது."

பெரியம்மா தொடர்ந்து சொன்னார். "கப்பலடிக்கிறதுக்குப் போறதுக்கு இரண்டு நாளைக்கு முன்னர் சரியான வெய்யிலுக்கை வீட்டுக்கு வந்தான். 'தலையிடியாய்க் கிடக்கு' என்று சொன்னான்.

'நான் ஒரு முக்கியமான வேலையா வேறொரு இடத்துக்குப் போறன் பெரியம்மா' என்றான்.

"வருத்தம் எண்டு சொல்லுறாயேடா தம்பி.... தலைவரிட்டை சொல்லிப் போட்டு நில்லன்..... இன்னொருதரம் போகலாம் தானே எண்டு ஆலோசனை சொன்னேன்.

'இல்லைப் பெரியம்மா அந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத்தான் அவரிட்டைக் கேட்டனான்.... கட்டாயம் நான்தான் அந்த வேலைக்குப் போகோணும்.... ' என்றான்.

'சரி தம்பி சுகமாய்ப் போய் சுகமாய்த் திரும்பி வா' எண்டு நான் சொல்ல, அவன் திருப்பிச் சொன்னான் -

'சுகமாய்ப் போவன் பெரியம்மா.... அதில பிரச்சினையில்லை.... ஆனாத் திரும்பி வாறதென்கிறதுதான் ..... சரி பாப்பம்...' எண்டான்.

அதற்கு மேல் பெரியம்மாவால் பேசமுடியவில்லை. மறுபக்கம் திரும்பி கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். ■

## வட கொரிய.....

எனவே "அணுவாயுத வல்லமை கொண்ட வடகொரியாவோடு உலகம் வாழப்பழகிக் கொள்வதே எதிர்கால நல்வழி" என்கிறார் இன்னுமொரு ஆய்வாளர். எது எப்படியிருந்தாலும் இவ்வணுவாயுத விளையாட்டுக்கள் இறுதியில் வினையாக மாறக்கூடாது என்பதே மனித குலத்தின் ஒரே கவலையாகும். ■

**கரும்புலிகள் என நாங்கள் மகிழ்வோடு செல்வோம்!**
**கண்டதும் சிங்களம் கலங்கிடும் வெல்வோம்!**
**கடலினில் சிங்களப் படகினை உடைப்போம்!**
**தரையினில் எதிரியின் பாசறை முடிப்போம்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரித்தானியாவின் வைத்திய உதவி

# யாழ் வைத்தியசாலைக்கு இன்னமும் செல்லவில்லை.

யாழ் போதனா வைத்தியசாலைக்கு பிரித்தானிய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பதினைந்து கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்கள், திட்டமிட்டு சிறீலங்கா அரசாங்கத்தால் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் சிறீலங்காவுக்கு விஜயம் செய்த பிரித்தானியப் பாராளுமன்றக் குழுவுக்கு, இது குறித்து தாம் நடவடிக்கை எடுப்பதாக சிறீலங்கா அரசாங்கம் வாக்குறுதி அளித்தபோதும், இதுவரை இவ்வுபகரணங்களை வடக்கிற்கு அனுப்புவதற்கான எந்த நடவடிக்கைகளிலும் சிறீலங்கா அரசாங்கம் இறங்கவில்லை.

யாழ் போதனா மருத்துவமனையின் உயிர் காப்புப் பணிக்கு, மிக அவசியமாகத் தேவையாக உள்ள இவ்வுபகரணங்கள் தொடர்ந்தும் கொழும்பு மருத்துவ களஞ்சியத்திலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களை மருத்துவ வசதியின்றி வேதனைப்படுத்தி சாகடிப்பதற்காகவும், தமது தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதற்காகவும் சிறீலங்கா இவ்விதம் நடந்து வருகிறது. ■

# விரைவில் குடா நாட்டின் மேல் ...

சிறீலங்காப் படைகள் சுட்டுக் கொன்றுள்ளனர். காரைநகர் வலந்தலை, பலாலி, அராலித்துறை இராணுவ முகாம்களில் இருந்து இரவு பகலாக, செல்களை மக்கள் குடியிருப்புகள் நோக்கி வீசுகின்றனர். இதனால், நூற்றுக்கணக்கான பனைமரங்கள் முறிந்து விழுந்து தலையின்றிக் காட்சியளிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### பலாலி உசாராகிறது

பலாலி விமானத்தளத்தில் அடிக்கடி சிறீலங்கா இராணுவ விமானங்கள் வந்து இறங்குவதும் புறப்படுவதுமாக உள்ளன. பெருமளவில் படையினரும் இராணுவத் தளபாடங்களும் நகர்த்தப்படுவதன் அறிகுறியாக இது கருதப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் குடியிருப்புக்கள் மேல் மிகையொலி விமானங்கள் மூலம் குண்டுவீச்சு நடாத்திய சிறீலங்கா பாதுகாப்பு படைகள், புலிகளின் நவீன ரக சிறுவிமானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையையும், எறிகணைகள் தயாரிக்கும் தொழிற்சாலையையும் தாம் அழித்துவிட்டதாகப் பிரச்சாரம் செய்கின்றன. யாழ் குடாநாட்டில் இத்தாக்குதல்களில், பதினொரு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பதினைந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். திருநெல்வேலியில் பண்ணைக்குப் பின்புறமாக வீசப்பட்ட நான்கு குண்டுகளால் தேங்காய் சண்முகம் என்றழைக்கப்படும் வர்த்தகரும், அவருடைய பேரப்பிள்ளைகளுமாக ஐவர் உயிரிழந்தனர். இருபாலைக் குண்டு வீச்சில் முருகன் கோயில் ஒன்று தரைமட்டமாக்கப்பட்டதுடன், இங்கு அடைக்கலம் தேடி ஓடி வந்த சிறுமி ஒருத்தியும் உடல் சிதறி இறந்துள்ளார். மேலும், இருபாலையில் வேறு மூன்று சிறுவர்களும் மூன்று பொதுமக்களும் குண்டு வீச்சுக்குப் பலியாகியுள்ளனர்.

### சிறீலங்காப் பிரதமர் பலாலிக்கு விஜயம்

சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்ரமசிங்காவும் சிறீலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணவும் பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம் செய்துள்ளனர். மற்றொரு பாரிய இராணுவ நடவடிக்கை குறித்து ஆராய்ந்து தாக்குதலைத் தொடங்குவதற்கு பச்சைக் கொடி காட்டவே இவர்கள் பாலாலிக்குச் சென்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# ஈ.பி.டி.பியும்

எனவே ஈ. பி. டி. பி. யின் மீதான சந்தேகங்களும் தொடரத்தான் போகின்றன. தவிர பிரேமதாசாவின் மறைவோடு எழுச்சி பெற முயலும் சிங்கள உயர் குழாத்தின் பழிவாங்கலில் இருந்து ஈ. பி. டி. பி. தப்பிவிடக் கூடிய சாத்தியங்களும் குறைவாகத்தான் காணப்படுகின்றன. எனினும் ஈழப் போர் தொடரும் வரை ஈ. பி. டி. பி. போன்ற அமைப்புக்களை அவர்கள் கைவிடப் போவதில்லை. ஆனால், பிரேமதாசாவைப் போல 'தம்பி' முறை கொண்டாடுவதற்குமில்லை.

தமிழர் அரசியலில் தனக்கென தனிப்பட்ட பேரம் பேசும் சக்தியேதுமற்ற நிலைதான் ஈ. பி. - டி. பி. யை பிரேமதாசாவின் அரசியலுக்குள் நிபந்தனைகளின்றி விழும் ஒரு நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. இது ஒரு விதத்தில் அவர்கள் சூளைமேட்டில் செய்த தவறை விடவும் பாரதூரமான ஒரு தவறாகவே இருக்கப் போகின்றது. ■

# நீங்காத....

நின்று..... எல்லாவிதமாகவும் படமெடுத்தான்.

"என்னடா புதினமாக இண்டைக்கு எல்லோரோடையும் படமெடுக்கிறாய்?" அக்கா கேட்டாள்.

"ஒண்டுமில்லையக்கா... நானொரு வேலையாய் தூர இடத்திற்குப் போறன்.... திரும்பி வரமாட்டன்...." சிரித்துக்கொண்டு சொன்னான்.

அண்ணனின் குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு,

"உன்ர சித்தப்பா இனி வரமாட்டான்.... இறுக்கிக் கொஞ்சி விடு.... " என்று சொல்லிக் கொஞ்சினான்.

"எங்களுக்கு அது அப்போது விளங்கேல்லை."

வல்வெட்டித்துறையில் கடற்கரை ஓரமாக அவர்களுடைய வீடு இருந்தது. அங்கு பீரங்கிக் கப்பல்களின் தொடர்ச்சியான தாக்குதல் நிகழும். இதன் காரணமாக, கொடிகாமம் சென்று அங்குள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த அம்மா, அப்பாவையும் வினோத் சென்று பார்த்தான். கட்டி அணைத்துக் கொண்டு படமெடுத்தான்.

அம்மா கேட்டபோது, அக்காவுக்குச் சொன்ன அதே காரணத்தை இங்கேயும் சொன்னான். அவர்களாலும் வித்தியாசமாக எதனையும் உணரமுடியவில்லை.

"நேவி அடிக்கிறானெண்டு அலைஞ்சு திரியாதைங்கோ அம்மா.... ஊரில போய் இருங்கோ.... ஒருநாளைக்கு ... எங்கட கடல் எங்களிட்டை வரும்" என்றும் சொல்லிவிட்டுப் போனான்.

அதன் பிறகு ஒருநாள் கூட தங்களுடைய செல்வத்தை அவர்கள் காணவில்லை. இனிமேல் காணவும் மாட்டார்கள்.

இப்போதும் வினோத்தின் அம்மா அவனைத் துயரத்தோடு நினைவுகூருகிறார்.

"சின்னவனா இருக்கேக்கை, என்னை வந்து கட்டிப் பிடிச்சுக் கொண்டு 'அண்ண அக்காமார் எல்லாரும் கலியாணம் செய்து போனதுக்குப் பிறகு அம்மாவையும் அப்பாவையும் நான்தான் பாப்பன்' எண்டு சொல்லுவானடா தம்பி....." ■

# கைது செய்த ....

தங்கியிருக்கும் உற்றார் உறவினரது மனோநிலை பற்றியோ எவ்வித அக்கறையும் காட்டாது இருந்து வருகிறது. இதனால் சிறீலங்காப் படைகளில் இருப்பவர்களின் உற்றார் உறவினர்கள், தங்கள் சொந்தக்காரர்களையும் சிறீலங்கா அரசு, நாளை இந்தக் கதியில்தான் பராமரிக்குமா எனக் கேள்விக் கணை தொடுத்து வருகின்றனர். ■

# தோட்டாவில்......

தற்போது அநுராதபுர இராணுவ முகாமுக்கு வெளியே கட்டையில் ஏற்றப்பட்டுள்ள ரி -85 கவச வாகனங்களின் கொள்வனவுச் சம்பவங்கள் சுவாரசியமானவை.

ஜெனரல் சிறில் ரணதுங்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவி ஏற்ற காலத்தில் இந்த கவச வாகனங்களைக் கொள்வனவு செய்வதில் விசேட கவனம் செலுத்தினார். இவை சீன 'நோரின்கோ' நிறுவனத்தினூடாக கொள்வனவு செய்யப்பட்டன.

ஒரு பக்கத்திற்கு ஐந்து சில்லுகளைக் கொண்ட ரி -85 கனரக வாகனங்களின் தயாரிப்பு 1969 ஆம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டது. எரிபொருளாக டீசல் பயன்படுத்தப்படுவதற்கு வசதியாக பி. எவ். 8 எல். 413 எவ். இயந்திரத் தொகுதி மேலதிகமாகப் பொருத்தப்பட்டது. இதன் நடுப்பகுதியும், மேற்பகுதியும் கீழ்ப்பகுதியுடன் தொடர்பற்றது. இது நீண்ட சதுப்புப் பகுதியில் பயணம் செய்யும் போது நடுப்பகுதிக்குள் நீர் புகுந்துவிடுவதாக இராணுவத்தினர் முறையிடுகின்றனர். மேலும் இதிலுள்ள இயந்திரத் துப்பாக்கிகளுக்கு ரவைகளை நிரப்புவது சிரமமான காரியம் என அவர்கள் கூறுகின்றனர்.

ஜெனரல் சிறில் ரணதுங்க தனது பதவிக் காலத்திற்கு முன்னர் கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தங்களை ரத்து செய்ததோடு, தனது செல்வாக்கைப் பயன்படுத்தி புதிய ஒப்பந்தங்களைச் செய்து கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் 19 ம் திகதியும் இவர் சில கூறு விலைகளை ரத்துச் செய்தார் எனவும் இதில் பொலிசாருக்குத் தேவையான 3000 ரி 56 ரக துப்பாக்கிகளும், இராணுவத்திற்குத் தேவையான நிலக்கண்ணி வெடிகள், கைக்குண்டுகள், கண்ணீர்ப் புகைக்குண்டுகள் (சி. எஸ் இனம்), 17. 6-2 X 39மி. மீ. ரவைகள், இரவு பார்வை வெளிச்சக்குண்டுகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவைகளை பெரிய அளவில் பெற்றுக் கொள்ள கூறுவிலைகள் கோரப்பட்டன. இக்கூறு விலைகளை ரத்து செய்யுமாறு சிறில் ரணதுங்க விசேட அறிவுறுத்தல்களை விடுத்திருந்தார். இவற்றிற்கு பதிலாக சீனாவிலுள்ள 'நோறிங்கோ' நிறுவனத்திடம் அவை கொள்வனவு செய்யப்பட்டன.

'நோறிங்கோ' வின் பிரதிநிதிகள் இலங்கையில் இல்லாமையால் சிறில் ரணதுங்கவையே இந்நிறுவனம் பிரதிநிதியாகக் கடமையாற்றப் பணித்தது எனவும், அவர் தனது அதிகாரத்தை முழு அளவில் பயன்படுத்தி பொலிஸ், இராணுவத்திற்குத் தேவையான பெருமளவு பொருட்களை கொள்வனவு செய்தார் எனவும், இதன் மூலம் பெருமளவு பணத்தைப் பெற்றுக் கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் பொலிசாருக்கென கொள்வனவு செய்யப்பட்ட ரி 84 எச் ரக துப்பாக்கிகளுக்கும், ரி 81 துப்பாக்கிகளுக்கும் மட்டும் 6. 5 கோடி ரூபாவை ஜெனரல் சிறில் ரணதுங்க கமிசனாகப் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு இவர் பாரிய கமிசனைப் பெற்றுக் கொண்டமை குறித்து இராணுவ உயர் அதிகாரிகள் மத்தியில் கசப்பு நிலவிய போதும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் இருந்த அச்சத்தினாலேயே இவை வெளிவரவில்லை.

புக்காரா விமானக் கொள்வனவின்போது இடம்பெற்ற சில சம்பவங்களும் வெளிவந்துள்ளன. சென்ற வருடம் யூலை மாதம் பிரேசில் 'எட்பியர்' நிறுவனத்திடமிருந்து ஆறு 'டுகானே' விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஜனாதிபதியின் செயலாளரின் தொலைபேசிக் கட்டளை மூலம் இரத்துச் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

பின்னர் 1992 செப்டம்பர் 16 ம் திகதி மீண்டும் கூறு விலைகள் கோரப்பட்டன. சில நாட்களில் இனம்தெரியாத சில தொழில்நுட்பவியலாளர்கள் இவ்விமானங்கள் பற்றி குறை கூறியதால் இந் நடவடிக்கை கைவிடப்பட்டது. பின்னர் வேறு விமானங்கள் கொள்வனவு செய்வது தொடர்பான கதைகள் ஆரம்பமாயின. இதுவே 'புக்காரா' தொடர்பான சரித்திரமாகும்.

மிகக் குறுகிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு கோரப்பட்ட கேள்விப் பத்திர முடிவு திகதிளுக்கு இவ்விமானங்கள் உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால், ஆர்ஜன்ரீனாவின் 'புக்காரா' விமானத்தின் உற்பத்தி நிறுத்தப்பட்டுவிட்டது. மேலும் இதன் இயந்திரத் தொகுதி பிரான்சில் தயாரிக்கப்பட்டது. அதன் உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சென்ற ஆண்டு நவம்பர் மாதம் சிறீலங்காவிற்கு வந்த ஆசியான் அமைப்பின் பிரதிநிதிகள் இராணுவ அமைப்புக்கான உதவிகளைத் தாம் பெற்றுத் தருவதாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு உறுதியளித்தனர். இந்த உறுதியின் அடிப்படையில் சிறீலங்காவிற்கு வேண்டிய விமானங்கள், கவச வாகனங்கள், துப்பாக்கிகள், ரவைகள், வெடிமருந்துகள் என்பவற்றை நீண்ட கால கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுக்க பிரேம பின்னர் வேறு எதிர்பார்ப்புகளின் காரணமாக சிறிது காலம் நீடிக்கப்பட்டது. இதன்போது இத்தாலிய 'ஒகஸ்டா பி ஓ' நிறுவனத்தின் 'சியாமா செட்டி' விமானமும், பிரேசில் 'எம்பியர்' நிறுவன 'டுகானே' விமானமும், ருமேனிய 'றோம் டேக்னா' நிறுவனத்தின் 'ஐ. ஏ. ஆர். 99' இன விமானமும் கவனத்தில் எடுக்கப்பட்டன. இறுதியில் புக்காரா குண்டு வீச்சு விமானம் கொள்வனவு செய்ய முடிவெடுக்கப்பட்டது.

விமானக் கொள்வனவு குறித்துக் கோரப்பட்ட கேள்விப் பத்திரங்களில் இரண்டு நிபந்தனைகள் விதிக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. முதலாவது இதற்கான உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்ய வேண்டும். இரண்டாவது அடுத்த பதினைந்து வருடங்க தாசாவினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நீண்ட பேச்சு வார்த்தைகளின் பின்னர் இத் தொகையை வட்டியில்லாக் கடனாக வழங்க அவ்வமைப்பு சம்மதிக்காமையினால் இம்முயற்சி கைவிடப்பட்டது.

ரூபாய்க்கணக்கில் வட்டி செலுத்தத் தயங்கியவர்கள் டொலர்க் கணக்கில் தரகுப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். இதுவா தேச பக்தி? கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, கெரோயின் போதைவஸ்து விற்பவர்களிலும் மோசமான ஐ. தே. க. வியாபாரிகளாலேயே யுத்தம் கையாளப்பட்டு வருகிறது. டி. - பி. விஜயதுங்க இதனை எவ்வாறு சமாளிக்கப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ■

**நன்றி: லக்தீப**
**மொழியாக்கம்: ம. நிமலராஜன்**

# மத குருமாரின் மனிதாபிமானம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகளை, மனிதாபிமான அடிப்படையில் எதுவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு பௌத்த -கத்தோலிக்க குருமார்களைக் கொண்ட குழு ஒன்று, விடுதலைப்புலிகளிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில், தாங்கள் இக்கோரிக்கையை விடுத்திருப்பதாகவும், இதற்கு சாதகமான பதில் விடுதலைப்புலிகளிடமிருந்து கிடைக்குமானால், மூவரடங்கிய தங்கள் குழு, யாழ். செல்லும் எனவும் அதன் செயலாளர் ஒஸ்வால்ட் பேர்த் தெரிவித்துள்ளார்.

"கடந்த மூன்று வருடங்களாக உணவு, மருந்து, எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களின்றி, தமிழ் மக்கள் பட்டினியாலும், கொடிய நோய்களாலும் தினமும் செத்து மடிகையில், இப்பிரச்சினையை சிறீலங்கா அரசிற்கு இடித்துரைக்க மறந்த இச் சக்திகள், சிங்களக் கைதிகளின் விடுதலை குறித்து, மனிதாபிமான வேண்டுகோள் விடுவது வேதனைக்குரியது" என அவதானிகளால் சுட்டிக் காட்டப்படுகின்றுது. கைதிகளின் விடுதலை விவகாரத்தில், தமிழ் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டு, சிறீலங்கா அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதாபிமான நிபந்தனைகளைக் கைவிட்டு, கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு வேண்டுகோள் விடுவது எந்தவகையில் மனிதாபிமானது எனவும் கேள்வி எழுப்பப்படுகின்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு மாலைப் பொழுது

**10-7-1990**

அண்டைக்கு ஊரெல்லாம் ஒரே பரபரப்பாய் இருந்தது. அண்ணைமார் கடற்கரைக்கு வாறதும் போறதுமாய் இருந்தினம்.

இண்டைக்குப் பெடியள் கரும்புலியாய்ப் போய் நேவிக்கப்பலை அடிக்கப் போறாங்களாம், என்று சனங்கள் பரவலாய்க் கதைக்கினம்.

'அப்படியெண்டா நாளைக்குக் காலமை நேவி அடிப்பான்' என்று கொஞ்சச் சனம் ஊரை விட்டுக் கிளம்பிவிட்டினம். நல்லாய் இருண்டதுக்குப் பிறகு ஊர்ச்சனங்கள் கொஞ்சம் கப்பல் அடிக்கிறதைப் பார்ப்பதற்கு என்று கடற்கரைக்குப் போனார்கள். நாங்களும் போனோம். கடலில இருந்து கூப்பிடு தூரம் தான் எங்கட வீடு.

முகபாவத்தில் கவலையும் மகிழ்வும் மாறி மாறி வெளிப்பட, இதை அக்கா சொல்லிக்கொண்டிருந்தா.

அம்மாவும், அப்பாவும் கரைக்கு வரேல்லை. அவை வீட்டு வாசலிலேயே நிண்டுகொண்டினம்.

கரையில நாங்கள் போய்ப் பார்த்துக்கொண்டு நிண்டம். படகுகள் வெளிக்கிட்டு போச்சுது. "நாங்கள் கொஞ்சத் தூரத்திலதான் நிண்டனாங்கள். இருட்டு வேறு ஆட்களை அடையாளம் தெரியேல்லை. படகுகள் வெளிக்கிட்டன. கொஞ்ச நேரத்தில் இருட்டுக்கை மறைஞ்சு போச்சுது. இருட்டைப் போலவே மௌனமும் நிலவியது. நாங்கள் இருட்டுக்கால கடலைப் பார்த்துக் கொண்டு நிண்டம்......

திடீரென பெரிய வெளிச்சமாய் நெருப்புச் சுவாலை கடலுக்கை எரிய நிலம் நடுங்கிற மாதிரி ஒரு வெடிச்சத்தம் கடலுக்கை இருந்து வந்தது. எங்களை அறியாமலேயே கண்ணால கண்ணீர் வந்திட்டுது. மெதுவான குரலில் அம்மா..., ஐயோ என்ற சத்தங்கள் எல்லார் வாயிலிருந்தும் உதிர்ந்தன. 'ஆர் ஆர் பெடியள் போச்சுதுகளோ' எண்டு நாங்கள் சொல்லிக் கவலைப்பட்டம்."

ஒரு கணம்...... நிறுத்தி .... அக்கா தொடர்ந்து சொன்னாள்.

"அடுத்தநாள் நேவி அடிப்பான் எண்டு சனம் எல்லாம் வெளிக்கிட்டதால நாங்களும் கொஞ்சத் தூரத்தில இருக்கிற சொந்தக்காரற்ரை வீட்டுக்குப் போட்டு, ரெண்டு நாள்ல நிலமையை பாத்திட்டு திரும்புவம் எண்டு இரவிரவாய்ப் போனம். போற வழியில 'காம்ப்' ஒண்டுக்கு முன்னால எங்கட தம்பி ஓடித்திரிகிற மோட்டார் சைக்கிள் நிண்டுது.

அம்மா சொன்னா, "உங்க தம்பி நிப்பான் போலக் கிடக்கு ..... ஒருக்கா கேட்டுப்பார் எண்டு....."

தொடர்ந்து அம்மா கதைக்கத் தொடங்கினார்.

"நாங்கள் கூப்பிடக் கூப்பிட ஆள் மாறி ஆள்மாறி வந்து எட்டிப் பாத்திட்டுப் போகினமே தவிர வெளியால ஒருத்தரும் வரேல்லை."

'வினோத்தின்ர அம்மாவடா..... வினோத்தின்ர அம்மாவடா...' என்று மாறி மாறிச் சொல்லிக் கேக்குது. இருட்டுக்கை ஒண்டும் தெரியவும் இல்லை. ஏன் இவங்கள் ஒளியறாங்கள் எண்டு எனக்குள்ள நினைச்சன்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு ஒருத்தர் பதுங்கிப் பதுங்கி வெளியால வந்தார்....

"வினோத் நிக்கிறானேடா தம்பி....?"

**கரும்புலி**
**கப்டன் வினோத்**
**வேலுப்பிள்ளை தியாகராசா**
**வல்வெட்டித்துறை**
**10-07-1990**



"இல்....லை.... யம்மா... நீங்கள் எங்க நிற்பியள் எண்டு சொல்லுங்கோ... நாங்கள் அவரை வரச்சொல்லிவிடுறம்...."

"அந்தா அவன்ர மோட்டச் சயிக்கிள் நிக்குது.... பொய் சொல்லாதேங்கோடா.... எங்க போட்டான்?"

"அது சரியாய்ச் சொல்லேலாது அம்மா நீங்கள் நிக்கிற இடத்தை சொல்லிப் போட்டுப் போங்கோ. காலமை அனுப்பிவிடுறம்....."

"என்னடா இவன் கேட்கிறதுக்கெல்லாம் ஒரு மாதிரியாய் மறுமொழி சொல்லுறான்?.... என்ன கேட்டாலும் நாங்கள் நிக்கிற வீடு எது என்று கேட்கிறான்? என்று எனக்குள்ள நினைச்சுக் கொண்டு நாங்கள் போற வீட்டுப் பாதையைச் சொல்லிப் போட்டுப் போனம்."

சற்று நிறுத்தி பெருமூச்சொன்றை எறிந்துவிட்டு அம்மா ஆறுதலாகத் தொடர்ந்தார்.

"அடுத்த நாள்தான் மோனை தெரிஞ்சுது எங்கட பொடியும் போட்டானென்டு. நிக்கிற வீடு எதெண்டு அந்தப் பெடியன் திரும்பத் திரும்பக் கேட்டது ஏன் என்று அப்பதான் விளங்கிச்சு."

வினோத்தின் அப்பா சொன்னார். "குண்டுச் சத்தம் கடலுக்கை பெரிசாக் கேக்கேக்க, வீட்டு வாசலில நான் குந்தி இருந்தனான்..... ஆரார் பெத்த பிள்ளையளோ எண்டு எனக்குள்ள நினைச்சன். ஆனா அடுத்த நாள்தான் தம்பி தெரிஞ்சுது அதில் நான் பெத்த குஞ்சும் ஒண்டெண்டு." ■

# கரும்புலிகளின் வாழ்வில்....

# "நான் போறன் அண்ணை"

**சி**தம்பரம்,

நிறையப் படிக்க வேண்டும் என்று அவன் சின்னவனாக இருக்கும்போது ஆசைப்படுவான். ஆனால், குடும்பத்தின் கஸ்ரநிலை அவனது கனவுகளைச் சிதைத்தது. நான்காம் வகுப்புக்குப் பிறகு அவன் புத்தகங்களைத் தூக்கியதில்லை.

அவர்கள் குடியிருந்த வீட்டில் தான் ஏழ்மையும் குடியிருந்தது.

வீட்டில் அம்மாவும் அக்காமாரும் செய்கின்ற எள்ளுப்பாகுவையும், பலகாரங்களையும் தோளில் வைத்துக்கொண்டு அவன் தெருவில் இறங்குவான். திரும்பி வந்தபிறகுதான் அவர்கள் வீட்டில் அடுப்பெரியும்.

வளர்ந்தபின் 'றோளரில்' கடலில் மீன்பிடிக்கச் செல்வான். மீன் கிடைக்காதுபோனால் வாட்டத்தோடு திரும்பிவருவான்.

முற்றத்தில் நிற்கும் வேப்ப மரத்தில் ஏறி பூ கொய்து கொண்டு வந்து கொடுத்து,
"இதிலை ஏதாவது செய்யணை.... சாப்பிடுவம்" என்று சொல்வான்.

சிதம்பரம் ஏற்கனவே கலகலப்பானவன். துன்பம் வாட்டுகிற பொழுது, அவனது முகத்தில் அதைக் கண்டு கொள்ள முடியாது. எல்லோரையும் சிரிக்க வைத்து தானும் சிரிப்பான்.

சந்திரனாக இருந்தவன்தான் 19-89 இல் சிதம்பரமானான்.

ஆரம்ப நாட்களில்:

பலாலியில் சிங்கள முப்படைகளின் கூட்டுத் தளத்திற்கு எதிரில், ஒரு பிறண் எல்.எம்.ஜி உடன் காவலிருந்த சிதம்பரத்தின் பணி,

பிற்காலத்தில் ஒரு கடற்புலி வீரனாக, தமிழீழ அலைகளின் மீது தொடர்ந்தது.

இப்போது சிங்களப் படையின் பீரங்கிக் குண்டுகளினால் அரைவாசி இடிந்து நொருங்கிய, அவர்களுக்குச் சொந்தமில்லாத வீடொன்றின் ஒரு பக்க மூலையில், கொடிய நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டு இரு கால்களும் இயலாத நிலையில், கட்டிலில் இருந்து கொண்டு சிதம்பரத்தின் ஏழைத்தாய் தன் வீரமைந்தனை நினைவு கூருகிறாள்....

"அவனொரு இருட்டுக்குப் பயந்த

**கரும்புலி**
**கப்டன் சிதம்பரம்**
**பெரியதம்பி சந்திரன்**
**வல்வெட்டித்துறை**
**20-12-1972 - 04-05-1991**



பெடியன் மோனை... சின்ன வயதில் அவன் மீன்பிடிக்கப் போகேக்கை நான்தான் அவனை படகுவரை கூட்டிக் கொண்டு போய்விடவேணும். ... அப்பதான் போவான்... அவனுக்கு அவ்வளவு பயம்...

.... அந்த மாதிரிப் பயந்து கொண்டு இருந்தவன்தான் தம்பி இயக்கத்துக்குப் போய் போராடி... அந்தக் கடலில்.... இப்ப இவ்வளவு வீரனாய்..."

அந்தத் தாய் கண்ணீரோடு பெருமைப்படுகிறாள்.

தளபதி சூசை அவர்கள், தனது கண்களுக்குள் நிழலாடும் அந்த இறுதி நாட்களைப் பற்றிச் சொல்கிறார்.

"நடுக்கடலில் நிண்டுகொண்டு எங்களுக்குச் சவாலாக இருந்த, சிங்களக் கடற்படையின் 'அபித்தா' என்ற கட்டளைக் கப்பலின் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தோம்.

அதற்காக இரண்டு கரும்புலிகள் தயார் செய்யப்பட்டனர். அதில் ஒன்று ஜெயந்தன். மற்றது இன்னொரு போராளி.

கடைசி நேரத்தில், அந்தப் போராளியை தவிர்க்க முடியாத ஒரு காரணத்தினால் அனுப்ப முடியாமல் போய்விட்டது. என்ன செய்யலாமென்று நாங்கள் யோசித்துக் கொண்டிருந்த போது, அருகில் நின்று நிலைமையைப் புரிந்து கொண்ட சிதம்பரம் தானே முன்வந்து, 'நான் போறன் அண்ணை' என்று சொன்னான். சிதம்பரம் ஏற்கனவே தன்னைக் கரும்புலிகள் அணியில் இணைத்திருந்தான். ஆனாலும் திடீரென ஒரு தேவை ஏற்பட்டபோது தானே விரும்பி முன்வந்து கரும்புலித்தாக்குதலில் இறங்கியதை என்னால் மறக்க முடியாது. ■

மேலே இருந்து, 'சயனைட்' குப்பியை பற்களுக்கிடையில் செருகிக் கொண்டு எதனையும் எதிர் பார்த்து நொடிகளை எண்ணிக் கொண்டிருப்பான் வினோத்.

வினோத்தின் அக்கா சொல்கிறாள்.

"அந்த நேரத்தில் சின்னச் சின்ன கானுகளுக்குள்ள (கொள்கலன்) என்னவோ வீட்டு மூலைகளுக்குள்ள கொண்டு வந்து வைப்பான். 'என்னடா உது' எண்டு கேட்டால், 'அதுக்குள்ள தண்ணியக்கா...' எண்டுட்டுப் போயிடுவான். அவன் போனதுக்குப் பிறகு தூக்கிப் பார்த்தால் அது தண்ணியுமில்லை. இறுக்கமாக பாரமாக கனக்கும்.... எங்களுக்கும் அது எண்னெண்டு தெரியேல்லை.

யாரும் எதிர்பாராத ஓர் அதிகாலைப் பொழுதில் திடீரென வீட்டுக்குள் நுழைந்த இந்தியர்களிடம் வினோத் சந்தர்ப்பவசமாக சிக்கிக் கொள்ள நேர்ந்தது. வீட்டில் எல்லோரும் பார்த்து நிற்கத் துவைத்தெடுத்துவிட்டு அவர்கள் அவனை இழுத்துக் கொண்டுபோய் விட்டார்கள்."

வினோத்தின் அப்பா சொல்கிறார் -

"அவனொரு பயங்கரச் சுழியனடா தம்பி... அவனை இந்தியன் பிடிச்சுக் கொண்டு போய் காம்பில வைச்சிருக்கேக்கை இருக்கிற நாலு லைற்றுக்கையும் கிரனைட் வைச்சிட்டுப் போயிருக்கிறான்...."

இயல்பாகவே மற்றவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களை மகிழ்வில் ஆழ்த்தக்கூடிய சுபாவம் கொண்டிருந்த வினோத்தின் அப்பா தன் பிள்ளை பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"இந்தியனிட்டை பிடிபட்டுக் காங்கேசன்துறைக் காம்பில இருக்கேக்கை நாங்கள் அவனைப் பார்க்கப் போறனாங்கள். அங்க போற நேரமெல்லாம் வீட்டில் தான் வைச்சிட்டுப் போன சாமான்களைப் பற்றித்தான் தம்பி சொல்லுவான்.... எங்களைப் பற்றி இல்லை. அதுகளை பத்திரமா எடுத்துப் பெடியளிட்டை குடுத்துவிடோணும் எண்டிறதிலதான் அவன் எண்ணமெல்லாம் இருக்கும்."

இந்தியப்படை இங்கிருந்து வெளியேற்றப்பட்டபோது ஏனையவர்களுடன் வினோத்தும் விடுவிக்கப்பட்டான்.

'தம்பி வந்திட்டான்' என எல்லோரும் மகிழ்ச்சி அடைந்திருந்தபோது 22ம் நாள் வினோத் திரும்பவும் காணாமல் போய்விட்டான். அதன் பின் அவன் இடைக்கிடை வீட்டுக்கு வந்து போவான். திரும்பவும் சிங்களப் படையுடன் சண்டை ஆரம்பித்து சில நாட்களே நகர்ந்திருந்தன. ஒரு நாள் வினோத் வீட்டிற்கு வந்தான்.

# நீங்காத நினைவுகள்

**1988**ஆம் ஆண்டு காலப்பகுதி....

வினோத்தின் வீட்டை இந்தியப் படைகள் அடிக்கடி சுற்றி வளைத்தனர். அவனைத் தேடி இந்தியச் சிப்பாய்கள் அங்கு பாய்வது வழமையாகிவிட்டது. அந்த ஆபத்தான பொழுதுகளில் வீட்டுக்கூரைக்குள் ஏற்றி பெற்றோரால் அவன் மறைத்துக் காக்கப்படுவான்.

ஒருநாள் .... வீட்டு விறாந்தையில கிடந்த வாங்கில படுத்திருந்தனான் -தற்செயலாய் மேலே பாத்தன். சுவரோட சேர்த்துப் பூட்டியிருக்கிற லைட்டின்ர கோப்பைக்கு மேலால சாதுவா கறுப்பா என்னவோ தெரிஞ்சுது.... கதிரையைக் கொண்டு போய் வைச்சிட்டு ஏறி எடுத்தனடா மோனே. அது ஒரு கிரனைட். அப்படியே நிண்டு எட்டிப்பாத்தன். பக்கத்துப் பக்கத்த

வரிப்புலிச் சீருடையில், 'மிலிற்றறி' சப்பாத்துப் போட்டு ஒரு கையில் துப்பாக்கியுடன் மறுகையில் புகைப்படக் கருவி ஒன்றையும் கொண்டு வந்தான். வீட்டில் எல்லோருடனும் சேர்ந்து படம் எடுத்தான். அக்காமாரைக் கட்டிப் பிடித்தபடி.... அக்காமாரின் குழந்தைகளைத் தோளில் வைத்தபடி.... ஆச்சியோடு

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளையாட்டுத் துவக்குடனும்
வீரத்துடிப்புடனும்
எதிரியை
அழிப்பதாய் அவர்கள்
படை எடுக்கிறார்கள்.
வானத்தில் -
ஏதும் கறுப்புகளைக்
கண்டு விட்டால்
பொம்பர்
வருவதாய்
பதுங்கிச் சுடுகிறார்கள்
ஓ.. .. .. .
அந்தச் சிறுவர்கள்.



# அந்தச் சின்னஞ்சிறு விழிகளுக்குள்...



நாளை
எதிரியைக்
களத்திலாட
இன்று
ஒத்திகை
செய்கிறார்கள்.
உனக்குத் தெரிகிறதா.. .. .. ?
அந்தச் சின்னக்
கரங்களால்
அடிமை எரிவதை,
உனக்குத் தெரிகிறதா....?
அந்தச் சின்னஞ்சிறு
விழிகளுக்குள்
ஒரு நாடு தெரிவதை.

□ மா.மயிலன்
தமிழீழம்

U.T.O
211 Katherine Rd, London E6 1BU, UK
Tel/Fax: 081-470 8593

←←←←

T.C.G
P.O.BOX 340251
5270 GUMMERSBACH - 34
GERMANY

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
T: 435 81142 F: 435 81191

W.T.C.C
BEDER Str - 101, 8002 ZURICH
SWITZERLAND
T/F : 01/2810852, 077/816609

T.C.C
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170, AUSTRALIA
T: 03-457 6347, F:03-5618224

↑↑ புதிய முகவரி ↑↑

T.C.C
P.O.BOX 1699 VIKA
0110 OSLO - 1, NORWAY
T: 02-191260 F: 02-190114

L.T.T.E
P.O.BOX47, 7600 STRUER
DENMARK
Tel / Fax : 97-841231

T.C.C
Via MARIANO STABILE - 34
90139 PALERMO, ITALY
Tel / Fax: 091-611 3179

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963

Printed by Observer Group Newspapers,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்